# செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி

தொகுப்பாசிரியர்
**பழநியப்பா சுப்பிரமணியன்**



# செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி

(மரபுரீதியிலான தகவல்களுடன்)

---

*தொகுப்பாசிரியர்:* **பழநியப்பா சுப்பிரமணியன்**

---

**தமிழினி**

செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி

•

பழநியப்பா சுப்பிரமணியன்

தமிழினி

67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14

முதல் பதிப்பு : நவம்பர், 2006

ISBN : 81 - 87641 - 79 - 7

அச்சாக்கம் : மணி ஆப்செட், சென்னை - 5

விலை ரூ. 55

**காணிக்கை :**

நாவலாசிரியர் ப சிங்காரத்தின்

நினைவிற்கு

பொருளடக்கம்


பதிவுக்காலம் - பெருமாள் முருகன்

முன்னுரையாய் சில வார்த்தைகள்

| | |
|---|---|
| 1. புலம் பெயர்தல் - சில தொன்மங்கள் | 14 |
| 2. வல்லம்பர் வரலாறு | 17 |
| 3. அகராதி | 19 |
| 4. உணவுவகை சொல்லகராதி - விமர்சனம் | 62 |
| 5 சில சொல் வழக்குகள் | 72 |
| 6 கீழ்வாய் இலக்கம் | 75 |
| 7 வழக்கில் இல்லாத சுபநிகழ்ச்சிகள் | 77 |
| 8. கோயில் திருப்பணி - விமர்சனம் | 78 |

பின் இணைப்பு

1 புயலிலே ஒரு தோணி - நாவலின் சில பகுதிகள்

2 கடலுக்கு அப்பால் - நாவலின் சில பகுதிகள்

3 இணைப்புரை - கவிஞர் செல்ல கணபதி

4. தமிழில் வட்டார மொழிகள் - கமில் ஸ்வெலபில்

## வட்டார வழக்கு அகராதிகள்: பதிவுக்காலம்

- பெருமாள் முருகன்

கி. ராஜநாராயணனின் 'வட்டார வழக்குச் சொல்லகராதி' 1981 இல் வெளியானபோது அதற்கு விற்பனை மதிப்பு அவ்வளவாக இல்லை. கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்கும் மேலாக அது விற்பனையில் இருந்தது. அப்போது அவ்வகராதிக்குப் பெருமளவில் ஏற்பு இருந்ததாகவும் சொல்லமுடியாது. மொழியியல், அகராதியியல் பற்றிய கவனம் பரவலாக உண்டாகியிருந்த காலம். அவற்றிற்கான துறைகள் பல்கலைக் கழகங்களில் அமைக்கப் பெற்ற சூழல். ஒரு கொண்டாட்ட நிகழ்வாக கி.ராவின் அகராதி வரவு அமைந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. 1988 இல் கி.ரா. அகராதியை மையமிட்டுத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றதாகவும் அதில் நான்கு கட்டுரைகள் வாசிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அக்கருத்தரங்கில் கலந்துகொண்ட கி.ரா. கருத்து எதுவுமே கூறாமல் சென்றுவிட்டார் என்று ஆதங்கத்தோடு சு. ராஜாராம் இப்போது எழுதுகிறார். (நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி, முன்னுரை)

வழிகாட்டுதல் இன்றி மிகுந்த சிரமத்தோடு தயாரிக்கப்பட்ட அவ்வகராதி, கருத்தரங்க உரையாளர்களால் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்று தெரியவில்லை. கி.ரா. அகராதியை மேம்படுத்த, அவரோடு இணைந்து மொழியியல், அகராதியியல் அறிஞர்கள் செயல்படுவதற்கான திட்டம் எதுவும் முன்வைக்கப்பட்டதா, அப்படி ஒரு திட்டத்தை உருவாக்க ஆலோசனையாவது நடைபெற்றதா என்பதும் தெரியவில்லை. இத்தகைய வேலைகளில் ஈடுபடுவோர்க்கு ஏற்படும் பொருளாதாரச் சுமையைப் பகிர்ந்துகொள்ளவோ உதவியாளர் இல்லாமை, ஆலோசனை வழங்குநர் இன்மை முதலியவற்றை நிவர்த்தி செய்யவோ நம் நிறுவனங்கள், நிறுவனம் சார்ந்தோரிடையே எத்தகைய திட்டங்களும் எப்போதும் இருந்ததில்லை. கிடைக்கும் நிதியுதவிகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளப் போட்டி போடுவதைத் தவிர உருப்படியான செயல் திட்டம் இல்லை.

நிறுவனங்களின் நிலையில் மாற்றம் எதுவும் வரவில்லை எனினும் காலச்சூழல் மாறியிருக்கிறது. கி. ராவுக்குப் பின் இருபதாண்டுகள் கழித்துக் 'கொங்கு வட்டாரச் சொல்லகராதி'யை நான் வெளியிட்டேன்.

ஓராண்டுக்குள் படிகள் விற்றுத் தீர்ந்தன. நூலக ஆணைக்கு முழுமையான அளவில் படிகள் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது. குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மதிப்புரைகள் இதழ்களில் வெளியாயின. வாசகர்களிடையேயும் அறிஞர்களிடையேயும் நல்ல வரவேற்பு கிடைத்தது. கொங்கு வட்டாரப் புதினங்களை வாசிப்போர் அகராதியைப் பயன்படுத்திப் பலன்பெற்ற செய்திகள் எனக்கு வந்தன. பார்வை நூலாகவும் தரவு நூலாகவும் அதன் பயன்பாடு மிகுதிப்பட்டது. கி.ரா.அகராதி விற்பனை ஆகவில்லை என்பதால் பதிப்பகங்கள் கைவிரித்துவிட்ட நிலையில் அச்சத்துடன் வெளியிட்ட இந்த அகராதி, எதிர்பாராத வகையில் கவனம் பெற்றது.

இந்தக் கவனத்தின்பின் வட்டார வழக்கு அகராதிகளின் நல்ல காலம் உருவாயிற்று என்று சொல்லலாம். இப்போது நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி (அ.கா.பெருமாள்), நெல்லை வட்டார வழக்குச் சொல்லகராதி(ப.முருகையா) ஆகியவை வெளியாகி உள்ளன. கொங்குப் பகுதிக்கே கொங்கு நாட்டுத் தமிழ் (புலவர் மணியன்), கோவை மாவட்ட வழக்குச் சொல் அகராதி (ச.மகாலட்சுமி) ஆகியவை உருவாகியுள்ளன. வேறு சில பகுதிகளுக்கான அகராதிகளும் தயாராகிவரும் செய்திகள் கிடைக்கின்றன.

இவ்வகை அகராதிகள் அனைத்தும் தனிநபர்களின் ஆர்வத்தையும் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. ஆகவே இவற்றில் பல குறைபாடுகள் இருப்பது இயல்பு. பெரும் அறிஞர் குழுவைக் கொண்டு பல்லாண்டுகள் உழைத்து மிகுந்த பொருட்செலவில் உருவான தமிழ் லெக்சிகன் போன்றவற்றிலேயே பல குறைபாடுகள் உள்ளன என்னும்போது தனிநபரின் செயல்பாட்டில் வடிவம் பெறும் அகராதிகளில் குறைபாடுகள் இருப்பது இயல்பு.

அகராதி ஆசிரியர் தன் புழங்கு எல்லைக்கு உட்பட்ட சொற்களையே சேகரிக்க முடியும். பிறர் உதவினாலும் அவற்றின் அளவு வெகு குறைவாகவே அமையும். ஆகவே கள ஆய்வின் போதாமை இவ்வகராதிகளுக்கு இருக்கும். மக்களின் வாழ்க்கைமுறை முற்றாக மாறிவிட்ட சூழலில் பழைய சொற்களை நினைவுகூறும் நபர்களைக் கண்டடைய முடியாமலே போகலாம். மண்பாண்டங்களே முழுமையாகப் பயன்பாட்டில் இருந்த காலத்தில், இறைச்சி சமைப்பதற்கெனத் தனிப்பாண்டம் கொங்குப் பகுதியில் வைத்திருந்தனர். அதனை வீட்டுக்கு வெளியே பாதுகாப்பான இடத்தில் கவிழ்த்து வைத்துவிடுவர். தேவைப்படும் நாளன்று மட்டும் எடுத்துக் கழுவிப் பயன்படுத்துவர். அதற்குப் 'பெராலச்சட்டி' என்று பெயர். இன்று இந்தப் பழக்கம் இல்லை, மண்பாண்டமும் இல்லை. சொல் வழக்கு வயதான சிலரின் நினைவில் மட்டுமிருக்கிறது. இத்தகையவற்றை பொருளாதாரப் பின்புலம் இல்லாத தனிநபரின் களஆய்வு மூலம் திரட்டுதல் அரிது. வட்டாரப் புதினங்கள்

உள்ளிட்ட எழுத்துச் சான்றுகளை மிகுதியும் மையமிட்டதாக இவ்வக ராதிகள் அமைவதன் காரணம் அதுதான்.

வட்டாரச் சொல்லகராதிகளில் பொதுச்சொற்கள் நிறைய இடம் பெறுகின்றன என்பதும் ஒரு குறை. ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்து வரும் பொதுஅகராதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தம் அகராதியின் சொல்பதிவுகளைத் தேர்வு செய்துகொள்ளும் பயிற்சியும் அதற்கான வழிகாட்டுதல்களும் இல்லாமை முக்கியமான காரணம். பேச்சு வழக்கு, வாட்டார வழக்கு இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் பிடிபடாமையும் காரணம். பொதுச்சொல், உச்சரிப்பில் முற்றிலுமாகத் திரிந்து வேறு சொல் போலத் தோற்றம் கொண்டிருந்தால் மட்டும் அதனை வட்டார வழக்காகக் கொள்ளலாம். மற்றபடி பொதுச்சொல்லின் பேச்சு வடிவம் வட்டார வழக்காகாது. இத்தகைய நுட்பங்கள் இவ்வகை அகராதி ஆசிரியர்களுக்கு இன்னும் வாய்க்கவில்லை.

இந்த அகராதிகள் அனைத்தும் ஒரே வகையான நெறிமுறைகளைப் பின்பற்றி அமைக்கப்பெறவில்லை என்பது முக்கியமான குறைபாடு. தலைச்சொல் வடிவங்களைத் தேர்வு செய்வதிலேயே பல்வேறு குழப் பங்கள். ஒவ்வொரு அகராதி ஆசிரியரும் அவரவர் மனதுக்குட்பட்ட முறையில் தேர்வு செய்து கொண்டுள்ளனர். பொது நெறிமுறை அமைய வில்லை. இது பயன்பாட்டாளருக்குச் சிரமம் தரக்கூடியது. ஒவ்வோர் அகராதியைப் பயன்படுத்துவதற்கும் ஒவ்வொரு நெறிமுறையை அறிந்து கொள்ள வேண்டும் என்பது தேவையற்ற பளுவைச் சுமத்துவதுதான்.

இப்படி இவ்வகை அகராதிகளில் ஏராளமான குறைபாடுகள் உள்ளன. குறைபாடுகள் அகராதிகளின் பெருக்கத்தைத் தடுத்துவிடா. இந்தத் துறையைப் பொறுத்தவரை அகராதிகளின் பெருக்கம் மிகமிகத் தான் குறைபாடுகள் குறைந்துபோகும். ஒப்பீடுகள் உருவாக செம்மைப் படும். வாசகப் பயன்பாடு இவை எப்படி அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஆற்றலாக விளங்கும். ஆகவே குறைபாடுகளுடன் இவ் வகராதிகளின் பெருக்கம் ஏற்படுவது நல்லது.

சொற்கள் பதிவுபெறுகின்றன என்பது முக்கியம். வட்டார வழக்கு அகராதிகளின் இப்போதைய இயல்பைப் 'பதிவுக்காலம்' என்று வரை யறுக்கலாம். சமூக வாழ்கையின் பழைய மாதிரி முடிந்துபோய்க் கொண்டிருக்கிறது. முற்றிலும் வேறான வாழ்க்கை முறை எல்லா மட்டத் திலும் வியாபிக்கிறது. இந்த அந்திமத் தருணத்தை விட்டுவிட்டால் வட்டாரச் சொற்கள் என்னும் பெரும் சொத்தை இழக்க நேரும். எல்லா வகைக் குறைகளோடும் இந்த அகராதிகளின் சொல்பதிவுகளை வரவேற்க வேண்டும். பின்னர் பொறுமையாகத் தூசு துடைத்து மாசகற்றி நாம் வேண்டுமிடத்தில் வைத்துக்கொள்ளலாம்.

இவ்வகை அகராதி வேலைகளில் ஈடுபடுவோர் பெரும்பாலும்

தம் வட்டாரத்தின்மீது ஈர்ப்பு கொண்ட படைப்பாளிகளாகவும் நாட்டுப் புறவியல் ஆய்வுகளில் கவனம் கொண்டவர்களாகவும் உள்ளனர் என்பதையும் நாம் கருதிப் பார்க்கவேண்டும். சுய உந்துதல் காரணமாக இவ்வேலையை அவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். யாராவது பாடு பட்டு உருவாக்கி வைத்த மூலத்தைப் பற்றிப் பேசியே பொழுதை ஓட்டு வோர், சுயமாக ஒன்றையும் உருவாக்குவதில்லை. கடனுக்காக, ஊதியத் திற்காக, வருமானம் தரும் ஆய்வுத்திட்டத்திற்காக இந்தப் பணியை எடுத்துக்கொள்வோரைவிடவும் ஆத்மார்த்தமாகத் தம்மை ஒப்படைத்துச் செய்வோர் சுய ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள்தான்.

வட்டார அகராதிகள் உருவானால் மட்டும் போதாது. அவற்றை மக்களின் அன்றாடப் பயன்பாட்டுக்கானதாக மாற்ற வேண்டும். அகராதி கள் 'நோக்கு நூல்கள்' என்னும் கௌரவத்தைப் பெறுபவைதான் எனினும் வட்டார அகராதிகள் சமகால இலக்கியத்தோடு தொடர்பு கொண்டவை என்பது முக்கியம். சமகால இலக்கியத்தில் வாசகர் சங்கடத்திற்குள்ளாகும் இடம், வாசிப்பைத் சற்றே முடக்கும் பகுதி என்று சொன்னால் அது வட்டார வழக்குச் சொற்களாகவே இருக்கும். ஆர்.சண்முகசுந்தரத்தின் கொங்கு வழக்கு நடை, பிற பகுதிக்காரர்களுக்குப் புரிவதில் சிரமம் உண்டு. சிறு உதாரணம்:

*நாச்சக்காளுக்கு 'நிறை' மாதம். வழக்கமாகச் சாரதாம்பாளிடம் 'காட்டுக் கொட்டை' வாங்கி விளக்கெண்ணெய் ஊற்றுவா. கடைகண்ணி களில் நல்ல விளக்கெண்ணெயா கிடைக்கிறது. சந்தை சாரியில் கொட்டைமுத்து வாங்கினால் 'தும்பு துசுறு' இருக்கும். (விரிந்த மலர், ப.78)*

மூன்று தொடர்கள் உடைய இப்பகுதியில், நிறைமாதம், காட்டுக் கொட்டை, கடைகண்ணி, சந்தைசாரி, கொட்டைமுத்து, தும்பு துசுறு ஆகிய வட்டார வழக்குகள். பெயர்களும் இணைச்சொற்களும் நிறைந்த இந்த எழுத்து, பிற பகுதி வாசகர்களுக்குத் தடுமாற்றம் ஏற்படுத்தும். கொங்குப் பகுதியிலேயே நகர்ப்புற வாசகர்களுக்கு அவரது தொனியை விளங்கிக்கொள்வது கஷ்டம். இந்தச் சந்தர்ப்பத்தில் வட்டார வழக்கு அகராதி துணைபுரியும். ஆர்.சண்முகசுந்தரம் மட்டுமல்ல, தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளை முழுமையாக உள்வாங்கிக்கொள்ள அந்தந்த வட்டார அகராதிகள் பயன்படும்.

புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' கதை, கணவனுக்குப் பால் கஞ்சி வேண்டும் என்பதற்காகச் சோரம் போகும் பெண்ணைப் பற்றியது. 'பால்கஞ்சி' என்றால் 'பால் கலந்து செய்யப்படும் கஞ்சி' என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். நெல்லை மாவட்ட நண்பர் ஒருவர், அரிசிக்கஞ்சிதான் அது என்று விளக்கம் சொன்னார். சாதாரண அரிசிக் கஞ்சிக்காகச் சோரம் போக வேண்டியிருக்கிறது என்பது, கதை வலுவான

இன்னொரு பரிமாணத்திற்குச் செல்ல வாய்ப்பளிக்கிறது. 'பால்கஞ்சி' என்பதற்கான பொருள் தெரியாதபோது இருந்த வாசிப்புக்கும் பொருள் தெரிந்தபின்னான வாசிப்புக்கும் வேறுபாடு உள்ளது. அகராதி இருந் திருப்பின் இந்தப் பிரச்சினை எளிதாகத் தீர்ந்திருக்கும்.

வட்டார வழக்கு அகராதிகள், தமிழுக்குச் சொல் எண்ணிக்கையை மிகுதிப்படுத்துவதற்காக; மொழியியல், அகராதியியல் அறிஞர்கள் சொல்லாய்வு செய்வதற்காக; நூலகங்களில் 'நோக்கு நூல்கள்' வரிசையில் யார் கண்ணுக்கும் படாமல் வைப்பதற்காக; என்பவற்றை யெல்லாம் தாண்டிச் சமகால இலக்கிய வாசகர்களின் அன்றாடப் பயன்பாட்டுக்காக என்னும் அம்சம் தலைதூக்கி வர வேண்டும். இலக்கிய வாசிப்போடு அகராதிகளை இணைக்கச் சில முயற்சிகளைச் செய்வது அவசியம். நவீன இலக்கிய வாசிப்பு, பொது அரங்கில் ஒரு நிகழ்வாக நடைபெறும் தன்மை இங்கில்லை. நவீன இலக்கியக் கூட்டங் களை வாசிப்பு அரங்கங்களாக ஏற்பாடு செய்யலாம். அப்போது அகராதிகளின் பங்கையும் உணரலாம். இவையெல்லாம் சாத்தியமாகாத கனவுகள் அல்ல. சற்றே முயற்சி வேண்டும். அவ்வளவுதான்.

★★★

சுப. சண்முகம் வெளியிட்ட 'செட்டி நாட்டில் தமிழ் வழக்கு' என்னும் சிறுநூல் 1990 இல் வெளியாயிற்று. இப்போது பழநியப்பா சுப்பிரமணியத்தின் 'செட்டி நாட்டு வட்டார வழக்கு அகராதி' உருவாகி யுள்ளது. சுப. சண்முகத்தின் அறுபதாண்டு நிறைவு விழாவை ஒட்டி வெளியிடப்பெற்ற அவர் அகராதி பழமொழிகள், இணைச்சொற்கள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது. பழநியப்பா சுப்பிரமணியத்தின் அகராதி, தற்போது இன்னும் கூடுதலான சொற்களையும் வேறு சில அரிய பதிவுகளையும் கொண்டிருக்கிறது. கீழ்வாய் இலக்கம், வழக்கில் இல்லாத சுபநிகழ்ச்சிகள் போன்றவை அவை. வாசகர் பார்வைக்காகச் சில பின்னிணைப்புகளையும் கொண்டி ருக்கிறது.

அடிக்கட்டை: வங்கிச் சலானின் கவுண்ட்டர் ஃபாயில். ரசீது தருபவர் ரசீதுப் புத்தகத்தில் வைத்துக்கொள்ளும் பகுதி.

சுப்பிரமணியன், அச்சொல் நவீன வழக்கில் ஒரு பொருளைக் கூடுதலாகப் பெற்றிருப்பதைப் பதிவு செய்கிறார். Counterfoil என்பதற்கு 'அடிக்கட்டை' மிகப்பொருத்தமான சொல்லாக இருக்கிறது. ஏற்கனவே வழக்கில் உள்ள ஒருசொல் புதுவாழ்வு பெறுவது மட்டுமல்ல, மொழிக்கு ஒரு கொடையையும் வழங்குகிறது. வட்டார வழக்கின் மகத் துவம் இதுதான். சொற்கள் பதிவு பெறுவதன் வழியாக இப்படிப் பல சொற்களை நவீனமாக்க முடியும். மேலும்,

புட்டாமா - முகத்திற்குப் போடும் பவுடர்

என்று இவ்வகராதி ஒருசொல்லைத் தருகிறது. 'பவுடர்' என்பதற்கு இப்படி ஒருசொல் நம்மிடமே இருக்கிறது என்பதை அறிய இவ்வகராதி பயன்படுகிறது. வட்டார வழக்கு அகராதிகளின் பயன்பாடு மிகவும் விரிவானது.

பழநியப்பா சுப்பிரமணியன், அடுத்த பதிப்புகளில் அகராதிப் பதிவு முறைகளை இன்னும் கூடுதலாகப் பின்பற்றலாம். பொதுச் சொற்கள் இவையெனக் கண்டறிந்து நீக்கக்கூடும். பொருள் விளக்கம் செறிவாகலாம். ஆதாரங்களின் பரப்பு விரிவாகலாம். எல்லாம் சரிவர நடந்தபின்னரே அகராதி வெளியாக வேண்டும் என்றால் எப்போதும் அது சாத்தியமில்லை. ஆகவே இப்போதைய பதிவு போற்றப்பட வேண்டியது என்பதில் ஐயமில்லை. இந்தப் பதிவுகளைப் பார்வையிட்டு அகராதியியல், மொழியியல் வல்லுநர்கள் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் முயற்சிகளைச் செய்யட்டும்.

பழநியப்பா சுப்பிரமணியத்தைச் சிறுகதையாளராகத் 'தினமணி கதிர்' மூலம் முதலில் அறிந்தேன். 'இரண்டு சுந்தரங்களும் வெளியான வினாத்தாளும்' என்னும் சிறுகதை என் நினைவில் பதிந்திருக்கும் ஒன்று. பால்யகால நட்பில் முதுமைக்காலத்தில் உண்டாகும் பிளவைப் பற்றிய அக்கதை, மனித மனோபாவங்கள் பற்றிய பல திறப்புகளைத் தரக்கூடியது. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்க்கக்கூடிய ஆற்றல் உடையவர் அவர் என்பது நான் தற்போது அறிந்து கொண்ட செய்தி. அவர் மொழிபெயர்த்த 'ஜென் கதைகள் - கவிதைகள்' நூல் சரளமாகப் படிக்கும் நடை கொண்டிருக்கிறது.

பழநியப்பா சுப்பிரமணியன், 'இராவண காவியம்' இயற்றிய புலவர் குழந்தை அவர்களோடு சில மாதங்கள் பணியாற்றியுள்ளார் என்பதும் கொங்குப் பகுதியில் அவர் இருந்தபோது வட்டார வழக்கு தொடர்பான உணர்வை உண்டாக்கிய நிகழ்வுகள் நடந்திருக்கின்றன என்பதும் குறிப்பிட வேண்டியவை. அவருள் ஊறிய எண்ணம், வெகுகாலம் கழித்து அகராதியாகப் பரிணாமம் பெற்றிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

## முன்னுரையாகச் சில வார்த்தைகள்

**புத்தகத்தின் தலைப்பு பற்றி:** சிவகங்கை மாவட்ட வட்டார வழக்கும் செட்டிநாடு வட்டார வழக்கும் ஏறக்குறைய ஒன்றுதான். வேறுபாடுகள் மிகக் குறைவு. இருந்தாலும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள உணவு வகைகள், சமையல் முறை, கோவில் நிர்வாகம் கணக்கு இயல் தொடர்பான சொற்கள், உறவினர்களை அழைக்கும் சொற்கள் செட்டி நாட்டிற்கே உரியவை. செட்டிநாடு என்பது சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி, திருப்பத்தூர், திருவாடானை பகுதிகளையும் புதுக் கோட்டை மாவட்டத்தின் திருமயம், பொன்னமராவதி, அறந்தாங்கி பகுதிகளையும் உள்ளடக்கியது. இப்பகுதிகளில் எல்லா சாதிமத, மக்களும் கையாளும் வட்டாரச் சொற்கள்தான் இந்த அகராதியில் இடம் பெற்றுள்ளன. ஒரு சாதிக்கு என்று பிரத்தியேகச் சொற்கள் மிகக்குறைவே. ஆனால் வட்டார மரபுரீதியிலான தகவல்கள் பெரும்பாலும் நகரத்தார் சமூகத்தைச் சார்ந்தவை.

தொகுப்பில் உள்ள சில சொற்களை பொது அகராதிகளில் காண லாம். மற்ற பகுதியில் எழுத்தில் மட்டுமே கையாளப்படும் பெட்டகம், அசதி, அக்கப்போர், உக்கிராணம் போன்ற சொற்கள் இங்கு தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தப்படுகின்றன. பாண்டிய நாட்டிற்குப் பொது வானவை - கண்மாய், ஊருணி. கரிசல் எழுத்தாளர்களில் பூமணியின் கதை மாந்தர்களின் உரையாடலும் கவிஞர் வைரமுத்துவின் 'கருவாச்சியின் காவியம்' பேச்சுநடையும் செட்டிநாடு சொல்வழக்கை ஒத்திருக்கின்றன. ஒரு காலத்தில் பாண்டிய நாடு முழுவதும் ஒத்த பேச்சு வழக்கு இருந்திருக்கக்கூடும்.

தமிழகத்தின் எல்லா வட்டார வழக்குகளும் இன்னும் முப்பது, நாற்பது வருடங்களில் வழக்கிழந்துவிடுமெனத் தோன்றுகிறது. புதிய சொற்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. செட்டிநாடு வட்டார வழக்குச் சொற்களை முப்பது வயதிற்குக் குறைவானவர்கள் உபயோகப் படுத்துவதில்லை. தமிழர்கள் வடநாட்டிற்கும் மேல்நாட்டிற்கும் கீழை நாடுகளுக்கும் பணிநிமித்தம் செல்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டக் குடும்பம் காரைக்குடியில் தங்கும்போது அவர்கள் குழந்தைகள் உள்ளூர்க் குழந்தைகளுடன் பழகி தாங்கள் சார்ந்த வட்டாரச் சொற்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். மக்கள் நகர்வு, பரந்த கல்வி காரணமாக

தமிழகம் முழுவதும் ஒரேவிதமான பேச்சுவழக்கு உருவாகும் சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் சிறிது சிறிதாக வழக்கிழந்து வரும் வட்டார வழக்குச் சொற்களைப் பதிவு செய்ய வேண்டியது அவசிய மாகிறது. இந்த நூல் அப்படியொரு முயற்சியின் பாற்பட்டதே.

மலேசியா, சிங்கப்பூர் தமிழர்கள் பயன்படுத்தும் பிரத்தியேகச் சொற்கள் செட்டிநாட்டில் காதில் விழக் கேட்கலாம். அவற்றில் சில அகராதியில் இடம் பெறுகின்றன.

ஒவ்வொரு வட்டார வழக்கிற்கும் தனிப்பட்ட உச்சரிப்பு தோரணை, ராகம், சொற்களில் அழுத்தம், பேசும் முறை(Accent, Intonation) இருக்கின்றன. அதை எழுத்தில் கொண்டுவர இயலாது. இந்தப் பகுதி மக்கள் 'சாரிச்சுப் பார்க்கணும்' என்பார்கள். வி என்ற முதல் எழுத்து உச்சரிக்கப்படாது. இந்த விசித்திரத்தை நான் திருச்சி சென்றபிறகு தான் தெரிந்துகொண்டேன்.

என் தாய் தேங்காய் எண்ணையை தேங்காநெய் என்றுதான் கூறுவார். பேரன், பேத்திகள் கேலி செய்து அவரையும் தேங்காய் எண்ணை என்று சொல்ல வைத்து விட்டார்கள்.

ஒரு பகுதிப் பேச்சுவழக்கு இன்னொரு பகுதியில் புரிந்து கொள்ளப்படாது சிக்கல்கள் ஏற்படுவது உண்டு. ஐம்பது ஆண்டுகள் முன்பு ஈரோடு மாவட்டம் பவானியில் ஒரு தேநீர்க் கடையில் சாப் பிட்டுக் கொண்டிருந்தேன். கடைக்காரரின் குழந்தை வேகமாகத் தவழ்ந்து போய் வென்னீர் கொதிக்கும் பாத்திரத்தைத் (வேம்பா) தொடமுயன்றது. நான் அவசரத்தில் வட்டார வழக்கைக் கையாண்டேன். அவருக்குப் புரியவில்லை.

'பிள்ளை வேம்பாவைத் தொடப் போகுது, தூக்கு'என்றேன். அவர் புரியாமல் விழிக்கவே நான் விரைந்து வந்து இடதுகையால் குழந்தையைத் தூக்கினேன். வேம்பா அவர் அறியாத சொல். பாய்லர் என்று சொல்லித்தான் பழக்கம். கொங்கு வட்டாரத்தில் பெண்குழந் தையைத்தான் பிள்ளை (பொட்டப் பிள்ளை) என்பார்கள். 'எனக்கு ஒண்ணும் விளங்கலிங்க. பசங்களைப் போய் பிள்ளைங்கிறீங்க! வேம் பான்னா என்ன?' என்று கேட்டார். பிராமணர்கள் ஆண்குழந்தையைப் பிள்ளை என்பார்கள். தென்தமிழ்நாட்டில் பிள்ளை என்பது இரு பாலரை யும் குறிக்கும்.

பெண்ணின் சூதகத்தைத் தொடர்பு படுத்தும் வசைச்சொற்கள் உண்டு. நாகரிகம் கருதி அவற்றை அகராதியில் சேர்க்கவில்லை.

மேல் நாடுகள் போல் இங்கும் கல்லூரி மாணவர்கள் சில சொற் களை உருவாக்கியிருக்கிறார்கள். மச்சி, ட்யூப்லைட், கடலை போடுவது.

தமிழின் முக்கியமான நாவலான ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி'யை சிவகங்கை மாவட்ட ஜனரஞ்சக பத்திரிகை வாசகர்களில்

பெரும்பாலோர் அறிந்திருக்கவில்லை. சிற்றிதழ் வாசகர்கள் அனைவரும் அவரை அறிவார்கள். அந்தப் படைப்பின் சில பகுதிகள் நூலின் பின் இணைப்பாகத் தரப்பட்டிருக்கின்றன. செட்டிநாட்டவரல்லாத ஒருவர் அறுபது ஆண்டுகள் முன்பு வாழ்ந்த செட்டிநாட்டுமக்களின் பழக்க வழக்கங்கள், குண இயல்புகள் பற்றி விருப்பு வெறுப்பின்றி அதே சமயம் பரிவோடு பதிவு செய்திருக்கிறார்.

செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல் அகராதித் தொகுப்பில் முன்னோடிகளான சோமலெ, நாட்டரசன் கோட்டை சுப.சண்முகம் ஆகியோரை இந்த நேரத்தில் நினைவு கூர வேண்டும். வேறு சிலரும் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கலாம். எனக்குத் தெரியவில்லை. அனைத் துத் துறைகளையும் உள்ளடக்கிய வட்டார வழக்கு அகராதி ஒன்றின் அவசியம் கருதி இந்த சொற்களைத் தொகுத்திருக்கிறேன். இது உருவாக உதவிய அன்பர்களுக்கு நன்றி.

**- பழநியப்பா சுப்பிரமணியன்**

29, வ.உ.சி தெரு,
கண்டனூர்.

## புலம் பெயர்தல் – சில தொன்மங்கள்

பெண்ணை மையமாக வைத்து போர் நடந்திருக்கிறது. விரும்பத் தகாதவர்களிடமிருந்து பெண்ணைக் காப்பாற்ற அவளைச் சார்ந்த குழுவினர் ஒரு பிரதேசத்தை விட்டு நீங்கி இன்னொரு பிரதேசத்திற்குக் குடியேறியிருக்கிறார்கள்.

நாட்டின் அரசன் ஒரு பெண்ணின் மேல் மையல் கொண்டு அவளை ஆசைநாயகியாக வைத்துக் கொள்ள முயல்கிறான். அவள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கு இசையாமல் ஆள்பவனின் அதிகாரம் எட்ட இயலாத பிரதேசத்திற்கு தப்பித்து செல்கிறார்கள். இவ்வாறான புலம் பெயர்தல் பல்வேறு வடிவங்களில், பிரதேசங்களில் மரபுவழிச் செய்தி களாக மக்கள் மனத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

கி. ராஜநாராயணனின் 'கோபல்ல கிராமம்' நாவலை வாசகர்கள் படித்திருப்பார்கள். நாயக்கர் குலத்தில் உள்ள அழகான பெண்ணை முஸ்லிம் அரசன் மணக்க விரும்பி அவளையும் உறவினர்களையும் தலை நகருக்கு வரவழைத்து தங்கச் செய்கிறான். திருமணத்திற்கு முன்னிரவில் அவர்கள் தெய்வமாகக் கொண்டாடும் பசுவின் துண்டிக்கப்பட்ட தலை உணவுக்காக ஒரு கூடையில் மூடப்பட்டு வைத்திருப்பதைக் காண்கிறார் கள். உடனே அங்கிருந்து சிறு குழுக்களாக பெண்ணுடன் வெளியேறி தப்பித்துச் செல்கிறார்கள். அரசனின் குதிரை வீரர்கள் துரத்திவர அவர்கள் ஆற்றின் எதிர்க்கரையில் உள்ள பெரிய மரத்தின் கிளைகளைப் பற்றிக் கொண்டு ஆற்றைக் கடந்து தெற்கே செல்கிறார்கள். ஆற்றில் ஓடும் வெள் ளத்தால் குதிரைப் படையினரின் வேகம் தடைப்படுகிறது. அவர்கள் தென்தமிழ் நாட்டுக் கரிசல் பகுதியில் குடியேறி நிலந்திருத்தி வேளாண் மைத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இதே கதை தமிழகத்தில் குடியேறிய பெரும்பாலான தெலுங்கு சாதியினர் மத்தியில் உலவுகிறது. இதே வாய்மொழி வரலாறு கன்னட நாட்டிலிருந்து வந்த கவுடர்கள் மத்தி யிலும் நிலவுகிறது என சு. வேணுகோபாலின் 'நுண்வெளி கிரகணங்கள்' நாவல் மூலம் தெரிகிறது.

இதே போன்று கர்நாடக சமவெளியில் வாழ்ந்த ஒரு இனக் குழு வினரின் பெண்ணை அரசன் குறிவைக்க அவர்கள் பல்வேறு சிரமங் களுக்கு இடையில் பாதைகளே இல்லாத நீலகிரி மலையில் ஏறி உச்சிக்கு வந்து சேர்கிறார்கள். அரசனின் படைகள் வர இயலாத பிரதேசத்தில் குடி

யேறி மற்ற சமவெளி மக்களோடு தொடர்பற்று வாழ்கிறார்கள். அவர் களுடைய பழங்கால வாழ்க்கை முறை பழக்க வழக்கங்கள் தொடர் கின்றன. வெள்ளைக்காரன் ஆட்சியில்தான் சமவெளி மக்கள் அங்கு வந்து சேர்கிறார்கள்.

புகாரை ஆண்ட அநபாயச் சோழன் நகரத்தார் பெண்ணின் அழகில் மயங்கி அவளை மணக்க விரும்புகிறான். அரசன் சிம்மாசனம் ஏறும்போது கிரிடம் வைக்கும் உரிமை பெற்ற நகரத்தார் மன்னர் பின் னோர் என்று வழங்கப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் சத்திரியனுக்கு பெண் கொடுக்க விரும்பவில்லை. மேலும் அவள் ஆசைநாயகியாக இருக்கலாமே தவிர பட்டமகிஷி ஆகமுடியாது. அரசனை எதிர்க்க இயலாத நிலையில் நகரத்தார் பெண்கள் அனைவரும் தீக்குளித்து இறந்து போகிறார்கள். ஆண்கள் அனைவரும் (ஒன்பது பேர் மட்டும் குருவுடன் வெளியேறினார்கள் என்றும் கூறப்படுகிறது) பாண்டி நாட்டில் குடியேறி வாணிபத்தில் ஈடுபடுகிறார்கள்.

பாண்டிய மன்னன் தன்நாட்டில் வாணிபம் பெருக நகரத்தாரை புகாரில் இருந்து அழைத்து வந்து குடியமர்த்தினான் என்ற மரபுவழிச் செய்தியும் உண்டு.

பெண்ணின் காரணமாக புகார் நகர வைசியர்கள் புலம் பெயர்ந்த செய்தி ஆயிர வைசியர் வரலாற்றிலும் கொங்கு செட்டியார் வரலாற் றிலும் இடம் பெற்றிருக்கிறது. வைசியர்கள் தற்சமயம் செட்டிநாடு என்று அழைக்கப்படும் பகுதிக்கும் மதுரை, பரமக்குடி, விருதுநகர், கோவில்பட்டி, நாகர்கோயில் பகுதிகளுக்கும் கொங்கு நாட்டிற்கும் குழுக்களாகப் பிரிந்து சென்றிருக்கிறார்கள். நீல பத்ம நாபனின் 'தலை முறைகள்' கதை இரணியல் செட்டிமார் சமூகப் பின்னணியில்தான் நிகழ் கிறது. அவர்களது பழக்கவழக்கங்கள் செட்டிநாட்டவர் மரபுகளை ஒத்திருக்கின்றன. இரணியல் செட்டிமார்களும் புகாரிலிருந்தே நாஞ்சில் பகுதிக்குக் குடியேறியிருக்கிறார்கள் என்ற தகவலும் நாவலில் உண்டு. 'கன்னிகா பரமேஸ்வரி'யை வழிபடும் தெலுங்கு வைசியர்களிடமும் இதே கதை நிலவுகிறது. அங்கே காகதிய மன்னன் பிரதாப ருத்ரனுக்குப் பெண் தர மறுத்து இளம் பெண்கள் அனைவரையும் எரியூட்டிவிட்டு தென்புலம் ஏகுகின்றனர்.

காவேரிப்பூம்பட்டினத்தை கடல் கொண்டதால் நகரத்தார் அங்கிருந்து வறட்சிப்பகுதியான செட்டிநாட்டிற்கு வந்து ஐந்து, ஆறு அடி உயரத்தில் கோட்டை போன்ற வீடுகள் கட்டி வாழ்ந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

மரபு வழிச்செய்திகளே தொன்மங்களாகி காப்பியங்களுக்கு உந்து சக்தியாக அமைந்திருக்கின்றன. செய்யாத குற்றத்திற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு உயிர் இழந்தவனின் மனைவி சீற்றம் கொண்டு மார்

*பகத்தைத் திருகி எறிந்து நாட்டின் மீது சாபமிட தலைநகரம் பற்றி எரிகிறது. காலங்காலமாக மக்களிடையே இந்தக் கதை பல உருவங்களில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் சிலப்பதிகாரத்திற்கு முன்பே வழங்கி வந்திருக்கிறது. (பார்க்க: தொ.மு.சி.ரகுநாதனின் 'இளங்கோவடிகள் யார்?')*

*ஈழத் தமிழரின் புலம்பெயர்தல் குறிப்பிடத்தகுந்த புனைகதை களும் கவிதைகளும் உருவாகக் காரணமாக இருந்திருக்கிறது. ஆனால் புலம் பெயர்ந்த வைசியரின் கதை காவியமாகவில்லை; புனைகதை யாகவும் மீட்டுருவாக்கம் செய்யப்படவில்லை. மரபுவழிச் செய்தி யாகவே மக்களிடையே வழங்கி வருகிறது.*

## வல்லம்பர்

நாட்டுக்கோட்டைச் செட்டியார், தனவணிகர் என்று அறியப்படும் நகரத்தார்களும் ஊரார், நாட்டார் என்று அறியப்படும் வல்லம்பர்களும் செட்டிநாட்டின் இரு முக்கியமான பிரிவைச் சேர்ந்தவர்கள். நகரத்தார் வரலாறு, உணவுவகை, சடங்குகள், பழக்கவழக்கங்கள் பற்றி வாசகர்கள் அறிந்திருப்பார்கள். இன்னொரு முக்கிய சமூகமான வல்லம்பர் பற்றி சில தகவல்கள்:

வல்லம்பர் என்றால் வலிய அம்புகளைச் செலுத்தும் வில்வீரர் என்று பொருள். காலப்போக்கில் வில் தொழில் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. அரசர்கள் ஆட்சி இருந்த வரை விற்படை வீரர்கள் தேவைப்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சி வந்ததும் வில்லின் இடத்தை துப்பாக்கி பிடித்துக்கொண்டது. வல்லம்பர்கள் போர்க்காலங்களில் வல்வில் அம்பர் தொழிலிலும் மற்ற நேரங்களில் பயிர்த் தொழிலும் கவனம் செலுத்தினார்கள். பிற்காலத்தில் வேளாண்மையே முழுநேரத் தொழிலானது. நகரத்தார்கள் தங்கள் வணிகப் பொருள்களையும் செல்வத்தையும் வழிப்பறிக் கொள்ளையரிடமிருந்து காப்பதற்கு வலிமையும் துணிச்சலும் கொண்ட வல்லம்பர் சமுதாயத்தோடு இணங்கி வாழ்ந்தனர்.

வல்லம்பர்கள் தஞ்சைப்பகுதியில் உள்ள வல்லம் என்ற ஊரிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லப்படுவது உண்டு. அதற்கு போதுமான சான்றுகள் இல்லை. வல்லம்பர்கள் அம்பலகாரர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். (அம்பலகாரன் - ஊரவைத் தலைவன். ஞா.தேவநேயப் பாவாணரின் சொற்பிறப்பியல் அகர முதலி)

## பிள்ளையார் கூடம்

பிள்ளையார் கூடம் பழங்காலத்தில் போர்க்கலைப் பயிற்சியைத் தரும் அமைப்பாக விளங்கியது. பிள்ளையார் என்றால் போர்க்கலையோடு தொடர்புடைய இளைஞர்கள் என்று பொருள். கூடத்தின் அருகில் கிடக்கும் இளவட்டக்கல் போன்றவைதான் அவை போர்க்கலைப் பயிற்சிக் கூடங்கள் என்பதை நினைவுபடுத்துகின்றன.

## செட்டிநாடு பாலை நிலமா?

ஐந்து வகை நிலங்களில் பாலைநிலம் தமிழ்நாட்டில் இல்லை

*யென்று சொல்லப்படுவது உண்டு. இருந்திருக்கக்கூடும் என்கிறார் பேரா சிரியர் டாக்டர் அய்க்கண். வல்லம்பர்கள் வாழும் பதினாறு சிற்றூர்கள் பாலைநாடு என்று அழைக்கப்படுகிறது. சஹாரா, தார் பாலைவனங்கள் போன்ற கொடிய மணல்வெளி இங்கு இல்லையென்றாலும் ஆற்றுப் பாசனமோ கடல்பகுதியோ இல்லாத புதர்கள் அடங்கிய வறண்டநில மாக இருப்பதால் பாலை நாடு என்று பெயர் வந்திருக்கக்கூடும். முல்லை, குறிஞ்சி நிலங்கள் திரிந்து இயல்பு இழந்து பாலை நிலமாகி இருக்கக்கூடும் என்பதற்கு ஆதாரமாக டாக்டர் அய்க்கண் சிலப்பதிகார வரிகளை எடுத்துக்காட்டாகத் தருகிறார்.*

*முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து*
*நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்தும்*
*பாலை என்பதோர் படிவங்கொள்ளும்.*

***(சிலப்பதிகாரம் -காடுகாண் காதை 64 - 66)***

*பாலைநிலத்தின் தெய்வம் கொற்றவை. பாலைநாடு அம்மன் வழிபாடு பரவலாக உள்ள பகுதி.*

*(நன்றி: வேலங்குடி அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோவில் திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பு மலர். 10-6-2005. பாவலர் மணி ஆ.பழனி டாக்டர் அய்க்கண் ஆகியோரின் கட்டுரைகள்)*

**எஸ்.எஸ்.தென்னரசு-சந்தனத் தேவன் நாவலில் ஒரு வர்ணனை:**

*''விரிந்து பரந்து ஓலைப் பாய்களை விரித்தது போல் கண்கண்ட தூரம் மட்டும் பொட்டல்கள். சிறிதும் பெரிதுமாக ஆங்காங்கே செம் பாரங் கற் குவியல்கள். காட்டுப்பாதைகள் நீங்கலாகப் பிற பகுதிகள் முழு வதும் வலை பின்னியது போன்று நெருக்கமான முட்செடிகள். ஆரஞ்சு சாற்றில் சிறிது பாலைக் கலந்தது போல கண்மாய்கள். ஏந்தல்கள் என்ற பெயரில் நீர்நிலைகள். அதன் கரைகளில் கருவேல மரங்கள். இடை யிடையே இரும்பு மனிதர்களைப் போன்று பனைமரங்கள். வேனில் தணிக்கும் வேம்பு, நிழல் தரும் ஆல் இவைகளும் பரவலாக உண்டு. பூமியின் குதிகாலைத் தேடிப்போகும் பாதாளக் கிணறுகள். நாட்டுக் கோட்டையார்களின் தேக்குமரக் கெட்டி மச்சு வீடுகள்.''*

# அ

***அகராதி பேசாதே:*** குதர்க்கமாகப் பேசாதே. இடக்காகப் பேசாதே. தாறுமாறாகப் பேசாதே.

***அக்கப்போர்:*** தகராறு, வம்பு, கலகம் செய்தல்.

***அக்கம் பக்கம்:*** சுற்றுப்புறம். அந்தப் பக்கம், இந்தப் பக்கம். (Neighbourhood) பகலில் பக்கம் பார்த்து பேசு. இரவில் அதுவும் பேசாதே.

***அங்கம் போடுதல்:*** புனிதநீரில் இறந்தவரின் எலும்பு, சாம்பலைக் கரைத்தல். 'மகன் அங்கம் போட திருவையாறு சென்றிருக்கிறான்.'

***அக்கக்காய்:*** தனித்தனியாய். வேறுவேறாக. 'அவன் மகா சூரன். ஸ்கூட்டரை அக்கக்காய் பிரித்து மாட்டிவிடுவான்.'

***அங்ஙனே:*** அங்கிட்டு, அங்கே, அந்த இடத்தில்.

***அங்கி:*** இறைவன் திருமூர்த்தங்களுக்குச் சாத்தும் வெள்ளி, தங்கக் கவசம். 'அவர் கோவிலுக்கு வெள்ளி அங்கி செய்து கொடுத்திருக்கிறார்.'

***அசத்து மறந்து:*** மறதியாக. கவனக்குறைவாக. 'வயசாச்சு. எங்கேயாவது அசந்து மறந்து வைக்கவேண்டியது. அப்பறம் தேடவேண்டியது.'

***அசதி:*** சோர்வு, களைப்பு. அகராதியில் தரப்படும் பொருளில் செட்டிநாட்டில் வழங்கப்படும் சொல். பொருளாதார நிலையில் தாழ்வு என்பதைக் குறிக்கும் சொல்.

***அட்டணக்கால்:*** கால் மேல் கால் போட்டு உட்கார்தல்

***அச்சாரம்:*** முன்பணம். 'சமையல் மேஸ்திரிக்கு அச்சாரம் கொடுத்தாச்சா?

***அடசல்:*** குப்பை, நெருக்கடியான பொருள் குவியல்.

***அடசிப் போ:*** ஒதுங்கிப் போ. விலகிப் போ.

***அடம்:*** விஷமம் செய்வது, தொல்லை கொடுப்பது, பிடிவாதம்.

***அடத்தி:*** சீட்டு விளையாட்டில் அருகிருந்து யோசனை சொல்பவர், பதிலாள்.

***அடுக்குச்சட்டி:*** ஐந்து சட்டிகள் கொண்டது. திருமண சீர்கள்

பரப்பியிருக்கும் இடத்தில் 'எத்தனை அடுக்குச்சட்டி இருக்கு?'

***அடுபிடி கந்தை:*** அடபிடிகந்தை. சமைக்கும்போது சூடான பாத்திரங்களைத் தூக்கப் பயன்படும் கந்தை. சமையல் அறையில் பயன் படும் கந்தல் துணி.

***அடிக்கட்டை:*** வங்கி செக் புத்தகத்தில் இடது பக்கப் பகுதி. வங்கி சலானின் கவுண்ட்டர் ஃபாயில். ரசீது தருபவர் ரசீது புத்தகத்தில் வைத்துக்கொள்ளும் இடதுபக்கப் பகுதி.

***அடிமடியில் கை வைத்து விட்டான்:*** ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனுஷனைக் கடிக்க வந்ததுபோல. ஆதாரமான வற்றைத் கையகப்படுத்த முனைவது.

***அடுகிடையும் படுகிடையுமாக:*** எந்நேரமும். அடுத்தும் படுத்தும் அகலாமல் கிடத்தல்.

***அடுத்தாள்:*** உதவியாள். வட்டிக்கடையில் மேலாளுக்கு அடுத்த படியான பதவியை வகிப்பவர்.

***அடைஞ்சு வைத்தல்:*** ஒன்றின்மேல் ஒன்றாக வைப்பது, அடுக்கி வைப்பது.

***அடைத்தல்:*** கடனைத் தீர்த்தல். நெருக்கமாகப் பொருள்களை வைத்தல்.

***அட்டக்கரி:*** அடர்த்தியான கருப்பு நிறம்.

***அட்டவணை:*** பொருளடக்கம். தீர்மான விவரங்கள் அடங்கிய புத்தகம். 'கோவில் நிர்வாகப்பிரச்னைகளில் சந்தேகம் ஏற்பட்டால் அட்ட வணையைப் பார்.'

***அட்டியல்:*** கழுத்தில் அணியும் நகை.

***அண்டா:*** தண்ணீர் வைத்துக் கொள்கிற வாய் அகன்ற பாத்திரம் 'நூறு ரூபாய் அண்டா'- பெரிய விருந்துகளில் பயன்படுவது. பெண்ணுக்கு வைக்கும் சீரில் ஐந்து நூறு ரூபாய் அண்டா அடுக்கு உண்டு. நெல் அவிக்கிற அண்டா.

***அண்டிமன்:*** பிராமிஸ்ஸரி நோட்டு. On Demand என்ற ஆங்கிலச் சொல்லின் மரூஉ.

***அண்ணமுண்டி:*** அண்ணி,அண்ணன் பெண்டிர் என்பதன் மரூஉ.

***அத்தக்கூலி:*** அவ்வப்போது குறிப்பிட்ட வேலைக்கென்று தரப் படும்கூலி. நாள், வார, மாதச் சம்பளம் ஆகியவற்றிலிருந்து வேறு பட்டது.

***அத்தறுதி:*** அற்றறுதி. இறுதியாக. அதோடு முடிந்துவிட்டது.

***அத்தியான பட்டர்:*** கர்ப்பக்கிரகத்தில் குருக்கள் அர்ச்சனை

செய்யும்போது அருகில் நின்று மந்திரங்களை உச்சரிப்பவர்.

***அத்தோசி:*** தோசிப்பயல். அதிர்ஷ்டமில்லாதவன். 'அவன் ஒரு அத்தோசி. அவன்கூட சேர்ந்து தொழில் செஞ்சா உருப்பட்டாப்பிலதான்.'

***அதிகப்பற்று:*** வரவுக்கு அதிகமான வகையில் பற்று. செலவு. கூடுதல் பற்று.

***அதிட்டக்கட்டை:*** அதிர்ஷ்டம் இல்லாதவன்.

***அதை வினால்:*** அதைவிட்டு விட்டால். அல்லது.

***அந்தம்:*** முடிவு. அழகு.

***அப்பச்சி:*** அப்பா. செட்டியாரல்லாத மற்ற சாதியார் செட்டியார் ஆண்களை விளிக்கும் சொல். வேறுசில பகுதிகளில் தாத்தாவைக் குறிக்கும் சொல்.

***அப்பச்சி வண்டி:*** (பேச்சுவழக்கில்) அப்பச்சி பெண்டிர் என்பதன் மரூஉ. தந்தையின் மறுதாரம்.

***அப்பத்தா:*** அப்பாவின் ஆத்தா. அப்பாவின் தாய்.

***அமத்துதல்:*** பால் கொடுத்து குழந்தையை அமைதிப்படுத்துதல். 'பிள்ளையை அமத்து.'

***அமுக்கன்:*** கமுக்கமாக நடந்து கொள்பவன். எதையும் வெளியிடாமல் மறைத்து வைப்பவன்.

***அமுக்குணி:*** வெளிப்படையாகப் பேசாதவன். தகவல்களைத் தனக்குள்ளே வைத்துக் கொள்பவன்.

***அமுக்குப்பூட்டு:*** Press - Lock. சாவியை வைத்துத் திறந்த பூட்டை சாவியில்லாமல் அமுக்கிப் பூட்டும் பூட்டு.

***அமுக்குப் பொத்தான்:*** Press - Button.

***அமெரிக்கை:*** அமரிக்கை. அமைதியாக. அடக்கமாக .

***அம்பிட்டு:*** அவ்வளவு.

***அம்புட்டுக்கிட்டான்:*** அகப்பட்டுக் கொண்டான்.

***அம்மன் சல்லி:*** புதுக்கோட்டை சமஸ்தானத்தில் வழக்கில் இருந்த காசு.

***அம்மாமுண்டி:*** மாமாவின் (அம்மானின்) மனைவி. அம்மான் பெண்டிர் என்பதன் மரூஉ.

***அம்மான்:*** மாமா. பிராமணர்கள் அம்மாமா என்று சொல்வதுண்டு.

***அந்திக்கும் சந்திக்கும்:*** எந்நேரமும்.

***அய்த்தான்:*** அத்தான். அம்மான் மகன். தமக்கை கணவன். அத்தை மகன். சகோதரியின் கணவன்.

***அய்த்தியாண்டி:*** அத்தான் பெண்டிர் என்பதன் மரூஉ. மாமன் மகள். அத்தை மகள். நாத்தனாரை அய்த்தியாண்டி என்று அழைப்பதுண்டு.

***அர்த்த ஜாமம்:*** ஆலயத்தில் இரவு நேர வழிபாடு.

***அரசு:*** ஆண். 'அவளுக்கு இரண்டு அரசு. ஒரு பொம்பிளைப் பிள்ளை.'

***அரசாளுவான்:*** செல்லமாக ஆண்குழந்தையைக் கடிந்து கொள்வது.

***அரிக்கன்:*** வங்காள தேசத்தில் உள்ள அக்யாப் நகர்.

***அரிச்சுக் கொட்டுதல்:*** ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் தனக்கெனக் கட்டிச் சேர்த்தல்.

***அருகாமனை:*** அரிவாள் மணை. இரண்டு விதங்கள் உண்டு. மரக்கறி அருகாமனை, கசாப்பு அருகாமனை. சைவ உணவுக்காரர்களுக்காக தனித்தனி அருகாமனை.

***அருணாக்கொடி:*** அரைஞாண் கொடி.

***அரைமணியம்:*** ஆலய நிர்வாகியான மணியக்காரருக்கு உதவியாளர்.

***அருளாடியார்:*** அருள்வாக்கு சொல்பவர். சாமியாடி.

***அலக்கழித்தல்:*** கேலி செய்தல், கிண்டல் செய்வது.

***அலக்குடுப்பு:*** தொந்திரவு தருதல்.

***அலக்குடுப்பது:*** சமாளிப்பது. 'உன் பக்கிகளுக்கு என்னால அலக்குடுக்க முடியாதுங்குறா அண்ணமுண்டி.'

***அலங்கோலம்:*** அழகற்ற. ஒழுங்கற்ற.

***அல்காப் பயல்:*** மட்டரகமானவன். நாமிர்தாப் பயல். லுச்சாப் பயல்.

***அல்லுச் செல்லு:*** கடன். 'நிம்மதியா வாழுறாரு. அவருக்கு அல்லுச் செல்லு இல்லை.'

***அவதி:*** அவசரம், தொல்லை. 'நேரத்தோடு வந்து சேரு. வெயில்ல அவதிப்பட முடியாது.'

***அவலைசவலை:*** சிறு குழந்தைகள். அடுத்தடுத்துப் பிறந்த பச்சிளம் குழந்தைகள்.

***அவிஞ்சு போதல்:*** பேசாமல் இருத்தல் (பெரும்பாலும்

பொறாமையால் அல்லது வெறுப்பால்)

***அவுக:*** அவர்கள்.

***அழுத்தம்:*** பணத்தில் குறியானவர். சிக்கனம்.'ஆள் ரெம்ப அழுத்தம்.'

***அளக்கிற அளப்பு:*** தன்னைப் பற்றிய பிரதாபம். பெருமையாகச் சொல்லிக் கொள்வது. மிகையாக சம்பவங்களை விவரித்தல்.

***அளிம்பு:*** கெடுதல், சேட்டை.

***அழிச்சாட்டியம்:*** வம்பு. கேடு.

***அறிவுகெட்ட முண்டம்:*** வசைச்சொல். முண்டம் என்றால் தலையில்லாத உடல் என்று பொருள்.

***அறுத்துக் கட்டுற சாதி:*** மணவிலக்கு, மறுமணம் ஆகியவற்றை அனுமதிக்கிற சாதி. 'நீ உன் ஆமக்களை அனுசரிச்சுத் தான் போகணும். நாம அறுத்துக் கட்டுற சாதியில்லையே.'

***அறுத்தோடி:*** மழையால் சாலையின் விளிம்பில் பிளவுபட்டிருப்பது. 'ரோடிலே அறுத்தோடி இருக்கு. பாத்துப் போ.'

***அறுதப் பழசு:*** மிகவும் பழையது.

***அனத்துதல்:*** வேதனையால் வலியால் முனகுதல். இதே பொருளில் அனுங்குதல் என்ற சொல் இலங்கையில் வழங்குகிறது.(க்ரியா அகராதி)

***அனாமத்து:*** யாருக்கும் சொந்தமில்லாதது. கணக்கில் வராதது.

***அனுங்கிப் போய்விட்டது:*** அழுகிப்போய்விட்டது. 'சந்தையில் கத்திரிக்காய் பார்த்து வாங்கப்படாது? அனுங்கிப் போச்சே!'

***அனுவல்:*** விசேஷம். சுபநிகழ்ச்சி.

## ஆ

***ஆகச்சே:*** ஆகையால்.

***ஆகாவரி போகாவரி:*** ஒன்றுக்கும் பயனில்லாத.

***ஆக்கினை:*** அதிகாரம், அட்டகாசம், அட்டூழியம். 'அவன் செஞ்ச ஆக்கினை கொஞ்ச நஞ்சமில்லை.'

***ஆக்கையத்துப்போச்சு:*** உடல் சோர்வடைதல். களைத்தல்.

***ஆசாமிக்காரன்:*** வட்டிக் கடை வாடிக்கையாளர்.

***ஆச்சி:*** சகோதரி அல்லது சித்தியைக் குறிக்கும் சொல். நகரத்தார் இல்லப் பெண்கள் மற்றவர்களால் ஆச்சி என்று அழைக்கப்படுவார்கள். தென்தமிழ் நாட்டில் இந்த சொல் வயதான பெண் அல்லது பாட்டியைக்

குறிக்கும்.

***ஆமக்கன்:*** கணவன். பொறுப்பில்லாத கணவன் என்பதை கோப மாகவும் மறைமுகமாகவும் சொல்வது.

***ஆம்பிப்போதல்:*** கெட்டுப் போதல். 'ஊறுகாய் ஆம்பிப்போச்சு. வெயில்ல வை.'

***ஆத்தாள்:*** பெண் தெய்வங்கள். பேச்சுவழக்கில் ஆத்தா தாயைக் குறிக்கும் சொல். சென்னை, செங்கல்பட்டு பகுதியில் வசையாகப் பயன் படும் சொல்.

***ஆதாய வரவு:*** லாப வரவு. வருமான வரவு.

***ஆத்தமாட்டாமல்:*** பொறுக்க முடியாமல், இயலாமல்.

***ஆத்தாடி:*** ஆச்சரிய உணர்வோடு அல்லது சோர்வு, வலி ஏற்படும் போது சொல்வது.

***ஆத்தி:*** வியப்பு அல்லது பயத்தைக் குறிக்கும் சொல். Exclamation.

***ஆந்த ஆள்:*** அமைதியான ஆள்.

***ஆந்து சோந்து:*** அசந்து சோர்ந்து.

***ஆயக்கால்:*** தூக்கிய சுவாமி வாகனத்தை இறக்கி வைக்காமல் நிறுத்தப் பயன்படும் மரக் கால். வாகனம் தூக்குபவர்கள் இளைப்பாறப் பயன்படுவது.

***ஆய்தல்:*** கீரை ஆய்தல். கிள்ளிக் களைதல். நறுக்கி எடுத்தல்.

***ஆலாத்தி:*** ஆரத்தி. 'மாப்பிளை பொண்ணு வருது. ஆலாத்தி எடுக்கணும்.'

***ஆல் வீடு:*** Hall என்ற ஆங்கிலச் சொல்லின் மரூஉ

***ஆவர்த்தி:*** சுற்று, தடவை, முறைமை.

***ஆற அமர:*** மெதுவாக, நிதானமாக.

***ஆனையடிக்கல்:*** யானை அடிக்கல். தரையிலும் மொட்டை மாடித் தளத்திலும் பதிக்கப்படும் இளஞ்சிவப்பு நிறமுள்ள சதுரவடிவ ஓடு. இதை சென்னை பகுதியில் சதுர ஓடு என்பார்கள்.

***ஆனைக்கா சட்டி:*** யானைக் கால் வடிவக் கலன்.

## இ

***இக்கு வைத்துப் பேசுவது:*** பொடிவைத்துப் பேசுவது.

***இங்ஙனே:*** இங்கே, இந்த இடத்தில்.

***இசைகுடிமானம்:*** இசைவுப்பிடிமானம். மணமகன், மணமகள்

இரு தரப்புப் பெற்றோரும் எழுதிக் கையெழுத்திட்டு பங்காளி சாட்சி களோடு செய்துகொள்ளும் ஒப்பந்தம்.

***இடுக்கு:*** *இடைவெளி.*

***இடுங்கி:*** *சிறுத்து, குறுகி.*

***இடுப்பு ஒடிதல்:*** *மிகுதியான வேலையால் களைப்பு.*

***இடைவார்:*** *இடுப்பில் கட்டும் தோல்வார் (பெல்ட்).*

***இட்டுவட்டி:*** *நீர்கொதிக்க வைக்கப் பயன்படும் வேம்பாவின் (பாய்லர்) கீழ்ப்பகுதி. பிடியுடன் கூடிய வட்டமான இரும்புத் தகடு. சோறு வடித்துப் பரிமாறப் பயன்படும் கைப்பிடியுள்ள கரண்டி.*

***இத்தி:*** *சிறிதளவு. கொஞ்சம். ஒள்ளத்தி.*

***இத்துனூண்டு:*** *மிகவும் சிறியது. 'சட்டியிலே இத்துனூண்டு சோறு இருக்கு.'*

***இம்புட்டு:*** *இவ்வளவு.*

***இரண்டாங்கட்டு:*** *வளவிற்கு அப்பால் முற்றத்தோடு கூடிய வீட்டின் பகுதி. அந்தப்புரம். பெரும்பாலும் பெண்கள் வசிக்கும், நடமாடும் பகுதி.*

***இருப்புச் சட்டி:*** *வாணலி. சமையலுக்குப் பயன்படும் குழிந்த உட் பகுதி உள்ள இரும்புப் பாத்திரம்.*

***இவுக:*** *இவர்கள்.*

***இழவு கூட்டுதல்:*** *மரணம் நிகழ்ந்தவுடன் உறவினர்களுக்குச் சொல்லியனுப்பி சடங்குகளை நடத்துவது.*

***இழைப்புளி:*** *கூரிய உளித்தகடு செருகப்பட்ட தச்சர் கருவி.*

***இளக்காரம்:*** *கேவலம். 'நாமன்னா அவளுக்கு இளக்காரம்.'*

***இறுக்கி:*** *பலமாக, கெட்டியாக.*

***இறுத்து விடுதல்:*** *தெளிவாக விடுதல். வடி கட்டுதல்.*

***இளங் கொடி:*** *நச்சுக் கொடி.*

## ஈ

***ஈடு:*** *அடகு வைத்தல். இட்டு அவிப்பது. 'முதல் ஈடு இட்லியைச் சாப்பிடலாம். அஞ்சு ஈடு இட்லி அவிச்சிருக்கேன்.'*

***ஈக்கி:*** *நாக்கு வழிக்கப் பயன்படும் பனையோலைக் குச்சி.*

***ஈரெட்டு:*** *நிச்சயமில்லாத. உத்தேசமான.*

***ஈரங்கி:*** *நீதிமன்ற விசாரணை நாள்.* Hearing *என்ற ஆங்கிலச் சொல்லின் மரூஉ.*

***ஈவு:*** பங்கீடு. இரக்கப்பட்டுக் கொடுப்பது. ஈவு சோவு.

***ஈயாப் பொத்தி:*** கருமி. எதையும் எவருக்கும் ஈயாதவன்.

## உ

***உக்கி:*** தோப்புக்கரணம். ''தோப்பில் மாங்காயைத் திருடிட்டான். நூறு உக்கி போடச் சொன்னேன்.''

***உசுப்பு:*** எழுப்பு. ''உசுப்பி உசுப்பிப் பார்க்கிறேன். எந்திருக்கவே இல்லை.''

***உச்சிக் காலம்:*** ஆலயத்தில் நண்பகல் வழிபாடு.

***உடுப்புப் பெட்டி:*** உடைகள் வைக்கும் பெட்டி.

***உக்கிராணம்:*** பலசரக்குப் பொருள்கள் வைத்திருக்கும் அறை. அகராதியில் உள்ள இந்தச் சொல் இப்பகுதியில் பேச்சுவழக்கில் பயன் படுத்தப்படுகிறது. விரிவான விளக்கம் வேறொரு பகுதியில்.

***உடல்வாகு, உணவுவாகு:*** உடலின் தன்மை, உணவின் தன்மை, இவற்றின் கூறுகள், அமைப்பு. 'என் மனைவி கைவாகு என் உடல்வாகு.'

***உடன்பங்காளி:*** நெருங்கிய பங்காளி, தந்தை வழி ஆண் உறவினர்.

***உண்டன:*** நிறைய. 'வெஞ்சனம் உண்டன இருக்கு. நல்லா சாப்பிடுங்க.'

***உண்டியல்:*** Hundi என்ற சொல்லின் மரூஉ. (சோமலெ விளக்கம். 'டிராப்ட்'. இந்த சீட்டுக்கென தனியே பணம் ஒதுக்கப் பட்டிருக்கும்) விரிவான விளக்கம் பிறிதொரு பகுதியில்.

***உண்டியல் கடை:*** சிறு வங்கி.

***உருவாஞ் சுருக்கு:*** எளிதாக அவிழ்க்கப்படும் முறையில் போடும் முடிச்சு.

***உருத்து:*** அக்கறை, கவனம். 'பிள்ளையைப் பெத்துட்டாப் போதுமா, உருத்தாப் பார்த்துக்கணும்.'

***உழக்கு:*** பெரிய படியில் எட்டில் ஒரு பங்கு. அரைக்கால் படி. வட தமிழ்நாட்டில் இது கால்படியைக் குறிக்கும்.

***உலாந்தா வங்கி:*** ஹாலந்து வங்கி.

***உள்வீடு:*** வளவில் உள்ள அறைகளின் உட்பகுதி.

***உள்ளது போல:*** சுமாரான. அழகில்லை என்று நேரடியாகச் சொல் வதைத் தவிர்க்கும் சொல். 'பெண் உள்ளது போல இருக்கும்.'

## ஊ

***ஊதக் காற்று:*** குளிர்காற்று 'ஊதக்காத்து அடிக்குது. வெளியே போகாதே . தடுமன் பிடிக்கும்'.

***ஊதல்:*** உடம்பு பெருத்தல் 'ஆளு ஊதிப் போனான்.'

***ஊது புரளி:*** வயிறு ஊதும் நோய். பொய்.

***ஊத்தம்:*** கொழுப்பு. திமிர்.

***ஊத்துக்காரன்:*** பொய் பேசுகிறவன்.

***ஊத்தை:*** அழுக்கு.

***ஊமைக்குசும்பு:*** மௌனமாக இருந்து கேடு செய்பவன்.

***ஊமைவெயில்:*** மந்தமான வெயில்.

***ஊராவீட்டு:*** அயலாருடையது. 'ஊராவீட்டுப் பொருளுக்கு ஆசைப்படாதே.'

***ஊரிழவு:*** உறவினர் அல்லாதவர் சாவு.

***ஊருணி:*** குடிநீர்க் குளம். பாண்டிய நாட்டிற்குப் பொதுவான சொல். பல ஊர்களின் பெயர்கள் ஊருணி என்ற சொல்லுடன் முடிகின் றன. மழைநீரைத் தேக்கி வைக்கக் கட்டப்பட்ட நீர்நிலை.

***ஊர்க்காலி:*** ஊர்சுற்றி. வேலையில்லாதவன். யாருக்கும் அடங் காமல் திரிபவன். கோயில் காளை.

***ஊர்ப்பட்ட:*** ஏராளமான. அதிகமான.

***ஊளைவடிதல்:*** சீழ் வடிதல்.

## எ

***எகனைக்கு மொகனை:*** எதிரும் புதிருமான.

***எக்குதல்:*** விரைவாகச் செயல்படுதல்.

***எங்கிட்டு:*** எங்கே? எந்தப் பக்கம்?

***எசகுபிசகு:*** வழிதவறி.

***எசகேடு:*** இசைவின்றிக் கெடுத்தல். இடையூறு.

***எடுத்தெறிந்து பேசாதே:*** நிதானமில்லாமல் ஒருவரை மட்டந் தட்டிப் பேசுவது.

***எதம் பதம்:*** இதம்பதம். மெதுவாக. கவனமாக.

***எடக்கு முடக்கு:*** எதிரும் புதிருமாக.

***எட்டாக்கை:*** தொலைவில். கண்காணாத இடத்தில்.

**எதவான குடும்பம்:** பெரும் வசதியில்லாத, சுமாரான குடும்பம்.

**எதுக்களிக்கிறது:** திட உணவோ அல்லது திரவ உணவோ செரிமானம் ஆகாமல் உணவுக்குழாய் வழியாக மேல்நோக்கி தொண்டைக்கு வருதல்.

**எமப்பயல்:** பொல்லாதவன். அஞ்சாதவன்.

**எம்டன்:** கெட்டிக்காரன், அசகாய சூரன். தந்திரமாக செயலாற்றுபவன். இந்தப் பெயர் கொண்ட ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் போரில் வல்லமை பெற்றது. முதல் உலகப்போரில் சென்னையைத் தாக்கியது.

**எம்பிட்டு:** எம்முடையது. எவ்வளவு?

**எரசல்:** சாரல். 'எரசலடிக்குது. ஜன்னலைச் சாத்து.'

**எரிதுரும்பு:** கோயில் நிர்வாகத்தில் விறகிற்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் சொல்.

**எழவெடுத்த காற்று:** காற்று பலமாக அடிப்பதை எரிச்சலோடு சொல்வது.

**எனத்துட்டி:** இனத்துட்டி. வசூலாகாத கடன்.

## ஏ

**ஏகப்பட்டது:** ஏராளமானது. அதிகமானது.

**ஏக்கத்தவன்:** மிக ஆசைப்படுபவன்.

**ஏங்கல்தாங்கல்:** தக்க தருணம். தேவைப்படும் நேரம்.

**ஏஞ்சே:** கணவன் மனைவியை அல்லது முதியவர் வயது குறைந்த பெண்களை அழைக்கும் முறை.

**ஏடாகூடம்:** முறைகேடு. விதிக்கு மாறுபாடாக.

**ஏத்துறதுக்கும் தூத்துறதுக்கும்:** உயர்வாகப் பேசுவதற்கும் தாழ்த்திப் பேசுவதற்கும்.

**ஏப்பைசாப்பை:** ஏமாறுபவர்.

**ஏலா போடுவது:** கடவுளர் விக்கிரகங்களை சீர்பாதம் தாங்குவோர் தூக்கும்போது உற்சாகப்படுத்த 'ஏலா' என்று சொல்வது. 'ஏலா போடுறது சுலபம். தூக்குகிறவனுக்குத் தானே கஷ்டம் தெரியும்.'

**ஏவம் கேட்பது:** பரிந்து பேசுவது. 'வேலைக்காரருக்கு ஏவம் கேட்பது உங்க வழக்கம்.'

## ஐ

***ஐந்தொகை:*** *வரவு செலவு கணக்கு.* Balance Sheet *வரவு, செலவு, பற்று, கையிருப்பு, சொத்து இருப்பு ஐந்தினையும் குறிப்பது.*

***ஐயுரவு:*** *கூச்சம், சந்தேகம்.*

***ஐஸ்பெட்டி:*** Refrigerator *-குளிர்சாதனப் பெட்டி.*

## ஒ

***ஒக்கல்:*** *இடை. 'ஒக்கல்லே பிள்ளையை வச்சிட்டு வர்றா.'*

***ஒக்கிடுவது:*** *பழுது பார்ப்பது. 'சைக்கிளை ஒக்கிடோணும்.'*

***ஒசத்தி:*** *உசத்தி. உயர்வு. 'எல்லாரும் சமம். யாருக்கு யார் ஒசத்தி!'*

***ஒடனொத்த:*** *உடனொத்த. சமமான. 'ஒடனொத்தவகளோடு தான் பழகணும்.'*

***ஒட்டிக்கு ரெட்டி:*** *ஒன்றுக்கு இரண்டாக. 'பங்குனி மாதம் புளி வாங்கணும். நாளானா விலை ஒட்டிக்கு ரெட்டியாகிடும்.'*

***ஒட்டுதல்:*** *நெருங்கி உறவாடுதல். பற்றுடன் பழகுதல். 'இத்தன வருஷம் வளர்த்திருக்கோம். ஒரு ஒட்டுதல் கிடையாது.'*

***ஒட்டுவாரொட்டி:*** *தொட்டால் ஒட்டிக்கொள்ளும் நோய்.*

***ஒண்ணுக்குள்ளே ஒண்ணு:*** *உறவினர்களுக்கிடையில். தாயாதிகள்.*

***ஒத்தைநாடி:*** *ஒல்லியானவர்.*

***ஒப்புவித்தல்:*** *பொறுப்பை மாற்றி விடுதல். திருப்பிச் சொல்லு தல்.*

***ஒப்பேற்றுதல்:*** *சமாளித்து சரி செய்தல். 'காஸ் அடுப்பு புதுசு வாங்க பணமில்ல. இருக்கிறதை வச்சு ஒப்பேத்த வேண்டியதுதான்.'*

***ஒப்பேறாது:*** *சரிப்பட்டு வராது. பொருந்தாது.*

***ஒமட்டுதல்:*** *குமட்டுதல். வாந்திவருவது போலிருத்தல்.*

***ஒம்பிட்டு:*** *உன்னுடைய.*

***ஒருக்களித்து:*** *வலது அல்லது பக்கம் சாய்ந்து படுத்திருப்பது. ஒருக்கணித்து.*

***ஒரு தலைக்கு நிக்கிறான்:*** *பிடிவாதமாக இருக்கிறான்.*

***ஒலுகு:*** *சதுர வடிவமுள்ள தலையணை.*

***ஒள்ளத்தி:*** *சிறிதளவு, குறைவாக. இத்தி.*

***ஒறண்டை:*** *சண்டை. சச்சரவு. தகராறு.*

## ஓ

***ஓங்கரித்தல்:*** குமட்டுதல். வாந்தி வருவது போலிருப்பது.

***ஓஞ்சரிச்சு:*** ஒருக்கணித்து. ஒரு பக்கமாக.

***ஓட்டைவாய்:*** ரகசியத்தைப் பாதுகாக்கத் தெரியாதவன். இடம், காலம் பார்க்காது பேசுபவன்.

***ஓட்டாஞ்சல்லி:*** சிதறிய மண்பாத்திரத் துண்டு.

***ஓதுவார்:*** தேவார திருவாசக பாடல்களைப் பாடுபவர். செட்டி நாட்டு ஆலயங்களில் விக்ரகங்களுக்கு அலங்காரம் செய்ய பூ, மாலை கொண்டு வருபவர் ஓதுவார் என அழைக்கப்படுவார்.

***ஓயாமடம்:*** ஓய்வில்லாமல் அன்னதானம் செய்யும் மடம்; திருவண்ணாமலையில் உள்ளது.

***ஓவியம்:*** செல்லம். காணக்கிடைக்காதது. 'ஓவியமா வளர்த்த பிள்ளை. உருப்படாமல் போச்சு.'

## க

***கக்கர்வால் பிடிச்சவன்:*** ஒத்துப்போகாதவன். இடையூறு செய்பவன்.

***கக்கட்டி:*** கண் இமையில் வீக்கம்.

***கசகல்:*** சிறு தகராறு. 'பங்காளிகளுக்குள்ள கசகல்.'

***கச்சடா:*** மட்டரகமான. 'கச்சடாப்பயல் சகவாசம் வேண்டாம்.'

***கச்சிதம்:*** பொருத்தமான அளவு. சரியானது.

***கடகம்:*** பனையோலைப் பெட்டி.

***கடகால்:*** வாளி. வடதமிழ்நாட்டில் கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போடுவதை 'கடகால் தோண்டுவது' என்பார்கள்.

***கடவு:*** இடம். 'கண்ட கடவெல்லாம் சுத்திப் பார்த்தேன். மாட்டைக் காணலை.'

***கட்டைபோடுதல்:*** தேரை நிறுத்த, வலது அல்லது இடது பக்கம் திருப்ப தேர்ச் சக்கரத்திற்கு அடியில் வைத்து கட்டையைப் பயன்படுத்துவது. இடையூறு செய்வது. தடுப்பது.

***கணக்கு:*** வெளிநாடுகளில் வட்டிக் கடைகளில் 'கொண்டு விற்கத்' தங்கும் மூன்று ஆண்டுகளைக் குறிக்கும் சொல்.

***கண்டசரம்:*** கழுத்தில் அணியும் வைரநகை. நெக்லஸ் போன்றது.

***கண்டதையும் கடியதையும்:*** கண்டபொருள்களை. அவசிய மின்றிப் பயன்படுத்துவது.

**கண்ணாம்பட்டை:** கண் இமை.

**கண்ணு பொருதல:** கண்ணை மூடி தூங்கவில்லை.

**கணிசம் காணாது:** போதுமானதல்ல. 'கிச்சிலிச் சம்பா அரிசி கணிசம் காணும். மட்ட அரிசி கணிசம் காணாது.'

**கண்டமேனிக்கு:** இஷ்டப்படி. வரன் முறையில்லாமல். 'கண்ட மேனிக்குத் திட்டினான்.'

**கண்டாங்கி:** சேலை, புடவை.

**கண்ணாடிக்கூடு:** மூக்குக் கண்ணாடி வைத்துக்கொள்ளும் கூடு.

**கண்மாய்:** (பாசனத்திற்கான குடிநீருக்கான) சிறு ஏரி. (பாண்டிய நாட்டிற்குப் பொதுவான சொல்)

**கமருதல்:** அடுப்பில் உணவு வகைகளைத் தாளிக்கும்போது இருமுவது. தொண்டையில் எரிச்சல் ஏற்படுவது.

**கம்புக்கூடு:** கட்கம்.

**கதண்டு:** தேனி வகையைச் சேர்ந்த வண்டு. கடிக்கும்போது வண்டின் கால்கள் சதையில் ஆழமாகப் பதிந்துவிடும். அதை அப்புறப் படுத்துவது கடினம்.

**கந்தரி கோளம்:** தாறுமாறு. ஒழுங்கில்லாத நிலை. 'வீட்டை கந்தரி கோளமாப் போட்டு வச்சிருக்கா.'

**கரச்சல்:** (கரைச்சல்) தொந்திரவு. தொல்லை.

**கரதலைப்பாடம்:** நன்றாகத் தெரிந்திருப்பது. தலை கீழ்ப் பாடம்.

**கரிச்சுக் கொட்டுதல்:** படபடவென்று எரிச்சலோடு குறை சொல்வது.

**கருக்கடை:** அக்கறை. கவனம்.

**கருக்கல்:** அதிகாலைப் பொழுது. Twilight.

**கருக்காய்:** விளையாத நெல்.

**கருதறுப்பு:** நெல் அறுவடை.

**கருத்துச் சிறுத்துக் கருவாடாய்ப் போனான்:** இளைத்து மெலிந்து சோர்ந்துபோனான்.

**கரைக்கூட்டம்:** (கரை: இனத்தின் உட்பிரிவு) சமூக பிரிவுகளின் பிரதிநிதிகள் கூட்டம். கோயில் நிர்வாகம் சம்பந்தமான கூட்டம்.

**கலவடை:** பிரிமணை. வைக்கோல் பிரிகளால் ஆன வளையம். சூடான பானை உருண்டு விடாமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்த இருக்கை.

***கல்யாணக் கொட்டகை:*** *திருமணப்பந்தல்.*

***கலுங்கு:*** *குளத்தில் நிரம்பி வடியும் நீர் மறுகால் ஓடையில் பாயும் இடத்தில் கட்டப்பட்ட கல்மடை.*

***கவட்டை:*** *முள் அணைக்க உதவும் பிளவுபட்ட கவட்டைக் கம்பு.*

***கவுடு சங்கம்:*** *கவுரிசங்கம். முதியவர்கள் கழுத்தில் அணியும் உருத்திராட்ச மாலை. விதவிதமான வடிவமைப்புகளில் காணப்படும்.*

***கழுத்துத்திரு:*** *கழுத்தீர். திருமணத்தில் மணமகள் கழுத்தில் பூட்டும் மங்கலநாண்.*

***கல்லுளிமங்கன்:*** *பிடிவாதக்காரன். மௌனம் சாதிப்பவன்.*

***கல்லெடுப்பு:*** *'நடுகல்' நாட்டுதலின் அடையாளச் சடங்கு.*

***கழித்தல்:*** *மரணம், மற்ற துர்ச்சம்பவங்களால் பாதிக்கப்படாமல் இருக்க செய்யப்படும் சடங்கு. 'சட்டிபானை கழித்தல்.'*

***கள்ளியம்பெட்டி:*** *மரச்சட்டங்களாலான பெட்டி. மூடி இல்லாதது.*

## கா

***காங்கை:*** *வெப்பம். சூடு. 'உடம்பு காங்கையா இருக்கு. எண்ணெ தேச்சுக் குளிக்கணும்.'*

***காசாணி அண்டா:*** *காது வைத்த அண்டா. (இருபுறமும் பிடி உள்ளது)*

***காட்டம்:*** *ஆத்திரம். கோபம். ஆவேசம். 'காட்டமாகப் பேசி காரியத்தைக் கெடுத்துராதே.'*

***காடேத்துதல்:*** *காடேற்றுதல். மரணம் அடைந்ததற்கு அடுத்த நாள் இடுகாடு சென்று எரிந்து போன எலும்பு, சாம்பலை புனிதநீரில் கரைப் பதற்கு எடுத்துவரும் சடங்கு.*

***காப்பு கட்டுதல்:*** *கோயில்களில் நடத்தப்படும் முதல்நாள் திருவிழா.*

***காமா சோமான்னு:*** *குழப்பமாக. அவசரமாக. ஏதோ ஒரு வகையில் செயல்படுவது.*

***காணியாச்சி:*** *பரம்பரைச் சொத்து. 'இது பொது இடம். உங்க காணியாச்சி இல்லை.'*

***காய்ச்சி ஊற்றுதல்:*** *இன்ப, துன்ப நிகழ்ச்சிகளை ஒட்டி நெருங்கிய உறவினர்களுக்குத் தாய் வீட்டார் பெண்வழி உறவுக்குத் தரும் விருந்து.*

***காரியக்காரர்:*** கோயில் அறங்காவலர்.

***காரியக் கிறுக்கு:*** உள்நோக்கோடு அல்லது சில காரணங் களுக்காக கிறுக்கு போன்று பாவனை செய்வது, நடிப்பது.

***காளாஞ்சி:*** சுவாமி, அம்மன் திருவீதி உலா முடிந்தவுடன் தீபா ராதனை, மண்டகப்படிதாரருக்கு பரிவட்டம், காளாஞ்சி வழங்கல் நடை பெறும். தேங்காய் அரைமூடியில் வெற்றிலை, பாக்கு, குங்குமம், திருநீறு வைத்து கோவில் சம்பிரதாயப்படி அர்ச்சகர் வரிசையாக வழங்குவது காளாஞ்சி. முதலில் யார் காளாஞ்சி பெறுவது என்பதில் சர்ச்சைகள் எழு வது உண்டு. கழக அகராதியில் இந்த சொல்லுக்கு எச்சிற்படிக்கம் என்ற பொருள் தரப்பட்டிருக்கிறது.

***கான்:*** சாக்கடை. 'கானில் விழுந்ததை எடுக்காதே.'

## கி

***கிட்ட:*** அருகே. 'கிட்ட இருந்து பார்த்தா நல்லா தெரியும்.'

***கிட்டங்கி:*** பல வட்டிக் கடைகள் உள்ள கட்டிடம். வணிகப் பொருள்களின் கிடங்கான கிட்டங்கி என்ற சொல் நகரத்தார் வட்டித் தொழிலுக்கு மாறிய பின்பும் பயன்படுத்தப்பட்டது.

***கிடாரம்:*** வாய் அகன்ற, குடம் போன்ற வடிவுள்ள ஆளுயரப் பாத்திரம். முற்றத்தில் விழும் மழைநீரைச் சேகரிக்க உதவுவது.

***கிண்ணி:*** சாப்பிடும்போது வட்டியில் சாதமும் கிண்ணியில் காய்கறிகளும் பரிமாறப்படும். கிண்ணம். தட்டு .

***கித்தா:*** ரப்பர்.

***கித்தா தோட்டம்:*** ரப்பர் தோட்டம்.

***கிலுக்கி:*** ஒலிக்குறிப்புச் சொல். கிலுகிலுவென்று ஒலிக்கும் அம்புவடிவக் கருவி. மகரநோன்பின் போது பயன்படுத்தப்படுவது. எவர் சில்வர், வெள்ளி அல்லது தங்கத்தினால் ஆனது.

***கிளாக்காய்:*** ஊறுகாய் போடப் பயன்படும் புளிப்புகாய்.

***கிளை:*** சிநேகம். நெருக்கம். 'என் மகனும் அவள் மகனும் ரொம்பக் கிளை.'

***கிறக்கம்:*** இளைத்தல். 'ஆள் கிறக்கமாக இருக்கிறார்.'

***கிறுத்துறுவம்:*** குறும்பு. விஷமம்.

## கு

***குச்சு:*** ஒதுக்குப் புறமான சிறிய அறை. தீட்டான அறை. மாத விலக்கான பெண் அல்லது குழந்தை பெற்ற தாய் தங்குமிடம்.

***குடிபுகுதல்:*** புதுமனை புகுவிழா. கிரகப்பிரவேசம்.

***குட்டி:*** வேலைக்காரச் சிறுமி. 'சமையலுக்கு ஆள் இருக்கோ இல்லையோ பிள்ளை தூக்க, பாத்திரம் கழுவ, தரை மொழுக குட்டி வேணும். 'பார்க்க: மா.கண்ணப்பனின் 'குட்டி' கவிதை நூல்.'

***குட்டு:*** இரகசியம். 'குட்டு வெளிப்பட்டிருச்சி.'

***குட்டையோ நெட்டையோ:*** ஏறக்குறைய, கூடவோ குறை யவோ. 'வீடு நல்லா இருக்கு. குட்டையோ நெட்டையோ கிரயம் செய்துரு.'

***கும்பா:*** சாப்பிடும் பாத்திரம்.

***குதிரைக் கொட்டகை:*** நடுவில் உயர்ந்தும் இரு பக்கமும் சாய் வான அமைப்பும் கொண்ட பந்தல். மழைநீர் வழிந்தோட ஏதுவானது. மட்டக்காவணத்திலிருந்து வேறுபட்டது. 'இது மழைக்காலம். சமை யலுக்கு குதிரைக் கொட்டகைதான் போடணும். மட்டக்காவணம்னா அடுப்பு, விறகு நனைஞ்சிரும்.'

***குழையடித்தல்:*** காரியம் சாதிக்கும் நோக்குடன் மிகையாகப் புகழ்வது. 'மகனை வேலையிலே சேக்கணும்னு முதலாளியைக் குழை யடிக்கிறான்.'

***குலவாழும் பிள்ளை:*** குலம் வாழும் பிள்ளை - பேச்சுவழக்கு. குலம் வாழ பிள்ளை பிறக்க வேண்டும் என்பதற்காக திருமணத்தன்று குடத்தில் போட்டு மணமக்களை எடுக்கச் செய்யும் சடங்கு.

***குளுதாடி:*** ஊறுகாய், உப்பு, புளி போன்ற பொருள்கள் வைக்கப் பட்டிருக்கும் கருஞ்சிவப்பு நிற களிமண் பாத்திரம். அடிப்பகுதி குறுகி யும் நடுவில் அகலமாகவும் வாய் குறுகலாகவும் இருக்கும். பிற பகுதி களில் மாட்டுக்கு நீர் நிரப்பும் தொட்டிக்கு இப்பெயர் வழங்குகிறது.

***குறிச்சி:*** நாற்காலி. 'செய்கோன் குறிச்சி.'

***குறிப்பு:*** தினசரி வரவு செலவுகளைத் குறிக்கும் கணக்குப்புத்தகம். Day Book.

### கூ

***கூடமாட:*** துணையாக. 'கூடமாட வேலை செய்யணும்.'

***கூடியாக்கி உண்ணுதல்:*** உறவினர் ஒன்று சேர்ந்து சமைத்து உண்ணுதல். திருமணத்திற்கு முதல்நாள் கூடியாக்கி உண்டு நிகழ்ச்சியைத் தொடங்குதல்.

***கூடு:*** காகித கவர் (cover).

***கூட்டு:*** தரையைப் பெருக்கு.

**கூட்டு:** காய்கறி செயல்முறை.

**கூட்டு:** பங்கு. தொழிலில் கூட்டு.

**கூட்டுமாறு:** விளக்குமாறு. துடைப்பம்.

**கூட்டுநாட்டு:** 'அண்ணன் தம்பிக்குள் கூட்டுநாட்டு இல்லை' உறவு இல்லை. சுப, துக்க நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது இல்லை.

**கூட்டு வட்டி:** வட்டிக்கு வட்டி. காம்பவுண்ட் வட்டி.

**கூதரைப்பயல்:** ஏமாளி.

**கூதல்:** குளிர். 'கூதலடிக்குது. வெளிய போகாதே.'

## கெ

**கெச்சல்:** ஒல்லியாக, சதைப் பிடிப்பில்லாமல் இருப்பது. 'கெச்சலான ஆள்.'

**கெத்து:** ஆற்றல். செல்வாக்கு. மரியாதை.

## கை

**கைபழகுதல்:** தொழிலில் பயிற்சி பெறுதல்.

**கைநீளுதல்:** திருடுதல். களவாடுதல். 'அவனுக்குக் கை நீளம்.'

**கையாரவல்:** கைகாவல். அவசரத் தேவைக்கு.

## கே

**கேறுது:** முட்டையிடும் சமயம் கோழி எழுப்பும் ஒலி.

**கேதம்:** ஏதம். துஷ்டி. துக்கம் விசாரித்தல்.

**கேத்தல்:** நீண்ட, வளைந்த குழல் போன்ற மூக்கு உடைய பாத்திரம்.

**கேனப்பயல்:** அறிவில்லாதவன். முட்டாள். தமிழகத்தில் பரவலாக வழங்கும் சொல்.

## கொ

**கொச்சிநாய்க் கயிறு:** கம்பளி நூல்.

**கொங்கஞ்சுங்கை வங்கி:** மலேயா தமிழர்கள் ஹாங்காங் ஷாங்காய் வங்கியை இவ்வாறு குறிப்பிடுவார்கள்.

**கொங்காப்பயல்:** வசைச் சொல். நேர்மையில்லாதவன். கெட்டவன். மடையன்.

**கொட்டாப்புளி:** மரத்தாலான சுத்தியல். தச்சர் பயன்படுத்துவது.

**கொட்டான்:** ஓலையால் முடைந்த சிறிய பெட்டி.

**கொணட்டு:** சச்சரவு, வம்பு, தொல்லை கொடுக்கும் இயல்பு. பிணக்கு.

**கொட்டெறிஞ்சு குதி போடுறது:** அகங்காரமாக நடந்து கொள்வது. சலசலப்பு ஏற்படுத்துவது.

**கொண்டி:** போக்கிரி. அடங்காப்பிடாரி. கொண்டி மாடு. ஏய்த்துத் தின்று வெட்டியாகத் திரிபவன்.

**கொண்டு விற்றல்:** பொருள்களை வாங்கி வெளியூரில் விற்பது - பெரும்பாலும் அயல் நாட்டில்.

**கொப்பி கொட்டுதல்:** மாட்டுப் பொங்கலன்று சிறுமிகள் விளக்குச்சட்டியில் உள்ள பொருள்களை வண்ணார் வீட்டில் கொடுத்து விட்டு கோவிலுக்குச் சென்று வருதல்.

**கொய்யாக்கட்டை:** மூடப்பட்ட சன்னல்கள் திறந்து விடா மலிருக்க சுழலும் ஆணியில் பொருத்தப்படும் சிறிய மரத்தடுப்பு.

**கொறநாட்டுக் கொட்டடி:** மாயவரம் அருகே கொறநாட்டில் நெய்யப்பட்ட கோடுகள் போட்ட சேலை.

**கொழுதுனா வண்டி:** பேச்சுவழக்கு. கொழுந்தன் பெண்டிர் என்பதன் மரூஉ. ஓரகத்தி. கணவனின் சகோதரர் மனைவி.

**கொன்னவாய்:** திக்குவாய். பாண்டிய நாட்டிற்குப் பொதுவான சொல்.

## கோ

**கோக்காலி:** உயரமான ஸ்டூல். கோக்கப்பட்ட காலை உடையது.

**கோக்குமாக்கு:** ஏமாற்று வேலை. 'கோக்குமாக்கு செஞ்சே ஏழு தலைமுறைக்கு பணம் சேர்த்திட்டான்.'

**கோசா:** எஸ்டேட் வரியைத் தீர்மானிக்க அளவெடுத்தல். மலேசி யாவில் வழங்கும் சொல்.

**கோஞ்சல்:** முன்பக்கம் அகலமாகவும் பின்பக்கம் சிறிது சிறிதாகக் குறுகியும் இருக்கும் இடம்.

**கோட்டப் பெட்டி:** கோட்டைப் பெட்டி. கோட்டை கட்டிய நெல்லைத் தூக்கிவரப் பயன்படும் ஓலைப்பெட்டி.

**கோணாமாணா:** ஒழுங்கற்ற, கோணலான.

**கோப்பி, கோப்பி மங்கு:** காப்பி, காப்பி கோப்பை.

***கோயில் காளை:*** கோயிலுக்கு நேர்ந்து விடப்பட்ட காளை. அடங்காதவன். வீண்பொழுது கழிப்பவன்.

***கோளாறு:*** கெடுதல். சிக்கல். 'அவனுக்கு உடம்பில் ஏதோ கோளாறு. டாக்டரைப் பாக்கச் சொல்லு.' கரிசல் பகுதியிலும் நாஞ்சில் பகுதியிலும் கோளாறானவன் என்றால் திறமைசாலி என்று பொருள்.

## ச

***சகடை:*** மெதுவாக நகரும் வண்டி. திருவிழாவில் விக்கிரகங்களை வைத்து ஊர்வலம் வரும் வண்டி. மெதுவாக வேலை பார்ப்பவர்களைக் குறித்துக் கூறும் சொல். 'அவ சரியான சகடை.'

***சகட்டுமேனிக்கு:*** முழுவதும். ஒட்டு மொத்தமாக.

***சஞ்சாயம்:*** தினக் கூலி.

***சங்காத்தம்:*** தொடர்பு, உறவு.

***சடங்கான பெண்:*** பூப்பெய்தியவள். வயதுக்கு வந்த பெண்.

***சடங்கு கழிப்பது:*** பெண் பூப்பெய்திய சில நாட்களில் சடங்குகளை நடத்தி பெண்ணை வீட்டிற்குள் அழைத்து வருவது.

***சட்டாம்பிள்ளை:*** அறுபது ஆண்டுகள் முன்பு திண்ணைப் பள்ளிக் கூடங்களில் சட்டாம்பிள்ளை என்று அழைக்கப்படுபவர் பகுதிநேர ஊழியர். ஆசிரியருக்கு உதவியாக அல்லது ஆசிரியர் இல்லாதபோது மாணவர்களைக் கவனித்துக் கொள்பவர். பொது அகராதிகளில் இந்த சொல்லிற்கு வகுப்பு மாணவர் தலைவன், மானிட்டர் என்று பொருள் தரப்பட்டிருக்கிறது.

***சட்டிகாமம்:*** வங்காள தேசத்தில் உள்ள சிட்டகாங் நகர்.

***சண்டை சாடிக்கை:*** தகராறு, வம்பு,வழக்கு.

***சமால்:*** வங்கியில் தாக்கல் செய்யப்படும் ரொக்கம், செக். 'சார்ட்டார் வங்கி பற்று சமால் ரொக்கம் ரூபாய் மூவாயிரம் . இதுவும் பற்று முன் தேதியில் புதிய விடுதல் சமால் செக் ஒண்ணுக்கு ரூபாய் பதினெட்டு காசு தொண்ணுத்தி ஆறு. (ப.சிங்காரம், புயலிலே ஒரு தோணி)

***சம்படம்:*** சம்புடம். மூடி போட்ட சிறிய உலோக டப்பி.

***சம்பளச் சீட்டு:*** வெளிநாட்டில் உள்ள வட்டிக்கடைக்கு மேலாளாக (மானேஜர்) நியமிக்கப்பட்டவர் கடை உரிமையாளருக்கு மூன்று வருட சம்பளத்தைக் குறிப்பிட்டு எழுதித்தரும் உறுதிச்சீட்டு.

***சத்தகம்:*** கிழிக்க, கீறப் பயன்படும் கருவி, ஒரு பக்கம் அகன்றும் வளைந்தும் மறுபக்கம் கூராகவும் அமைந்த இரும்புக் கருவி. தேங்காய் கீறவும் ஓலை கிழிக்கவும் பயன்படுவது.

***சத்தாகர்ணம்:*** *பத்தாம் நாள் திருவிழா. சப்தாபரணம் என்ற வடமொழிச் சொல்லின் மரூஉ.*

***சத்துமாவு:*** *உடலுக்கு ஊட்டம் தரும் மாவு.*

***சத்தவடம்:*** *செத்தவடம். சிறிது நேரம்.*

***சந்தனப் பேலா:*** *சந்தனம் வைத்திருக்கும் பாத்திரம். பெரும் பாலும் எவர்சில்வர் அல்லது வெள்ளியில் செய்யப்பட்டிருக்கும்.*

***சப்பரம்:*** *வாகனங்கள் வைத்து இழுக்கப்படும் வண்டி.*

***சப்பாத்து:*** *மிதியடி. காலணி என்பதன் தமிழ் வடிவம். ஈழம், மலேசியாவில் வழங்கும் சொல்.*

***சல்லிப்பயல்:*** *கீழ்த்தரமானவன்.*

***சரப்பலகை:*** *பொருள்களை அடுக்க சுவரில் மேலே செருகப் படும் பலகை.*

***சவக்களிச்சுப்போச்சு:*** *ருசியில்லாமல் நீர்த்துப் போதல்.*

***சவண்டி:*** *மரணம் நிகழ்ந்து சில நாட்களில் நடைபெறும் வைதீகச் சடங்குகள்.*

***சவலைப்பிள்ளை:*** *முதல் குழந்தைக்கு அடுத்து இடைவெளியில் லாமல் பிறந்த கைக்குழந்தை.*

***சவுக்கை:*** *ஓலை வேயப்பட்ட சதுரமான கூடம்.*

***சளிச்சு முறைச்சு:*** *ஊசிப்போய்விட்டது. கெட்டுப் போய் விட்டது.*

***சளிச்சுப் போச்சு:*** *கெட்டுப் போய்விட்டது. 'நேத்து வைச்ச குழம்பு சளிச்சுப் போச்சு.'*

***சள்ளை:*** *'அவனுக்கு சள்ளைக் கடுப்பு.'*

***சள்ளைக்கடுப்பு:*** *உடல் பாகங்களில் வலி, வேதனை, உடல் நிலை சரியில்லை.*

## சா

***சாகக் கொடுத்தவள்:*** *(கணவனை இழந்தவள்) விதவை.*

***சாடை:*** *மறைமுகமாக குறை சொல்லுதல். 'மருமகளை சாடை சொல்றதே அவளுக்கு வேலை.'*

***சாத்துப்படி:*** *கோவில் விக்ரகங்களுக்கு மலர்கள், நகைகள் முதலியவற்றால் செய்யப்படும் அலங்காரம்.*

***சாயரட்சை:*** *ஆலயத்தில் மாலை நேர வழிபாடு.*

***சாந்துச்சட்டி:*** *கட்டிட வேலைக்குப் பயன்படும். மணல் கலவை எடுத்துச் செல்லும் சட்டி. சென்னையில் பாண்டு என்று குறிப்பிடப்படு கிறது.*

***சாமான் பரப்புதல்:*** *திருமணத்தை ஒட்டி மணப்பெண்ணிற்குத் தரப்படும் சீர்களை அழகாக வரிசைப்படுத்தி உறவினர்களின் காட்சிக்கு வைத்தல்.*

***சாயல்:*** *ஒத்த தன்மை, தோற்றம்.*

***சிச்சிலுப்பை:*** *ஒரு வகை அம்மை நோய். விச்சிலுப்பி என்றும் சொல்லப்படும்.*

***சித்தப்ப முண்டி:*** *(பேச்சுவழக்கு) சித்தப்பா மனைவி. சித்தப்பன் பெண்டிர் என்பதன் மரூஉ.*

***சிங்கியடித்தல்:*** *செலவிற்கு சிரமப்படுதல். 'நானே சிங்கியடிக் கிறேன். எங்கிட்ட கடன் கேக்குற!'*

***சிராப்பொடி:*** *மரத்தூள். சிராய்த்தூள்.*

***சிலாங்கமா:*** *தாராளமாக. சுளுவாக. 'வாழைப்பழம் சாப்பிட்டா சிலாங்கமா வெளிக்குப் போகும்.'*

***சிலாம்பு:*** *கூர்மையான குண்டூசி போன்ற மரத்துண்டு. 'நகக் கண்ணுல சிலாம்பு குத்திருச்சு.'*

***சிலேட்டு விளக்கு:*** *மேலே வெளிர் நீல நிறமுள்ள கிளாஸ் உள்ள வெள்ளி விளக்கு. மங்கல நிகழ்ச்சிகளில் வளவு அறை உட்பகுதியில் தீபம் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும்.*

***சிறுவக்கட்டை:*** *அவலட்சணம். 'சிறுவக்கட்டை மூஞ்சி! அவளப் பாத்தாலே மூணு வேளைக்கு சோறு எறங்காது.'*

## சீ

***சீகாணி:*** *சிறிய ஆணி.*

***சீண்ட்ரம்:*** *வசைச் சொல். தரங்கெட்டவன். சனியன். தொல்லை தருபவன்.*

***சீடி, சீடிப்படி:*** *மாடிவீடு. கைப்பிடி வைத்த மாடிப்படி, மரத் தாலான மாடிப்படி.*

***சீப்படுதல்:*** *மலிந்து கிடத்தல் . சீரழிதல்.*

***சீம்பால்:*** *கன்று ஈன்றவுடன் மாடு கறக்கும் பால்.*

***சீமை இலந்தப்பழம்:*** *ஆப்பிள்.*

***சீரழியுது:*** *ஏராளமாக. தாராளமாக. 'சந்தையில கத்தரிக்கா சீரழியுது. வாங்க ஆளில்லை.'*

***சீரழித்து விட்டான்:*** *கெடுத்து விட்டான்.*

***சீர்பாதம் தாங்குபவர்:*** *சுவாமி வாகனம் தூக்குபவர்.*

## சு

***சுணக்கம்:*** *கால தாமதம். 'சாமி புறப்பாட்டில ஏன் சுணக்கம்?'*

***சுதை:*** *சாந்து. மணலும் சுண்ணாம்பும் கலந்த கலவை. சிலை, பொம்மை செய்யப் பயன்படுவது.*

***சும்மா இருக்கிறாளா?:*** *'மருமக சும்மா இருக்காளா? மக சும்மா இருக்காளா?. (கருவுற்றிருக்கிறாளா?)*

***சுருக்கா:*** *சீக்கிரமாக.*

***சுருட்டுதல்:*** *திருடுதல். களவாடுதல்.*

***சுயம்பாகி:*** *கோவில் மடப்பள்ளியில் சமையல் வேலை செய்பவர்.*

## சூ

***சூட்டிகை:*** *திறமை. சுறுசுறுப்பு.*

***சூட்டடிப்பு:*** *களத்தில் நெல்மணிகளைப் பிரித்தெடுக்கும் பணி.*

***சூத்தை:*** *புழுவுள்ள காய். 'சூத்தைக் கத்திரிக் காயை வாங்கிட்டு வர்ரீங்களே.'*

## செ

***செய்கோன் நாற்காலி:*** *மரச்சட்டத்தில் பிரம்பு பின்னிய சாய்வு நாற்காலி.*

***செல்:*** *கடன். 'பெரிசா சொத்து இல்லை. செல்லும் இல்லை.'*

***செல் வைத்தல்:*** *பிராமிஸ்ஸரி நோட்டு காலவதியாகாமல் இருக்க சிறிது தொகை செலுத்தி அதற்கு உயிரூட்டுதல்.*

***செவ்வாய்:*** *தேர்த் திருவிழா. 'மகளையும் மாப்பிள்ளையையும் செவ்வாய்க்கு அழைக்கணும்.'*

***செட்டுச் சமையல்:*** *விருந்திற்கு சமைக்கும் சமையல்குழு. 'என்ன இது! செட்டுச் சமையல்காரன் மாதிரி பொறியல்ல எண்ணெ ஊத்துற?'*

## சே

***சேக்கு:*** *கிராப் வைத்துக் கொள்வது.*

***சேர்க்கை:*** *கடவுளர் விக்கிரகங்கள் திருவீதி உலா முடிந்தவுடன்*

கோவிலுக்குத் திரும்புதல் சேர்க்கை சேர்வது என்று வழங்கப்படுகிறது.

***சேர்ந்தாற்போல:*** *சதைப்பிடிப்பாக. குண்டாக. குடும்பத்தில் ஒட்டுறவுடன் இருப்பது. 'மாமியாரும் மருமகளும் சேந்தாப்போல இருக்காக.'*

***சேர்மானம்:*** *பொருள்கள் கலவை விகிதம். உணவு வகைகளின் தயாரிப்பில் பயன்படும் சொல்.*

***சேவா:*** *வாடகை(பெரும்பாலும் மலேசியாவில் வழங்கும் சொல்)*

## சொ

***சொக்கப்பனை:*** *கார்த்திகைத் திருவிழாவில் கோவில் எதிரில் அல்லது அருகில் எரிக்கப்படும் காய்ந்த பனையோலைகளாலான கூடு.*

***சொக்குப்பொடி:*** *மயங்க வைக்க உதவும் பொடி. 'புருஷனுக்கு சொக்குப்பொடிபோட்டு வச்சிருக்கா.'*

***சொட்டை:*** *குறை சொல்லுதல்.*

***சொரணை:*** *ரோஷம். 'சூடு சொரணை வெட்கம் இருக்கா?'*

***சொல்லச் செய்ய வேண்டியது:*** *பெரியவர்களுக்கு கடிதம் எழுதும் போது' உங்கள் உதவியாளரிடம் சொல்லிச் செய்ய வேண்டியது' என்ற பொருள்படும் சொல்லாட்சி.*

***சொளகு:*** *முறம். சுளகு. பேச்சுவழக்கில் சொளகானது.*

***சொறசொறன்னு:*** *சீரற்ற பரப்பு. 'தரை சொறசொறன்னு இருக்கு.*

## சோ

***சோத்துப்பலகை:*** *சோறு வடிக்கப் பயன்படும் அரசிலை வடிவான பலகை.*

***சோமவாரம்:*** *திங்கட்கிழமை. கார்த்திகை மாதம் கடைசி திங்கட் கிழமையன்று நடைபெறும் விழா. சொக்கப்பனை உண்டு.*

***சோமாத்தி:*** *சுமைமாற்றி. உதவி. 'நான் ஒத்த ஆளா எல்லா வேலையும் செய்யணும், ஒரு சோமாத்தி கிடையாது.'*

## த

***தகான் பண்ணுவது:*** *சமாளிப்பது. 'போட்ட திட்டத்திற்கு மேலே ஆள் வந்திட்டா சமையல் மேஸ்திரிக்கு தகான் பண்ணத் தெரியணும்.'*

***தச்சு செய்வது:*** *காலி மனையில் வீடு கட்டத் துவங்கும்போது செய்யும் பூமிபூஜை.*

***தடிமன், தடுமன்:*** *ஜலதோஷம். 'குளிர் காலத்துல ராத்திரி மோர் சாப்பிட்டா தடுமன் பிடிக்கும்.'*

***தடுக்கு:*** *சாப்பிடுவதற்கு உட்காரும் ஓலை இருக்கை. சதுர வடிவம் உள்ளது. சிறிய பாய்.*

***தட்டுக்கெட்டு:*** *சீர் கெட்டு. 'திட்டம் போட்டு செய்யலைன்னா வேலை தட்டுக்கெட்டுப் போகும்.'*

***தட்டுக்கெட்டவ:*** *ஒழுக்கமில்லாத பெண்.*

***தண்டல்காரன்:*** *செய்தி சொல்லும் கோவில் சிப்பந்தி. கோவில் நிர்வாகி ஆணைப்படி பணியாற்றுபவர்.*

***தண்ணிக்குழம்பு:*** *சாம்பாரை விட இளக்கமான குழம்பு. ரசத்தை ஒத்தது.*

***தத்துவாமடை:*** *வயலில் தேவைக்கு அதிகமாகத் தேங்கியிருக்கும் நீரை வெளியேற்ற அமைக்கப்படும் மடை.*

***தம்பிவண்டி:*** *தம்பியின் பெண்டிர் என்பதன் மரூஉ. தம்பியின் மனைவி.*

***தப்பிலித்தனம்:*** *அற்பத்தனம். கேவலமான புத்தி.*

***தலையில் மொளகாய் அரைத்தல்:*** *அடுத்தவரைப் பயன் படுத்தி, தன் வேலைகளைச் செய்துகொள்வது.*

***தவறிப் போனாக:*** *இறந்து போனார்.*

***தவணை வட்டி:*** *குறிப்பிட்ட காலத்திற்குரிய வட்டி.*

***தளிகை:*** *சமையல். 'அம்மனுக்கு அர்ச்சனை, அபிஷேகம் மட்டும் தானா? தளிகைக்கு ஏதாவது கொடுத்திருக்கீங்களா?*

***தள்ளிவைப்பது:*** *விலக்கிவைப்பது. சமூகத்தை, ஊரைவிட்டு ஒதுக்கி வைப்பது. 'அவனை பங்காளிக தள்ளி வச்சிட்டாக' 'அவளை ஆம்பிளையான் தள்ளிவச்சிட்டான்.'*

***தன்மையான ஆள்:*** *தரமானவர். பண்பாடு உள்ளவர்.*

***தன்னக் கட்டுதல்:*** *சமாளித்தல். ஒத்துக்கொள்ள வைத்தல்.*

***தன்னப் போணி:*** *தன்னைப் பேணி. சுயநலமிக்கவர்.*

***தன்னொத்துப் போவது:*** *லாபம், நட்டமின்றி நடப்பது.*

## தா

***தாம்பாளம்:*** *தட்டு*

***தாலி வாங்குதல்:*** *கணவன் இறந்தவுடன் மனைவி தாலியைத் துறக்கும் சடங்கு.*

***தாவா:*** வழக்கு.

***தாய பிள்ளைக:*** தாய்வழி உறவினர்கள்.

***தாளங்காய் போட்டு மோளங்காய் அடிக்கிறாய்:*** அங்கும் இங்கும் பிராக்குப் பார்த்து சாவதானமாக வருதல்.

***தானப்படியாக:*** அதிகமாக. மிகையாக.

## தி

***திட்டம் கட்டுதல்:*** கணக்கு எழுதி முடித்து இருப்பு கட்டுதல்.

***திட்டம்:*** வேண்டிய அளவு. 'மதியம் ஆயிரம் பேருக்கு சாப்பாடு திட்டம்.'

***திட்டாந்தரம்:*** அபாண்டமாக, அநியாயமாக.

***திண்டு:*** கனமான உருளை வடிவ அல்லது சதுரத் தலையணை.

***திருகுதாளம்:*** ஏமாற்றுதல்.

***திமிசுக்கட்டை:*** தரையில் மேடுபள்ளத்தை சமன் செய்யப் பயன்படும் கட்டிட வேலைக் கருவி. மரத்தாலானது.

***திருப்புளி:*** திருகியும் திருப்பியும் ஆணியை முடுக்க - கழற்ற தச்சர் பயன்படுத்தும் கருவி. Screw - Driver.

***திருகை:*** தானியம் அரைக்க உதவும் கல்யந்திரம்.

***திருப்பூட்டுதல்:*** திருமாங்கல்ய தாரணம். திருமணச் சடங்கு. மங்கலநாணை மணமகன் மணமகளுக்குப் பூட்டுதல்.

***திருவனந்தல்:*** ஆலயத்தில் அதிகாலை வழிபாட்டு நிகழ்ச்சி.

***திருவாச்சி:*** திறந்த வாயுடன் உள்ள சிங்கமுகம். விக்கிரகங்களின் பின் அமைக்கப்படும் அலங்கார வளைவு.

## தீ

***தீபக்கால்:*** தீபம் காட்டப் பயன்படும் கருவி.

***தீர்த்துக் கொடுத்தல்:*** முழுக் கடனையும் திருப்பித் தர இயலாத நிலையில் அசலில் குறிப்பிட்ட சதவிகிதத்தைப் பெற்றுக்கொண்டு விடுவித்தல்.

***தீர்த்தங்குடித்தல்:*** மருந்து குடித்தல். முதன்முறை கர்ப்பமுற்ற பெண்ணுக்காக நடைபெறும் நிகழ்ச்சி. வளைகாப்பு போன்றதொரு சடங்கு.

***தீர்த்து விடுதல்:*** விவாகரத்து செய்தல்.

## து

**துப்பட்டி**: போர்வை

**துப்பு:** சாமர்த்தியம். 'சம்பாதிக்க துப்பில்ல. ஆனா வாய்ப்பேச்சில மன்னன்.'

**துப்புக் கெட்டவன்:** திறமையில்லாதவன்.

**துராவை:** கீழ்த்தரமானவன். திராவை. தரங்கெட்டவன்.

**துருசு:** விரைவாக. 'துருசாவா.' 'வெரசாவா.'

**துரட்டி:** துறட்டி. ஒருமுனையில் கொக்கி போன்ற சிறுகத்தி பொருத்தப்பட்ட நீண்ட கம்பு. காய் பறிக்கப் பயன்படுவது.

## தூ

**தூக்குச் சட்டி:** கைப்பிடி, வளையம் உள்ள எவர்சில்வர் அல்லது பித்தளைப் பாத்திரம்.

**தூப்பாக்குழி:** கழிவு நீர்,மழைநீர் வெளியேறும் தூம்பு.

## தெ

**தெகிட்டு:** தகராறு. பொருந்தாமை.

**தேட்டாளன்:** அதிர்ஷ்டமில்லாதவன். கேலியாகச் சொல்லும் வார்த்தை.

**தேங்காய்ச்சில்:** தேங்காய் ஓடு - உடைந்த துண்டு.

**தேங்காய்ப்பூ துண்டு:** டர்க்கிடவல் என்று சொல்லப்படும் துண்டு.

**தேங்காநெய்:** தேங்காய் எண்ணெய். எள்+நெய்=எண்ணெய் தேங்காய்+நெய்= தேங்காநெய். இந்த சொல் இப்போது வழக்கில் இல்லை. மண்ணெண்ணை, தேங்காஎண்ணை என்பன தவறான சொல்லாட்சி.

**தேவட்டை:** தேய்ந்த நாணயம்.

**தேவலை:** தாழ்வு இல்லை. பரவாயில்லை.

**தேற விளைஞ்ச காய்:** முற்றிய காய்.

## தொ

**தொக்கடி:** குறைந்த விலையில் வாங்குவது.

**தொங்கான்:** பெரிய பாய்மரப் படகு. (மலேசியாவில் வழங்குவது)

***தொண்ணாந்துக்கிட்டிருப்பது:*** *சலிப்புடன் காத்திருப்பது. எதிர்பார்த்து இருப்பது. 'எத்தனை நாள் இனியும் தொண்ணாந்து கொண்டு திரிய வேண்டும் என்று தெரியவில்லை.' (நாஞ்சில் நாடன் - மிதவை-நாவல் )*

***தொலைக்குப் போவது:*** *சம்பாதிப்பதற்காக வெளிநாடுகளுக் குச் செல்வது.*

***தொறட்டு:*** *வம்பு வழக்கு.*

***தொறுதொறுன்னு:*** *'தொறுதொறுன்னு தண்ணீர் வடியுது. பீலி (பைப்) மூட வரல்லை.' முனகுவது என்றும் பொருள்படும்.*

## தோ

***தோது:*** *இந்த சொல்லுக்கு பல பரிமாணங்கள் உண்டு. சில எடுத்துக்காட்டுக்கள்:*

*1. 'அண்ணே நூறு ரூபா கொடுங்க.' 'இப்ப தோதில்லை.'*

*2. 'நாளை காரைக்குடி வாங்க.' 'இப்ப தோதுப்படாது.'*

*3. 'படைப்பை (படையலை) புதன்கிழமை வச்சிக்கலாமே'*

*'நாள் தோதில்லை, மனைவிக்கு' (மாதவிலக்கு சமயம்)*

*4. 'என்ன தோது? (வரதட்சணை)'*

*'ஐஞ்சு லட்சம் 3 வயிர நகை.'*

***தோதுவாது:*** *சமயம் பார்த்து. வசதி பார்த்து.*

***தோதுபோல:*** *சௌகரியம் போல.*

***தோலிருக்க சுளை முழுங்கி:*** *அசகாய சூரன். ஏமாற்றும் வித்தை யில் நிபுணன். சுவடு தெரியாமல் திருடுபவன்.*

## ந

***நகர விடுதி:*** *நகரங்களுக்கு வருபவர்கள் தங்கும் விடுதி.*

***நஞ்சபயக:*** *தரமில்லாதவன், கஞ்சன். 'அந்த நஞ்சபய கிட்ட உதவி கேட்கப் போனியே. உன்னைச் சொல்லணும்.'*

***நடப்பு:*** *வழக்கம். இன்றைய நிலை.*

***நடப்பு வட்டி:*** *இன்றைய வட்டி விகிதம்* Day to Day Rate Of Interest.

***நடப்புக் காரியக்காரர்:*** *தற்போதைய கோவில் அறங்காவலர்.*

***நமத்துவிட்டான்:*** *நச்சரித்துவிட்டான்.*

***நடையன்:*** *மிதியடி, காலணி. செருப்பு என்ற சொல் சில*

நேரங்களில் வசையாகப் பயன்படுத்தப் படுவதால் 'நடையன்' மாற்றுச் சொல்லாகப் பயன்படுகிறது.

**நடைசாத்துதல்:** கோவில் சந்நிதி சாத்தப்பட்டிருப்பது.

**நடை திறத்தல்:** கோவில் சந்நிதி திறந்திருப்பது.

**நட்டங்குத்தல்:** நேராக.

**நலியாமல்:** ஓசைப்படாமல். தெரியாமல்.

**நலியாநத்தை:** ஓசைப்படாமல் ஒரு காரியத்தைச் செய்பவர்.

**நல்லது:** நல்ல பாம்பு. பாம்பு என்ற சொல்லை உச்சரிக்கக் கூடாது என்பதற்காகப் பயன்படுத்தப்படும் சொல்.

**நல்லா வைத்தல்:** மங்கலச் சொல். 'விளக்கை நல்லா வை' விளக்கை அணைப்பதை மங்கலமாகச் சொல்லுதல்.

**நருவிசு:** கச்சிதம். கறார்.

**நறுங்கிப்போயிருக்கிறான்:** உடல் தளர்ந்து பலவீனமாக இருக்கிறான்.

**நறுவிசா இல்லை:** சிறிது கூட. துளிக்கூட இல்லை.

## நா

**நாண்டுகிட்டு சாவது:** தூக்கிட்டுக்கொண்டு இறப்பது.

**நாக்ளாம்பூச்சி:** நாக்குப் பூச்சி. குடலில் இருக்கும் புழு.

**நாக்கைப் பிடுங்கி நஞ்சுச்சுட்டி வைக்கிறா:** கொடுமைப் படுத்துகிறாள்.

**நாமிர்தாப்பயல்:** நாமுர்தாப் பயல். அயோக்கியன். நேர்மை இல்லாதவன்.

**நாதாங்கி:** சங்கிலியுடன் கூடிய தாழ்ப்பாள்.

**நாறப் பிழைப்பு:** கேவலமான பிழைப்பு.

## நி

**நிலக்கடலை:** வேர்க்கடலை,மணிலாக் கொட்டை.

**நிலந் தெளிய:** அதிகாலை. மசண்டை. வெள்ளென. இரவின் இருள் பிரிகிற நேரம்.

**நிலுவை:** பாக்கி. கிடப்பு நிலை.

**நிமிட்டாம் பழம்:** கையை அல்லது கன்னத்தைக் கிள்ளுதல். 'வாத்தியார் நிமிட்டாம்பழம் கொடுத்தார்னா வலி தாங்க முடியாது.'

## நீ

***நீக்குப் போக்கு:*** *சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல ஒத்துப் போவது. விட்டுக் கொடுப்பது.*

***நீச்சத் தண்ணி:*** *நீராகாரம். கஞ்சித்தண்ணீர்.*

***நூலாம் படை:*** *ஒட்டடை.*

***நீர்க்கடுப்பு:*** *சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் வலி.*

## நெ

***நெஞ்சு கரித்தல்:*** *நெஞ்சில் சிறு வலி. அவஸ்தை.*

***நெளிவு சுளிவு:*** *அனுசரித்துப் போகும் போக்கு.*

***நெளிதல்:*** *முன்னும் பின்னும் அல்லது மேலும் கீழும் அசைதல். 'ஆடுறவ நல்லா நெளிக்கிறா.'*

## நை

***நைநைன்னு:*** *'குழந்தை ராத்திரி பூராவும் நைநைன்னு அழுதது.'*

## நொ

***நொட்டாங்கை:*** *இடது கை.*

***நொட்டு:*** *ஏளனச் சொல் 'டேய். சாக்லட் கொடுடா.' 'நொட்டு; தரமாட்டேன்.'*

***நொடித்துப் போவது:*** *தாழ்நிலை அடைதல். வியாபாரம் நொடித்துப் போய்விட்டது.*

***நொண்டை சொல்வது:*** *குறை சொல்வது. 'உங்க ஆத்தாளுக்கு நொண்டை சொல்றதுதான் வேலை.'*

***நொண்ணன்:*** *உன் அண்ணன்.*

***நொப்பச்சி:*** *உன் தந்தை.*

## நோ

***நோங்கலை:*** *விருப்பமில்லை.*

***நோட்டம்:*** *கவனித்துப் பார்த்தல். உளவு பார்த்தல்.*

***நோச்சி:*** *உன் மூத்த சகோதரி.*

***நோத்தா:*** *உன் தாய்.*

## ப

***பக்கிகள்:*** *குழந்தைகள். அவமதிக்கும் தொனியில் பயன்படுத்தப் படும் சொல்.*

***பங்காளி:*** *தந்தை வழி ஆண் உறவினர்கள்.*

***பங்காளி பகுத்தாளி:*** *சுற்றத்தார், உறவினர் 'பங்காளி பகுத் தாளியை அனுசரிச்சுப் போனா தான் ஊரில குடியிருக்க முடியும்.'*

***பசப்புதல்:*** *காரியம் நிறைவேற்றிக் கொள்ள நயமாக அல்லது மயக்கிப் பேசுதல் 'ஆம்பிளைக்குப் புத்தி வேணும். பொண்டாட்டி பசப் பிப் பேசுனா மயங்கிடப்படாது.'*

***பச்சை குத்துதல்:*** *மரணமடைந்தவரின் மகளோ மருமகளோ குந்தாணியில் நெல்லைப் போட்டு உலக்கையால் இடித்து அரிசியாக்கும் சடங்கு. ஈமச் சடங்கின் ஒரு பகுதி.*

***பஞ்சாங்கக்காரர்:*** *நாள் பார்க்கவும் சுபகாரியங்கள், ஈமச் சடங் குகள் நடத்தி வைக்கவும் கோவில் நிர்வாகத்தால் அமர்த்தப்பட்ட புரோகிதர்.*

***படுத்தடி:*** *அபாண்டமாக, திட்டாந்தரமாகப் பேசுவது.*

***படிமானம்:*** *கீழ்ப்படிதல். கட்டுக்குள் இருத்தல்.*

***படுமுடிச்சு:*** *அவிழ்க்க முடியாமல் போடப்படும் முடிச்சு.*

***பட்டுக்கிடப்பாய்:*** *வசைச் சொல். மரம் போல் பட்டு விழுவாய். 'பட்டுக்கிடப்பான், பாவிவறப்பான். அவனுக்கு ஒரு சாவு வரலையே.'*

***பட்டாசாலை:*** *உள் திண்ணை.*

***பட்டை கழறுதல்:*** *கடுமையான வேலை. உழைத்துச் சோர்தல்.*

***பணத்திருப்பு:*** *திருமணங்களில் உறவினர்களும் பங்காளிகளும் மொய் எழுதும் குறிப்பேடு. முன்பு ஓலையில் எழுதப்பட்டது. இப்போது நோட்டில் எழுதப்படுகிறது.*

***பண்டம்:*** *பொருள். 'கவனிக்காட்டா பண்டம் பாழாயிடும்.'*

***பண்டாரம்:*** *'வேல்பூசைக்கு பண்டாரம் வந்துதான் விபூதி போடணும்.' சுப, துக்க நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கேற்பவர்.*

***பண்டமில்லை:*** *விஷயமில்லை.*

***பணிக்கம்:*** *படிக்கம். எச்சில் உமிழும் கலம்.*

***பதத்துப் போய்விட்டது:*** *நமுத்துப் போய்விட்டது. 'தகர டின்ன கவனமா மூடிவை. இல்லாட்டா தேங்குழல் பதத்துப் போயிடும்.'*

***பதக்கு:*** *பதினாறு படி.*

**பதவிசு:** நிதானம். 'பதவிசான பொண்ணு. குடும்பத்துக்கு ஏத்தவ.'

**பதனமா:** நிதானமாக, மெதுவாக.

**பத்தி:** வளவு, இரண்டாங்கட்டு முற்றத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள தரைப் பகுதி. மேற்பத்தி, கீழ்ப்பத்தி.

**பத்துதல்:** விரட்டுதல். ஓட்டுதல். 'மாட்டைப் பத்து.'

**பந்தல்:** செட்டிநாட்டில் இது அமங்கலச் சொல். பிணப் பந்தலைக் குறிக்கும் சொல். 'அவனுக்கு பந்தல் போட நாள் வரலையே.' பந்தலை கொட்டகை என்றுதான் சொல்வார்கள்.

**பந்திக்கட்டு:** விருந்தினர்களுக்கு உணவு பரிமாறும் கூடம்.

**பந்திப்பாய், பந்திச் சமுக்காளம்:** விருந்தினர்கள் அமர்ந்து சாப்பிட பந்தியில் விரிக்கப்படும் பாய், சமுக்காளம்.

**பந்திவிசாரணை:** பந்தியில் சாப்பிடும் விருந்தினர்களை உபசரிப்பது. இதற்கென்று குழுக்கள் உண்டு.

**பராபரிப் பேச்சு:** காற்று வாக்கில் கிடைக்கும் தகவல். வதந்தி.

**பவிசு:** கௌரவம் மதிப்பு. ''அவ பவிசு தெரியாதா?''

**பழுக்காச் சேலை:** பழைய நூல் சேலை. பழுக்கச் சேலை என்பதன் மரூஉவாகலாம். உடுத்துப் பழகிய சேலை. நாள்தோறும் வீட்டில் கட்டுவது.

## பா

**பாக்கிசாக்கி:** கடன் பாக்கி.

**பாச்சோறு:** பாற்சோறு என்பதன் மரூஉ. வெல்லம், பால் இட்டுப் பொங்கும் பச்சரிசிப் படையல் சோறு.

**பாடையில் போக:** வசைச் சொல். 'அவன் பாடையில போக நாள் வரலையே.'

**பாட்டய்யா:** தாத்தாவின் அப்பா. பாட்டியின் அப்பா.

**பாட்டியாயா:** தாத்தாவின் அம்மா. பாட்டியின் அம்மா.

**பாண்டல்:** அசுத்தம், அழுக்கு. 'வீடு பாண்டலா கிடக்கு.'

**பாதாளக் கரண்டி:** கிணற்றில் விழுந்த வாளி, கயிறு. மற்ற பொருள்களை எடுக்க உதவும் வளைந்த இரும்பு கொக்கிகள் அமைந்த சாதனம்.

**பாய் சுருட்டுவது:** பிணப் பந்தலின் கீழ் இருக்கும் இறந்தவரின் உடலைத் தூக்கிய பிறகு கீழே விரித்திருக்கும் பாயைச் சுருட்டி வெளியே எறிந்து விடுவது. நெருங்கிய பெண் உறவினர் செய்யும் சடங்கு.

***பாவிவறப்பான்:*** *வசைச் சொல். பாவிப்பயல்.*

## பி

***பிக்கல்பிடுங்கல்:*** *தொல்லை, சிக்கல். 'நல்ல சம்பந்தம். பிக்கல் பிடுங்கல் இல்லை.'*

***பிடிமானம்:*** *கீழ்ப்படிதல். தகுதி. பிடிக்க உறுதியாக இருப்பது.*

***பின்னீடு:*** *பிற்காலத்தில்.*

***பிரப்பம்பாய்:*** *சிறிய பிரம்புத் துண்டுகளாலான பாய். 'பிரப்பம் பாயை நல்லா விரிச்சு விடு. சுருண்டிருக்கு. சம்பந்தப்புரம் வரப் போறாக.'*

***பிரார்த்தனை மண்டகப்படி:*** *நேர்ந்து கொண்டபடி கோவிலில் விழா நடத்தி தெய்வங்களை எழுந்தருளச் செய்வது.*

***பிருசுபிடி:*** *கிராக்கி செய்து கொள்ளுதல். 'பிருசு பிடிக்காதே. சும்மா சாப்பிடு.'*

***பிளவை:*** *கட்டி. புற்றுநோயின் தன்மையை அறியாதவர்கள் 'பிளவை' என்றார்கள்.*

***பிள்ளை கூட்டுதல்:*** *பிள்ளை இல்லாதவர் பங்காளி வீட்டுக் குழந்தையை ஸ்வீகாரம் செய்து கொள்வது.*

## பீ

***பீத்துதல்:*** *தன்னைப் பற்றிப் பெருமையாகப் பேசுவது.*

***பீத்தாதே:*** *தற்பெருமை பேசாதே.*

***பீத்தத்துணி:*** *கிழிந்த துணி. 'மாமியார் பீத்தத்துணி கூட வச்சிட்டுப் போகலை. எல்லாத்தையும் மககிட்ட கொடுத்திட்டா.'*

***பீயில அரிசி பொறுக்கி:*** *கஞ்சன்.*

***பீலி:*** *தண்ணீர்க் குழாய்.* Tap.

***புடுக்கு:*** *விரை. ஆணுறுப்பு.*

***புட்டாமா:*** *முகத்திற்குப் போடும் பவுடர். முகத்தூள்.*

***புண்ணியானம்:*** *புண்யாவசனம். தீட்டான வீட்டைத் தூய்மைப் படுத்துதல்.*

***புரியாதவன்:*** *விவரம் தெரியாதவன். தெரிந்து கொள்ளாதவன். 'சுத்த புரியாதவனா இருக்கியே.'*

***புளுபுளுவென்று வருகிறது:*** *'ஆத்திரமாக இருக்கிறது. எரிச்சல் ஏற்படுகிறது.'*

***புள்ளி:*** *கல்யாணமான ஆண் ஒரு புள்ளியாகக் கருதப்படுவார். 'எங்க ஊரில எழுநூறு புள்ளி இருக்கு.'*

***புள்ளிக்கூட்டம்:*** *கோயிலில் நடைபெறும் 'புள்ளிக் கூட்டத்தில்' திருமணமான எல்லா ஆண்களும் கலந்து கொள்ளலாம். இதற்கு மாறாக கரைக் கூட்டத்தில் குழு பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொள்வார்கள்.*

***புற்றுவைக்க:*** *அழிந்துபோ. 'உன் வயித்துல (கரையான்) புத்து வைக்க.'*

## பூ

***பூட்டாங்கயிறு:*** *நுகக்கயிறு.*

## பெ

***பெட்டகம்:*** *விலை உயர்ந்த பொருள்களை வைக்கும் இரும்புப் பெட்டி. அகராதியில் உள்ள இந்தச் சொல் இப்பகுதியில் தினசரி வாழ்க் கையில் பயன்படுத்தப்படுகிறது.*

***பெட்டியடி:*** *கிட்டங்கியில் வட்டிக் கடை வைத்திருக்கும் கைப் பெட்டி அருகே உள்ள இடம்.*

***பெரட்டு:*** *பொய்புரட்டு. ஏமாற்று வேலை.*

***பெண் எடுக்கிக் காட்டுதல்:*** *திருமணத்தன்று மாப்பிள்ளை அழைப்பிற்கு முன்பு மாப்பிள்ளை குதிரையில் வந்து பெண்ணைப் பார்க்கக் காட்டுதல். சிறுவயதில் திருமணம் நடைபெறும் வழக்கம் இருந்தபோது பெண்ணை உறவினர் யாராவது தூக்கி இடுப்பில் வைத்துக் காண்பித்திருக்கலாம்.*

***பெருக்கலாம்:*** *புள்ளிக் கூட்டமோ கரைக் கூட்டமோ நிறைவு பெறும் நிலையில் கூட்டத்தைப் பெருக்கலாமா என்று கேட்பார்கள். கலைக்கலாம் என்பது அமங்கலச் சொல்.*

***பெருங்கொண்ட:*** *பெரிய, பிரம்மாண்டமான. பெருங்கொண்ட தோதில் வரதட்சணை அதிகமுள்ள திருமணம். பெருங்கொண்ட கூட்டம் வந்தது.*

***பெருவரிக்கையாக அரைப்பது:*** *நைசாக அரைப்பது அல்லது மாவுமாவாக அரைப்பதற்குப் பதில் பெருவெட்டாக அரைப்பது.*

## பே

***பேச்சுபிராக்கிலே:*** *பேச்சு வாக்கில் தவறிச் சொல்வது.*

***பேரேடு:*** *குறிப்பில் உள்ள வரவு செலவுகளைப் பொருள் வாரியாக, துறைவாரியாக, இனவாரியாகப் பெயர்த்து எழுதும் கணக்குப்*

***மரவை:*** மரத்தாலான, கனமில்லாத தட்டு. பெரும்பாலும் சிவப்பு வண்ணத்தில் இருக்கும். க்ரியா அகராதி இதற்கு திருநீறு மடல் என்று பொருள் தருகிறது.

***மருக்கடி:*** மயக்கமாக, கிறக்கமாக இருக்கிறது. 'மருக்கடியா வருது. தண்ணி கொண்டா.'

***மருக்கொளி:*** கிறுக்கு. அசடு. செல்லமாகத் திட்டுவது.

***மல்லாரி:*** வம்பு செய்பவள். முரட்டு சுபாவம் உடையவள். சுவாமி புறப்பாட்டின்போது நாதஸ்வரக் கலைஞர் வாசிக்கும் ராகம்.

***மல்லுக்கட்டு:*** சண்டை போடுதல். வன்முறையில் ஈடுபடுதல். 'அவனோட மல்லுக்கட்ட நம்மாலே முடியாது.'

***மறுகால்:*** வடிகால். நீர்நிலைகளில் நீர் நிரம்பி வெளியேறுதல். 'நல்ல மழை. கண்மாயில மறுகால் போகுது.'

***மறுக்கா:*** மறுமுறை.

***மறுதாட்டு:*** திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் மணமகளின் தாய் வீட்டிற்குச் செல்லுதல்.

***மனராசியாய்:*** சமாதானமாக. பேச்சு வார்த்தை மூலம்.

## மா

***மாடாக்குழி:*** மாடக்குழி. விளக்கு, மற்ற பொருள்கள் வைப்பதற்கு சுவரில் உள்ள குழிவான சிறிய அமைப்பு.

***மாமக்காரர்:*** மணமகன் அல்லது மணமகளின் மாமா. திருமணச் சடங்குகளில் முன்நின்று பங்கு கொள்பவர்.

***மாம்பூவாசனையாக:*** சமரசமாக. சமாதானமாக.

***மாபோகி மலைபோகி:*** அசகாய சூரன். சூழ்ச்சிக்காரன்.

***மாறல்:*** மூலமாக. வாயிலாக. 'யார் மாறலாக வேலை கிடைச்சது?'

***மாற்றுவிரிப்பது:*** முதியோர் இறந்தால் இறுதி ஊர்வலத்தின் போது பாதையில் சேலைகளை மாற்றி மாற்றி விரித்தல்.

***மானம்பு:*** மகர் நோன்பு என்பதன் மரூஉ.

***மானாங்காணியா:*** கண்டபடியாக. ஒழுங்கற்று.

***மானி:*** பங்காளி. குறிப்பாக சித்தப்பாவைக் குறிக்கும் சொல்.

## மி

***மிஞ்சி:*** பெண்கள் கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் அணி

யும் வெள்ளி வளையம். மணமகன் திருமணத்தின் போதும் திருமண மான பெண்கள் எப்போதும் அணிந்திருப்பார்கள்.

**மிதப்பு:** தாராளமாக - பணவசதியைக் குறிக்கும் சொல்; வெண்ணை.

**மிதியடி:** காலணி. நடையன்.

## மு

**முகம் கொடுத்துப் பேசலை:** சரியாகப் பேசவில்லை.

**முக்காலி:** மூன்றுகால்கள் கொண்ட உலோக அல்லது மர நாற்காலி.

**முடுக்கு:** தெரு மூலை. முட்டுச்சந்து.

**முடிச்சவிக்கி:** துணிகளின் முடிச்சை அவிழ்ப்பது. திருடுவது. பெண்கள் காசை துணியில் முடிந்து வைத்திருப்பார்கள்.

**முடியல:** உடம்புக்கு முடியல. நோய் வாய்ப்பட்டிருப்பது.

**முடை:** தட்டுப்பாடு. பணவறட்சி.

**முடைதல்:** கூடை முடைதல். பின்னுதல்.

**முரண்டு:** எதிர்ப்புக் காட்டுவது. பிடிவாதம்.

**முண்டக்கண்ணி:** குறைபட்ட கண் பார்வை உள்ளவள்.

**முறி:** பத்திரம். ஓலையில் எழுதும் உடன்பாடு. 'ஸ்வீகாரம் செஞ்சதுக்கு முறி எழுதியிருக்கா?'

**முறைதலை:** திருமண சீர்கள். முறைதலைச் சிட்டை திருமணத்திற்கு முன்பு எழுதப்பட்டு சரிபார்க்கப்படும்.

## மூ

**மூக்குப் போகணி:** குழந்தைகள் உறிஞ்சிக் குடிக்கும் சிறிய போகணி.

**மூடுமடை:** ஊருணிக்கு நீர் வரும் மடை. காற்றில் பறந்து வரும் குப்பை, அழுக்கு இன்றி நீர் தூய்மையாக இருப்பதற்காக மூடப்பட்டிருக்கும் மடை.

**மூதலித்தல்:** நிரூபித்தல்.

**மூலவர்:** கருவறையில் இருக்கும் கடவுள் விக்ரகம்.

**மூன்றாம் கட்டு:** வீட்டில் வளவு, இரண்டாங்கட்டிற்கு அப்பால் உள்ள முற்றம். பெரும்பாலும் விருந்தினருக்குப் பந்தி வைக்கும் பகுதி. அல்லது சாப்பிட்டு விட்டு கை கழுவும் பகுதி.

## மெ

**மெதுநிலுவை:** மெதுவாக வசூலாகும் கடன் பாக்கி.

**மெய்க்காட்டாள்:** கொத்தனாருக்கு உதவியாள். சென்னைப் பகுதிகளில் பெரியாள் என்று அழைக்கப்படுவார்கள்.

**மெழுகுதல்:** துடைத்தல். 'வீடு கூட்டி மெழுகக் குட்டியிருந்தால் தேவலை.'

**மெனக்கெட்டு:** வலிந்து. அதே வேலையாக. 'மெனக்கெட்டு ஊர்விட்டு ஊர் வந்து சொல்றேன். கவனிக்க மாட்டியா?'

## மே

**மேங்கோப்பு:** தரைக்கு மேல் உள்ள கட்டிடப்பகுதி. 'மேங் கோப்பை பிரிக்க விலை பேசிட்டேன். மனை மட்டும் சொந்தம்.'

**மேஞ்செலவு:** சில்லறைச் செலவு.'ரயில் டிக்கட்டுக்கு நூறு ரூபாயும் மேஞ்செலவுக்கு பத்து ரூபாயும் தந்தார்.'

**மேப்புசாப்பாக:** பெயரளவில்.

**மேலாவில்:** மேலதிகாரி. அரசு யந்திரம்.

**மேலைக்கு:** அடுத்த வருடம்.

**மேல்வீடு:** மாடிவீடு. கொங்கு வட்டாரத்தில் 'மெத்தை வீடு' என்ற வழங்கப்படுகிறது.

## மை

**மைக்காநாத்து:** மறு நாள்.

## மொ

**மொகரை:** முகம். மூஞ்சி. 'மொகரையைப் பாரு மொகரையை! சிபாரிசுக்கு வந்திட்டாரு.'

**மொங்காம் போடுவது:** ஏமாற்றுவது. பண இழப்பு ஏற்படுத்து வது.

**மொக்குவது:** வரன்முறையில்லாமல் உண்பது. அவமானப் படுத்தும் நோக்கத்துடன் சொல்லப்படுவது. 'மூணு வேளை மொக் குறியே, பத்தாதா?'

**மொதும்பி இருப்பது:** நொதும்பி நிற்றல். ஈரமாக இருப்பது. நீர் ஊறி இருப்பது. 'மழை கனமாப் பெய்ததுல சுவர் மொதும்பியிருக்கு.'

**மோட்டா:** உயரமான. தடிமனான ஆள். 'அவரைப் பாத்திருக்

கேன். மோட்டாவான ஆள்.'

### ய

***யாது:*** நினைவு. ஞாபகம்.

### ர

***ரதக் கொட்டகை:*** சப்பரம், சகடை அல்லது தேர் வைக்கப் பட்டிருக்கும் அமைப்பு. ஓலைகளாலோ தகரத்தாலோ வேயப்பட்டிருக் கும்.

***ரத்தினக் கம்பளம்:*** சிறிய வெல்வெட் சமுக்காளம்.

***ராட்டுதல்:*** பெரிய மரக்கிளையில் உள்ள சிறு கிளைகள், இலை களை நீக்குதல்.

***ரெட்டு:*** மெத்தை ரெட்டு. விரிப்பு.

***ரெட்டை அறை:*** வளவில் உள்ள அறை இரண்டுப் பகுதிகளாக இருக்கும். உள் அறைக்கு தனிக்கதவு உண்டு. 'சாமான் வைக்க ரெட்டை அறைக்கு இரண்டாயிரம் வாடகை'

***ரெம்ப இருக்கு, நிறைய இருக்கு:*** 'மங்கலச் சொல். இல்லை என்று சொல்வது அபசகுனம் என்று கருதி மங்கலமாகச் சொல்லுதல்.'

***ரோக்கா:*** சிட்டை. மளிகைக்கடை ரோக்கா.

### ல

***லண்டி:*** பொல்லாதவள். ராங்கிக்காரி. வம்பு செய்பவள்.

***லாச்சாறு:*** தொல்லை. தொந்தரவு.

***லுச்சாப்பயல்:*** அற்பமானவன். கீழ்த்தரமானவன். நாமிர்தாப் பயல்.

***லெக்கு:*** இலக்கு. இடம்.

***லெவிக்காது:*** செரிக்காது. Undeserving. 'நீ செய்ற வேலை சரியில்லை. வாங்குற சம்பளம் உனக்கு லெவிக்காது.'

***லேசுபாசு:*** சாதாரணமாக.

### வ

***வகை:*** பங்காளிகளுக்குள் உட்பிரிவு. க.பெ.வகை. வ.சுப.வகை.

***வக்கணை:*** ருசியாக. விரும்பிய வகையில். சுவையாக இருக்க வேண்டுமென எதிர்ப்பார்ப்பது. 'உனக்கு வக்கணையா மூணு வகை வெஞ்சனம் வேணும்.'

**வக்கத்தவன்:** *வசதியற்றவன். பணம் இல்லாதவன்.*

**வங்காளி:** *மலேசியா, சிங்கப்பூரில் பொதுவாக வட இந்தியர்களைக் குறிக்கும் சொல்.*

**வகையா இருக்கீங்க:** *இளைத்து மெலிந்து இருக்கிறீர்கள்.*

**வங்குசாக் கடை:** *பலசரக்குக் கடை (மலேசியா).*

**வங்கொரங்கு:** *வசைச் சொல். குரங்கே என்று திட்டுவதற்கு அழுத்தம் கொடுக்கப் பயன்படுத்தப்படும் சொல்.*

**வங்கொறடு:** *தகராறு செய்பவன். முயலுக்கு மூன்றே கால் என்று சாதிப்பவன். குணங் கெட்டவன்.*

**வட்டகை:** *செட்டிநாட்டில் ஊர்களின் பிரிவு. மேலவட்டகை. கீழவட்டகை.*

**வட்டம்:** *கமிஷன். தரகுத் தொகை.*

**வட்டி:** *வட்டில் என்பதன் மரூஉ. சாப்பாட்டுத் தட்டு. 'வட்டியையும் (சாதம் பரிமாறுவது) கிண்ணியையும் (காய்கறி பரிமாறுவது) எடுத்துவை.'*

**வட்டி:** *முதலுக்கான வட்டி.*

**வதியளியுது:** *சீரழியுது. ஏராளமாகக் கிடைக்கிறது.*

**வதையை வாங்குதல்:** *தொல்லை கொடுத்தல். வேதனைக்கு உள்ளாக்குதல்.*

**வத்தல் தொத்தல்:** *இளைத்து, உடல் வற்றி மெலிந்து இருப்பது.*

**வத்தவரளி:** *காயப்போட்ட வத்தல் வகையறா.*

**வத்தை:** *படகு.*

**வம்பாடுபட்டு:** *சிரமப்பட்டு. கடுமையாக உழைத்து.*

**வம்பான ஆள்:** *தகராறு செய்பவர்.*

**வரத்து:** *வருதல். வந்து சேர்தல். நீர் வரத்து.*

**வர்த்தமான லெட்டர்:** *வேலையில் இருக்கும்போது நடந்தவற்றிற்கு பொறுப்பு ஏற்று வேலையிலிருந்து விலகியவுடன் எழுதித் தரும் கடிதம்.*

**வராகன்:** *மூன்றரை ரூபாய் அல்லது மூவாயிரத்து ஐநூறு ரூபாய். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருள்கொள்ள வேண்டும். 'சீதனம் பத்து வராகன்'(முப்பத்தி ஐயாயிரம் ரூபாய்)'. இப்போது வரதட்சணை லட்சக்கணக்கில் இருப்பதால் இந்த சொல் வழக்கில் இல்லை.*

**வருடபோகம்:** *ஒரு வருடப் பயன்பாட்டிற்கு பொருள்களை வாங்கி வைப்பது.*

**வரையோடு:** பக்கவாட்டில் வாய் உள்ள, வறுக்கப் பயன்படும் மண்பானை.

**வலியவந்து:** தானாக வந்து.

**வல்லாள கண்டன்:** சாமர்த்தியசாலி. கடுமையானவன்.

**வளவி:** வளையல். 'அவளுக்கு கண்ணாடி வளவின்னா கொள்ள ஆசை.'

**வளவு:** முன் திண்ணைக்கு அப்பால் முற்றத்தைச் சுற்றி பத்தியும் அறைகளும் உள்ள பகுதி.

**வள்ளுவப்பை:** திருமணத்தில் மணமகன் தோளில் போட்டுக் கொள்ளும் பை.

**வழணை:** சளி.

**வழுவட்டை:** கிரகிக்கும் சக்தியில்லாதவன். சுறுசுறுப்பில்லா தவன்.

**வள்ளிசாக:** சரியாக. 'பொங்கலுக்கு வள்ளிசா ஏழு நாள் இருக்கு.' மொத்தமாக. 'வள்ளிசா தொடச்சி குடுத்திட்டேன். சல்லிக்காசு மிச்ச மில்ல.'

**வறளி:** பிடிவாதக்காரன். 'வம்பு, வறளி'

**வாசி:** அனுகூலம்.

**வாஞ்சாலை:** வாஞ்சை, பாசம்.

**வாணம் தோண்டுதல்:** அஸ்திவாரம் தோண்டுதல். வீட்டுமனை யில் தச்சு செய்தபிறகு அஸ்திவாரம் போட மண்ணைத் தோண்டுதல்.

**வாணாளை:** வாழ்நாளை. 'தொல்லை தாங்க முடியல. வாணாளை போகுது.'

**வாயில் தேனைத் தடவுதல்:** ஏமாற்றுதல்.

**வாரை:** விக்கிரகங்கள் வைக்கப்படும் மரபீடத்தைத் தூக்குவதற் குப் பயன்படும் பெரிய மூங்கில் கம்புகள். பீடங்களில் பொருத்தப்பட் டுள்ள இரும்பு வளையங்களுக்கு ஏற்ப வாரைகளின் சுற்றளவு வேறு படும்.

**வாச்சான் போச்சான் விவகாரம்:** நிச்சயமற்ற. ஊசலாடும் விவகாரம்.

**வாவரசி:** வாழ்வரசி. கணவனின் மரணத்திற்கு முன்பு இறக்கும் (உயிர்விடும்) பாக்கியம் பெற்றவள்.

**வாழ்ந்தானுக்கு மாரடிக்கிறவன்:** செல்வாக்கு, செல்வம் உடையவர்களை முகஸ்துதி செய்பவன், போற்றுபவள், தாங்குபவன்.

**விடக் கட்டத் தெரியாதவன்:** விட்டுக் கொடுத்து நடக்கத் தெரியாதவன். நெளிவு சுளிவு இல்லாதவன்.

**விசாரணை:** கோவில் நிர்வாகம், மேற்பார்வை.

**விசாரணைதாரர்:** கோயில் அறங்காவலர்.

**விடியாமூஞ்சி:** வசைச் சொல். 'அவ முகத்தில முழிச்சாலே ஒண்ணும் நடக்காது. அது விடியாமூஞ்சி.'

**விண்ணாரம் பேசுறவன்:** பெருமை பேசுபவன். அடாவடித் தனமாகப் பேசுபவன். வம்பு அளப்பவன்.

**வியர்வைத் தடுமன்:** மிகுதியான வியர்வையால் ஏற்படும் சளி - ஜலதோஷம்.

**விருதாப்பயல்:** பயனற்றவன். வெட்டிப் பேச்சு பேசுபவன்.

**விவரமான ஆள்:** கெட்டிக்காரர். எல்லாம் தெரிந்தவர். பெரும் பாலும் கேலியாகச் சொல்லப்படுவது.

**வெக்கை:** வெப்பம். சூடு, உஷ்ணம். 'வராந்தாவில உக்காராதே. வெக்கையா இருக்கும்.'

**வெங்கம்பயல்:** வெறும்பயல். ஒன்றுக்கும் உதவாதவன். பயனற்றவன்.

**வெஞ்சனம்:** வியஞ்சனம். காய்கறி.

**வெட்டிப் பேச்சு:** வீண் பேச்சு. அரட்டையடித்தல்.

**வெட்டிவிடுதல்:** ஒதுக்கி விடுதல். சரியான நேரத்தில் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவருதல்.

**வெண்ணிலை:** ஈடு இல்லாக்கடன். அடமானம் இல்லாமல் பிரா மிஸ்ஸரி நோட்டின் பேரில் கொடுக்கப்படும் கடன்.

**வெயன் வட்டி:** கூடுதல் வட்டி. அதிக வட்டி.

**வெவ்வெளுக்கை:** நெல்லை குழைய விடாமல் அவிப்பது.

**வெளம்:** கோபம். ஆத்திரம். 'வெளம் புடுங்கிக்கிட்டே இருக்கிறான்.'

**வெளியே கிடக்கிற நாள்:** மாத விலக்காகிற நாள். 'படையலுக்கு வருறது சந்தேகம்தான். நாள் தோதுப்படாது.'

**வெள்ளமா இருக்கு:** நிறைய இருக்கிறது.

**வெள்ளன:** அதிகாலை. தமிழ்நாட்டின் பல பகுதிகளில், குறிப் பாக சிவகங்கை மாவட்டத்தில் வழங்கும் சொல்.

**வெரசா:** விரைவாக. 'வெரசா வா. ரயிலுக்கு நேரமாச்சு.'

**வேம்பா:** தண்ணீர் கொதிக்க வைக்கும் பாத்திரம். Boiler.

**வேலையத்த வேலை:** பயனில்லாத வேலை. தேவையற்ற வேலை.

**வேறு வைத்தல்:** திருமணமாகி சிறிது காலத்திற்குப் பிறகு தம்பதிகளைத் தனிக்குடித்தனம் வைக்கும் சடங்கு. இதற்கான செலவையும் வருடப் பயன்பாட்டிற்கான பொருள்களின் செலவையும் பெண்ணின் தாய் வீட்டார் ஏற்பார்கள்.

**வேனா:** கூடுதலாக.

**வேனாவெயில்:** சுட்டெரிக்கும் வெயில். 'இந்த வேனாவெயில்ல போகலைன்னா என்ன?'

**வைராவி:** கோவில் சிப்பந்தி.

**ஸ்ரீமுகம்:** திருவிழா, மண்டகப்படி பற்றி கோவிலில் இருந்து வரும் ஓலை. கடிதம்.

**ஜாப்தா:** பட்டியல். நகைகள் ஜாப்தா. மண்டகப்படிதாரர் விக்கிரக அலங்காரத்திற்கும் மடப்பள்ளிக்கும் தரவேண்டிய பொருள்களின் பட்டியல்.

## செட்டிநாட்டு உணவு வகை சொல்லகராதி

செட்டி நாட்டு உணவு வகை பற்றி விவரிக்காது வட்டார வழக்கு அகராதி நிறைவு பெறாது. தமிழ் நாட்டில் உள்ள எல்லா நகரங்களிலும் வடநாட்டிலும் வெளிநாடுகளிலும் செட்டி நாட்டு மெஸ், உணவகங்கள் உண்டு. சென்னையில் ஐந்து, மூன்று நட்சத்திர ஹோட்டல்களிலும் பல அசைவ ஹோட்டல்களிலும் செட்டிநாட்டு உணவு வகைகள் பரிமாறப் படுகின்றன. அந்த வட்டாரத்திற்கே உரிய தனித் தன்மையுள்ள உணவு வகைகள், நொறுக்குத் தீனிகள், சமையல் செய்முறை சுருக்கமாகத் தரப் பட்டுள்ளது. பலகாரத்திற்கு ஏற்றாற்போல தொட்டுக் கொள்ளப்பயன் படும் துணை உணவு வகை அமையும். மேற்கொண்டு தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள், பல பதிப்பகங்கள் வெளியிட்டுள்ள செட்டி நாட்டு சமையல் புத்தகங்களை நாடவேண்டும்.

**ஆட்டுக்கறி கோளா உருண்டை:** கறியை சேர்மானம் சேர்த்து அரைத்து உருட்டி வறுப்பது.

**இடைவேளைப் பலகாரம்:** இடைப் பலகாரம். மாலை விருந்து.

**ஈடு:** இட்டு அவிப்பது.

**உக்கார்:** பாசிப்பருப்பு, வெல்லம், நெய் சேர்த்துச் செய்யும் இனிப் புப் பலகாரம்.

**உப்புப்பளி கரைத்தது:** புளி, உப்பு, வரமிளகாய் கரைத்து அவசரத்திற்குப் பயன்படுத்தப்படுவது. அடுப்பில் வைப்பதோ தாளிப் பதோ இல்லை.

**எருக்கலங் கொழுக்கட்டை:** நடுவில் தேங்காய் வெல்லப் பூரணத்துடன் அரிசி மாவில் வைத்து அவிப்பது.

**ஐந்தரிசிப் பணியாரம்:** பச்சரிசி, புழுங்கல் அரிசி, ரவை, ஜவ்வரசி, பாசிப்பருப்பு சேர்ந்து செய்யப்படும் பலகாரம்.

**கந்தரப்பம்:** உளுத்தம்பருப்பு, வெல்லம், பச்சரிசி, தேங்காய் சேர்த்து செய்யப்படும் அப்பம்.

**கரிவடகம்:** வெங்காயம் கடுகு முதலியவை சேர்த்து செய்யப் படும் வடகம்.

***கருப்பட்டிப் பணியாரம்:*** *அரிசிமாவில் கருப்பட்டி சேர்த்து அவிப்பது.*

***கல்தோசை:*** ஊத்தப்ப வகை.

***கவுணி அரிசி:*** *சிகப்பரிசி, தேங்காய், சர்க்கரை சேர்த்துச் செய்யப்படும் இனிப்புப் பலகாரம்.*

***கற்கண்டு சாதம்:*** இனிப்பு கலந்த நெய் சாதம்.

***கற்கண்டு வடை:*** இனிப்பு வடை.

***கிள்ளு வற்றல்:*** *அரிசி மாவில் செய்யும் வற்றல்.*

***கும்மாயம்:*** பாசிப்பருப்பு, பச்சரிசி, பால், வெல்லம் சேர்த்துச் செய்யப்படும் இனிப்புவகை.

***கும்பகோணம் ஊறுகாய்:*** பல காய்கறிகள் அடங்கிய ஊறுகாய் வகை.

***குழிப்பணியாரம்:*** குழிச்சட்டியில் ஊற்றி வேகவைக்கும் பணியாரம்.

**கெட்டிக் குழம்பு:** சாம்பாரைவிட அடர்த்தியானது.

**கோசமல்லி:** கத்தரிக்காய் கொத்சு. இட்லி, தோசை, குறிப்பாக இடியாப்பத்திற்குத் தொட்டுக்கொள்ள உதவும் துணை உணவு.

**கோளா உண்டைக் குழம்பு**

**கோதுமை மாவு குனுக்கு:** இட்லிமாவு, கோதுமை மாவு சேர்ந்த பலகாரம்.

***சும்மா குழம்பு:*** காய்கறி சேர்க்கப்படாத குழம்பு.

***சீப்புச்சீடை:*** *வளையம் உருவில் உள்ள சீடை. அதில் உள்ள கோடுகள் சீப்பை நினைவுபடுத்தும்.*

***சீயம்:*** மசாலா சீயம். போண்டா போன்றது.

**சோமாஸ்:** சமூசா போன்றது. கார சோமாஸ். இனிப்பு சோமாஸ்.

**சோமாஸ்:** மைதா மாவில் பூரணம் வைத்து செய்யப்படுவது.

***டாங்கர்:*** தக்காளி, பூண்டு, வெங்காயம் சேர்த்துச் செய்யப்படும் துணை உணவு வகை. இட்லி, தோசை, வெள்ளைப் பணியாரத்திற்கு தொட்டுக் கொள்ளப் பயன்படும்.

***தக்காளி கோசு:*** இட்லி, இடியாப்பம், பொங்கலுக்கு துணை உணவு வகை.

***தக்காளி திரக்கல்***

***தண்ணீர்க் குழம்பு:*** *சாம்பாரை விட இளக்கமான குழம்பு. ரசத்தை ஒத்தது.*

***துருவல்***

***துவட்டல்:*** *காய்கறி பொரியல் போன்றது. மசாலா சேர்க்கப் படாதது. புடலங்காய் துவட்டல்.*

***தேங்காய் கலவை சட்னி:*** *தயிர் சேர்த்தது.*

***பச்சடி:*** *புளி, மிளகாய் சேர்த்த காய்கறிக் கூட்டு. (இதில் வெல்லம் சேர்ப்பதில்லை)*

***பச்சைத் தேங்குழல்:*** *பச்சை முறுக்கு, தேங்குழலை அதிகம் வேகவிடாமல் காய்ந்த எண்ணையில் போட்டதும் திருப்பி விட்டு எடுப்பது.*

***பருப்பு உருண்டைக் குழம்பு***

***பரங்கிக்காய் புளிக்கறி***

***பலகாய்த் திரட்டல்***

***பலாக்காய் சொதி***

***பலாக்காய் பிரட்டல்:*** *பலாக்காய். தேங்காய் சேர்த்துச் செய்யப் படும் மசாலா பொறியல்.*

***பால் கொழுக்கட்டை:*** *மாவில் கொழுக்கட்டை செய்து ஊற வைப்பது.*

***பால் பணியாரம்:*** *பச்சரிசி, உளுந்தம் பருப்பு சேர்த்து அரைத்த மாவை நெல்லிக்காய் அளவில் உருட்டி சுட்ட பணியாரத்தை சர்க்கரை கலந்த தேங்காய்ப்பாலில் ஊறவைத்து உண்பது.*

***பாச்சோறு:*** *பாற்சோறு என்பதன் மரூஉ. வெல்லம், பால் இட்டுப் பொங்கும் பச்சரிசிப் படையல் சோறு.*

***பாசிப்பருப்பு துவையல்***

***பீர்க்கங்காய் தோல்துவையல்:*** *தயிர் சாதம், இட்லி, தோசைக்கு தொட்டுக்கொள்ளப் பயன்படுவது.*

***புட்டுக் கொழுக்கட்டை***

***மசியல்:*** *மசித்து, குழைத்து தயாரிக்கப்படும் காய்கறி வகை. கருணைக் கிழங்கு மசியல்.*

***மண்டி:*** *மாங்காய் மண்டி, மிளகாய் மண்டி. மோர் சாதம், தயிர் சாதத்திற்கு தொட்டுக்கொள்வது. அடிமண்டி என்பது ரசவண்டல்.*

***மரக்கறி தோசை:*** *முட்டை தோசை போல் பருப்பில் செய்து சுடும் தோசை.*

***மனஹோலம்:*** *இனிப்பு தின்பண்டம்.*

***மாவுருண்டை:*** *பாசிப்பருப்பு, பச்சரிசி நெய் சேர்த்துச் செய்யப்*

படும் இனிப்புப் பலகாரம்.

**மிதுக்க வத்தல்**

**மீல்மேக்கர் மசாலா குழம்பு**

**முறுக்கு வடை:** கையால் முறுக்கிச் சுற்றும் பலகாரம். நடுவில் துளை உள்ளது.

**முள்ளு முறுக்கு**

**வரகரிசிக் கொழுக்கட்டை**

**வரக்காப்பி:** பால் சேர்க்கப்படாத காப்பி.

**வாழைப் பூ வடை:** வாழைப்பூ, துவரம்பருப்பு, கடலைப் பருப்பு சேர்த்துச் செய்யப்படும் வடை.

**வெங்காயக் கோசு:** இட்லி, தோசைக்கு தொட்டுக் கொள்ளப் பயன்படுவது.

**வேங்கரிசி:** சத்துமாவு. எளிதில் ஜீரணமாவது.

**வேர்க்கடலை உருண்டை:** இது எல்லாப் பகுதிகளிலும் கிடைக் கக் கூடியது. செட்டிநாட்டில் இதைப் பரிமாறினால் விருந்து முடிந்தது என்று பொருள்.

**வாழைக்காய் கருவாட்டுப் பொறியல்**

**வெள்ளைப் பணியாரம்:** இது செட்டிநாட்டின் சிறப்பு உணவு. இதன் சுவை அறிய சிறிய அளவில் வீடுகளில் செய்யப்படும் பணியா ரத்தை சாப்பிட்டுப் பார்க்க வேண்டும். சென்னையில் ஐந்து, மூன்று நட்சத்திர ஹோட்டல்களில் பணிபுரியும் தலைமை சமையல்கார்கள் செட்டிநாடு சென்று பெண்களிடம் வெள்ளைப் பணியாரம் செய்யும் முறையைக் கற்று வந்திருக்கிறார்கள்.

இதற்கு தொட்டுக் கொள்ள துணை உணவுவகை: மிளகாய்ச் சட்னி அல்லது டாங்கர்.

(திரக்கல், பிரட்டல், பொறியல், வதக்கல், துவட்டல், மசியல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளை செட்டிநாடு சமையல் புத்தகங்களைப் படித்து தெரிந்து கொள்ளலாம்.)

**சூப்:** வெளிநாட்டுத் தொடர்பால் செட்டிநாட்டு உணவு வகையில் இடம் பெற்றிருப்பது சூப். இது பரிமாறப்படாத விருந்து அபூர்வம். மற்ற பகுதிகளில் இருந்து வரும் விருந்தினர்கள் விரும்பி அருந்துவது தக்காளி அல்லது காலிபிளவர் சூப். பேச்சுவழக்கில் சூப்பி என்றும் சொல்லப்படுவதுண்டு.

★★★

*ஜயந்தன் நாடகம் 'சுவர்கள்'(1976) பக்கம் 76, 77லிலிருந்து ஒரு பகுதி. (நாடகபாணியில் சிறிது மிகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது)*

***பாலு:*** *டிபன் நல்லா இருந்தது, இல்ல?*

***வேணு:*** *குக் யாராம்?*

***பாலு:*** *யாரோ புதுசுனு சொன்னாங்க. செட்டி நாட்டுப் பக்கம் போல இருக்கு.*

***வேணு:*** *செட்டி நாடா? அப்ப இருக்கும். விருந்துக்குப் பொறந் ததே அதுதான். நீ எப்பவாச்சும் அங்க விருந்து சாப்புட்டு இருக்கியா?*

***பாலு:*** *ம். ஒரு தடவ சாப்டிருக்கேன். நான் புதுக்கோட்டையில படிச்சுக்கிட்டு இருந்தப்ப என் கூட நடராஜன்னு ஒரு செட்டியார் பையன் படிச்சான். அவன் ஊரு அரிமளம். இண்டர் படிச்சுக்கிட்டு இருக்கப்பவே அவனுக்குக் கல்யாணம் செய்தாங்க. அப்பப் போனேன். விருந்து பயங்கரம்தான். இவ்வளவுக்கும் அவுங்க ஒண்ணும் பெரிய இடமில்ல. அவங்களே அப்பிடி செய்தாங்க. அதப் பாத்துட்டுதான் இன்னம் கோடீஸ் வரன் வீட்டுக் கல்யாணமெல்லாம் எப்பிடியிருக்குமோனு நெனச்சுக் கிட்டேன்.*

***வேணு:*** *மொதல்ல எலையப் பாத்தே நாம அசந்து போயிடணும். ஒரு எலைய ரெண்டு மூணா வெட்டிப் போடுற சமாச்சாரமே அங்க கெடையாது. எல்லாமே முழு முழு தாட்டு எலதான். அத எங்க இருந்து தான் கொண்டாருவாங்களோ. எல்லாம் அஞ்சடி நீளம் மூணடி அகலம் இருக்கும். எங்கூட கிருஸ்ட்ராஜ்னு ஒரு பையன் வந்திருந்தான். அவன் ஆளு கொஞ்சம் குள்ளம். அவன் எல ஓரத்தில் இருந்த அயிட்டங்கள எட்டி எட்டி எடுக்க வேண்டியதாய் போச்சு. அயிட்டங்களும்..காலப் பலகாரத் திலேயே ஒரு இருவது அயிட்டம் இருக்கும்.*

*(இவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டே கஸ்தூரிராஜ் அங்கே வருகிறான்.)*

***கஸ்தூரி ராஜ்:*** *செட்டி நாட்லதான? அங்க குடுக்கிற தேங்கா பழப் பையே அஞ்சு ரூவா பெறுமே சார். அதுவும் ரொம்ப வேண்டிய சொந்தக் காரங்களுக்கு எப்பிடி தெரியுமா?*

★★★

*திருச்சி கல்லூரியில் படிக்கும் போதே எனக்குத் திருமணமாகி விட்டது. கோவை, திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ நண்பர்கள் திருமணத்திற்கு வந்திருந்தார்கள். அவர் களுடைய விமர்சனம்:*

*திருமண வீட்டிற்கு உள்ளே வந்தவுடன் 'வாங்க,வாங்க' என்று பத்து, இருபது பேர் வரவேற்பது மலைப்பாக இருக்கிறது. காலைப்*

பலகாரங்கள் நன்றாக இருக்கின்றன. இட்லி மெதுவாக இருக்கிறது. செட்டிநாட்டு மெஸ் போல கல்யாண விருந்திலும் இட்லி அன்லிமிடெட் டாக பரிமாறப்படுகிறது. வேறுபகுதித் திருமணங்களில் இட்லி, வடை, கேசரி அளவோடு இருக்கும். (1950 களில்) பொங்கல் அல்லது உப்புமா தான் மறுமுறை பரிமாறப்படும். பகல் உணவில் சூப் நன்றாக இருக் கிறது. (மற்ற உணவு வகைகள் பற்றி அவர்கள் ஏதும் சொல்லவில்லை) ஒரு பெரிய குறை - பரிமாறுகிறவர்களின் வேட்டி, பனியன் அழுக்காக இருக்கின்றன.

இரவு பெண் அழைப்பு விருந்தில் அசைவ அணவு வழங்கப் படுவது ஆச்சரியமாக இருக்கிறது. அடடா, எத்தனை வகை அசைவ உணவுகள். சைவத்திற்கும் அசைவத்திற்கும் தனிப்பந்திகள். தனிப் பாத்திரங்கள்.

★★★

**கும்மாயம்:** காலச்சுவடு மார்ச் 2005 இதழில் ஆ.சிவசுப்பிர மணியன் கட்டுரையின் ஒரு பகுதி:

மணிமேகலை 27ம் காதையில் 'பயற்றுத் தன்மை கெடாது கும்மாயம் இயற்றி' என்னும் தொடர் இடம் பெற்றுள்ளது. மணி மேகலை காப்பியத்தைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த உ.வே.சாவுக்கு இத்தொடரில் இடம் பெறும் கும்மாயம் என்னும் சொல்லின் பொருள் விளங்கவில்லை. பலரிடம் கேட்டும் பயனில்லை. இந்நிலையில் கும்பகோணம் சாரங்கப் பெருமாள் கோவிலுக்கு பட்டாச் சாரி ஒருவரின் அழைப்பின்பேரில் சென்றார். அங்கு அவர் வழங்கிய பிரசாதம் உ.வே.சா.அதுவரை அறியாத ஒன்றாக இருந்தது. அதன் பெயர் என்னவென்று கேட்டபோது பட்டாச்சாரியார் கும்மாயம் என்று விடை யளித்தார். கும்மாயம் செய்யும் முறையை பட்டாச்சாரியாரிடம் அறிந்து கொண்டார். பின்னர் நீலகேசி காப்பியத்திலும் வேறு நூல்களிலும் கும்மாயம் என்ற சொல் பயின்று வந்துள்ளதை அறிந்து கொண்டார். இவையனைத்தையும் இணைத்துத் தம் மணிமேகலை பதிப்பில் மேற் கூறிய தொடருக்கான குறிப்புரையில் பின்வருமாறு எழுதினார்.

**கும்மாயம்:** புழுக்கிய பச்சைப் பயிற்றோடு சருக்கரை முதலியன கூட்டி ஆக்கப்படுவது ஒரு சிற்றுண்டி. இப்பெயரொடு இது விஷ்ணு ஆலயங்களில் இக்காலத்தும் வழங்கி வருகிறது.

இன்றும் நெல்லைச் சீமையில் கும்மியானம் என்னும் பெயரில் ஆடிமாத இறுதியில் கும்மாயம் தயாரிக்கப்படுகிறது.

(உ.வே.சா. செட்டிநாட்டுக்காரர்களைச் சந்திக்கும்போது கேட்டிருந்தால் விளக்கம் தந்திருப்பார்கள்.)

★★★

***பந்தி விசாரணை:*** *தமிழகத்தின் பிற வட்டாரங்களில் நடைபெறும் விருந்துகளில் உறவினர்கள், இளைஞர்கள் பரிமாறுவார்கள், உபசரிப்பார்கள். ஆனால் செட்டிநாட்டில் பந்தி விசாரணைக்குழு கட்டுக் கோப்புடன் ஓர் இயக்கமாக இயங்குகிறது. விசாரணைக் குழுவினர் பந்திக்கட்டிற்கு வருபவர்களை வரவேற்று இலைகளின் முன்பு அமரச் செய்து சமையற்காரர்கள் பரிமாறுவதை மேற்பார்வை செய்வார்கள். தேவையானால் அவர்களும் பரிமாறுவார்கள். விருந்தினர்கள் விரும்புவதை உடனே கிடைக்கச் செய்வார்கள். அவர்கள் கைகழுவும் வரை உபசரணை தொடரும். குழுவில் சமையல் தெரிந்தவர்கள் சமையலை மேற்பார்வை செய்வார்கள். எதிர்பார்க்கும் விருந்தினர்கள் அளவிற்குத் தகுந்தாற்போல மளிகைப் பொருள்கள், இலை, பாத்திரங்கள் இருக்கிறதாவென்று உறுதி செய்து கொள்வார்கள். குறைவாக இருந்தால் வீட்டுக்காரர்களிடம் தெரிவித்து வாங்கி வரச் செய்வார்கள். எதிர்பாராமல் அதிக விருந்தினர்கள் வந்துவிட்டால் பந்தி விசாரணைக்குழு அதற்கான முன்னேற்பாடுகள் செய்து குழப்பம் இல்லாமல், யாரும் குறை சொல்ல இடம் வைக்காது விருந்து நடைபெற உதவுவார்கள். விசேஷ நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றவுடன் வீட்டுக்காரர்கள் குழுவினர்களுக்கு நன்றி கூறி தக்க முறையில் அன்பளிப்பு தருவார்கள்.*

***பிள்ளையார் நோன்பு:*** *இது செட்டிநாட்டிற்கே உரிய பண்டிகை. ஆவணி மாதம் வரும் விநாயக சதுர்த்திக்கு கோயில்களில் வழிபாடு உண்டு. ஆனால் மார்கழி மாதத்தில் வரும் பிள்ளையார் நோன்பு இல்லங்களில் கொண்டாடப்படும் பண்டிகை. செட்டிநாட்டுக்காரர்கள்- லண்டனிலோ, லாஜ் ஏஜ்சல்ஸிலோ - எங்கிருந்தாலும் பிள்ளையார் நோன்பு தினத்தில் ஒன்றுகூடி பிள்ளையாரை வழிபடுவார்கள். இரவு விளக்கேற்றி பிள்ளையார் விக்ரகம் அல்லது படம் முன்பு அவல்,பொறி, திரட்டுப் பால், பணியாரம் மற்ற பலகாரங்கள் வைத்துப் படைத்து வழிபடுவார்கள். வேகவைத்த கருப்பட்டி பணியார மாவை பிள்ளையார் போல் பிடித்து அதில் திரியை வைப்பார்கள் (கோடி வேஷ்டியிலிருந்து நூல் எடுத்து ஏழாக மடித்து திரி செய்ய வேண்டும்). இது இழையெனப்படும். குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தால் ஆறு இழை தட்டில் இருக்கும். குடும்பத் தலைவர் இழையை நெய்யில் நனைத்து விளக்கில் ஏற்றி மூன்று முறை விக்கிரகத்தைச் சுற்றிக் காண்பித்து வணங்கி வாயில் போட்டுக் கொள்வார். மற்ற குடும்ப உறுப்பினர்கள் வயதுக் கிரமப்படி பிள்ளையாரை வணங்கி குடும்பத் தலைவரையும் விழுந்து கும்பிட்டு இழையை வாங்கி வாயில் போட்டுக் கொள்வார்கள். கடைசி இழையை குடும்பத் தலைவர் உண்பார்.*

***பொங்கல்:*** *செட்டிநாட்டில் வழக்கமாக உலை வைத்து புழுங்கல் அரிசியைக் களைந்து போட்டு சோறு வெந்தவுடன் நீரை வடிப்பார்கள். இது சோறு வடிப்பதாகும். வடித்த நீர் நீராகாரத்திற்குப் பயன்படும்*

அல்லது மாட்டுப் பானைக்குப் போகும். ஆனால் பொங்கல் அன்று சோறு பொங்குவார்கள் - குறைவான அளவு நீர் வைத்து.

வேறெங்கும் இல்லாத வழக்கமாக அங்கு பொங்கல் மதிய உணவில் பலாக்காய் கூட்டுக்கறி, கருணைக் கிழங்கு குழம்பு, கத்தரிக்காய் குழம்பு, வாழைக்காய் துவட்டல், அவரைக்காய் துவட்டல், சக்கரை வள்ளிக் கிழங்கு பொறியல் போன்றவை இடம் பெறும். விருந்தினர் வந்தால் சர்க்கரைப் பொங்கல் தருவார்கள். இந்தக் காய் கறிகள் தை மாதம் தாராளமாகக் கிடைப்பதால் பொங்கல் மதிய உணவில் இடம் பெற்றிருக்கக்கூடும்.

**பலாக்காய்:** செட்டிநாட்டவர்களுக்கு மிகவும் பிடித்தமான காய் கறி. வெளியூரிலிருந்து ஊர் வருபவர்கள் விலையைப் பற்றிக் கவலைப் படாது பலாக்காய் வாங்கிச் செல்வார்கள். பலாக்காய் சொதி, கருவாட்டுப் பொறியல், மசாலா பொறியல், கூட்டுக் கறி செய்யப் பயன் படும்.

### உக்கிராணக்காரர், உக்கிராணக்காரி

பெரிய விருந்துகளுக்கான சமையலில் மளிகைப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும் உக்கிராண அறையை நிர்வகிக்க உக்கிராணக்காரர் நியமிக்கப்படுவார் (பெரும்பாலும் பெண்கள்). அவரும் சமையல் மேஸ்திரியும் சேர்ந்து விருந்தினர் எண்ணிக்கையைப் பொறுத்து மளிகைப் பொருள்களின் அளவை முடிவு செய்வார்கள். பொருள்கள் விரயமாவதைத் தடுப்பதற்கே இந்த ஏற்பாடு. வழக்கமாக சமையல் செட்டியாருடையது என்ற கேள்வியைத் தொடர்ந்து உக்கிராணம் பார்ப்பது யார் என்ற கேள்வியும் எழும். இத்துடன் செட்டி நாட்டு சமையலில் காபி, தேனீர் கலப்பதற்கு, பரோட்டா போடுவதற்கு, போளி செய்வதற்கு, தண்ணீர் கொண்டுவருவதற்கு(காண்டாகாரர் - இப்போது இல்லை) என்று தனியாக அந்தத் துறைகளில் தேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

### செட்டிநாடு உணவகம் பற்றிய விமர்சனம்:

சஞ்சய் சுப்பிரமணியம் காலச்சுவடு தமிழர் உணவு சிறப்பிதழில் செட்டிநாட்டு உணவகம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

'தமிழர் உணவு என்றால் சைவ உணவு என்றும் இறைச்சி சாப்பிட வேண்டுமென்றால் விந்திய மலையைக் கடக்க வேண்டுமென்றும் நினைத்திருந்தேன். செட்டிநாடு உணவகங்களின் படையெடுப்பு முதல் அதிர்ச்சியைத் தந்தது. நன்கு பழக்கப்பட்ட பொருள்களும் சுவைகளும் கோழியோடும் முக்கியமாக ஆட்டிறைச்சியோடும் கூடின. காய்ந்த மிளகாயின் அதிகப்படியான பயன்பாடு தொந்தரவு தந்தாலும் கொஞ்ச காலத்திற்கு இந்த உணவிற்கு அடிமையாக இருந்தேன். இப்போது - முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு செட்டிநாடு உணவகம் என்ற பெயர்ப் பலகையைப் பார்த்த மாத்திரத்தில் எதிர்த்திசையில் ஓடுகிறேன்.'

*கட்டுரை ஆசிரியரின் ஆதங்கம் நியாயமானதே. செட்டிநாடு உணவகங்களில் பரிமாறப்படும் உணவு வகைகளில் மசாலா பொருள்கள், மிளகாய் பயன்பாடு அதிகம் இருப்பது உண்மைதான். வேறு பகுதிகளில் வழங்கும் சமையல் முறைகளை உள்வாங்கி வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக இத்தகைய உணவு பரிமாறப்படுகிறது. அசல் செட்டிநாட்டு உணவை செட்டிநாட்டு நடுத்தர மக்கள் விருந்துகளிலும் இல்லங்களிலும் எதிர்பார்க்கலாம். செட்டி நாட்டவருக்கு வெளிமாவட்டங்களிலும் வடக்கிலும் மேல்நாட்டிலும் தொடர்பு இருப்பதால் செட்டிநாடு உணவு முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.*

*செட்டிநாடு உணவகங்களின் உணவு வகைகளை ஓரிரு நாட்கள் சாப்பிடலாம். தொடர்ந்து சாப்பிட இயலாது.*

**திருமணச் சடங்குகள் தொடர்பான சொற்கள்:**

*அரசாணிக்கால்*

*பூரம் கழித்தல்*

*அரிமணம் இடுதல்*

*பூமணம் இடுதல்*

*திருப்பூட்டுதல்*

*மணவறை*

*குலம் வாழும் பிள்ளை*

*வள்ளுவப்பை*

*மாமப்பட்டு*

**பாத்திரங்களின் பெயர்கள்:**

*கொப்பித்தட்டு (கொப்பி. கும்மி)*

*விளக்குச்சட்டி - விளக்கு*

*பொங்கி மரவை*

*மோர்மாந் தட்டு ( மோல்மேன் தட்டு, பர்மா)*

*பர்மாப் பாய்*

*பர்மாத் தடுக்கு*

*கொழும்புக் கேத்தல்*

*கம்போசா மரவை*

*குந்தாணி: உரல். வசைச் சொல்லாகவும் பயன்படுகிறது.*

*சருவச் சட்டி*

***உண்டியல்:*** *கொடுக்கல் வாங்கலில் இன்று உண்டியல் இடம்*

பெறாவிட்டாலும் திருமணச் சடங்கில் அது பயன்படுத்தப்படுகிறது. 1947 ம் ஆண்டிற்கு முன்பு பெண்ணுக்கான ஸ்ரீதனத்தை திருமணத்தன்றே ரொக்கமாகத் தர இயலாதவர்கள் உண்டியல் எழுதிக் கொடுப்பார்கள். குறிப்பிட்ட காலத் தவணையில் அதற்குப் பணம் வெளிநாட்டில் தரப் படும். எழுபது ஆண்டுகள் முன்பு இப்போது நடைமுறையில் உள்ளது போன்ற கறாரான வரதட்சணை வழக்கமில்லை. கொள்வினை, கொடுப் பினை சம அந்தஸ்தில் உள்ளவர்கள் இடையே நடைபெற்றது. பெண் ணின் பெற்றோர் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்ற அல்லது செல்வச் செழிப்பைப் பறைசாற்ற தகுதிக்கு மீறி பெண்ணுக்கு சீர் வரிசை செய் தார்கள். மாப்பிள்ளை வீட்டாரின் வற்புறுத்தல் அபூர்வமாகவே நிகழ்ந்தது.

அப்போது திருமண விருந்துச் செலவிற்குப் பணம் இருந்தால் திருமணத்தை நடத்திவிடலாம். ஸ்ரீதனத் தொகைக்கு உண்டியல் எழுதித் தரலாம். மாமியாருக்கான 'அதாவது மாப்பிள்ளையின் தாய்க்கான - சீர் வரிசையைப் பொருள்களாகத் தரலாம். இப்போது போன்று ரொக்கம் தரப்படவில்லை. பாத்திரக் கடைக்காரர்களிடம் பித்தளை, வெண்கல, மங்கு(எனாமல்) பாத்திரங்கள், மரச் சாமான்கள் ஆகியவற்றை உண்டியல் எழுதித் தந்து கடனாகப் பெறலாம். இரண்டு உண்டியல் களுக்கும் உரிய காலத்தில் பணம் தரப்படும். தரப்படும் என்ற நம்பிக்கை மாப்பிள்ளை வீட்டாருக்கும் பாத்திரக் கடைக்காரர்களுக்கும் இருந்தது. தாய்க்கு தரப்பட்ட வைர, தங்க நகைகள், வெள்ளிப் பொருள்கள் பெண்களுக்குப் பகிர்ந்து தரப்படும்.

இப்போது ஸ்ரீதனத் தொகை செக், டிராப்ட் அல்லது ரொக்கமாகத் தரப்பட்டாலும் ராசி காரணமாக உண்டியல் எழுதித் தரும் பழக்கம் தொடர்கிறது. திருமணத்தன்று இரவே உரிய தொகைக்கு உண்டியல் எழுதப்பட்டு பின்பக்கம் வரவு வைக்கப்படுகிறது.

**சில சொல் வழக்குகள்**

*அமயம் சமயம் தெரியாமல். (சந்தர்ப்பம் தெரிந்து கொள்ளாமல்)*

*அவிசாரி போனாலும் முகராசி வேண்டும். (எந்த தொழில் செய்யவும் அதற்குரிய தகுதி வேண்டும்.)*

*அழுதழுது பிள்ளை அவள் தர்னே பெறணும். (தன் துன்பங்களை தானேதான் அனுபவிக்க வேண்டும்.)*

*ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இரு.*

*ஆடத் தெரியாதவ தெரு கோணல் என்றாளாம்.*

*காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது.*

*சிரங்கு பிடித்தவன் கையும் கத்தி பிடித்தவன் கையும் சும்மா இருக்காது.*

*ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே.*

*ஆயிரங்காலே மாகாணி என்று பேசுவான். (விலாவாரியாகப் பேசுவான். மிகையாகப் பேசுவான். ஆனால் காரியத்தில் பயனில்லை.)*

*ஆனை அசஞ்சு தின்னும். வீடு அசையாம தின்னும். (வீடு கட்டிய வர்களுக்கும் பழுது பார்த்தவர்களுக்கும் இதன் பொருள் விளங்கும்.)*

*இட்ட கடன் பட்ட கடனுக்கு ஆகாது. (வாங்கிய கடனைத் திருப்பித்தர கொடுத்த கடன் பயன்படாது; நேரத்திற்கு வந்து சேராது.)*

*உடையவுக இல்லாட்டா ஒரு முழம் கட்டை.*

*உள்ளே இருக்கிற சாமி உருண்டைக் கட்டி கேட்குதாம். வெளியே இருக்கிற சாமி சர்க்கரைச் சோறு கேட்குதாம்.*

*ஊமைக்கு உளறுவாயன் சண்டப்பிரசண்டன்.*

*எலிக் குஞ்சுன்னாலும் தனிக்குச்சு வேணும்.*

*ஐந்து வயதிலே அண்ணன்தம்பி பத்து வயதிலே பங்காளி.*

*தோளுக்கு மிஞ்சினால் தோழன்.*

*ஒக்கல்லே பிள்ளையை வச்சு ஊர் வழியே தேடினாளாம்.*

*ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம். உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும்.*

*கடைந்த மோரில் வெண்ணை எடுக்கிறவன்.*

*சாக்கடைத் தண்ணீரில் மேந் தண்ணி (அசுத்தமானதிலும் சிறிது மேம்பட்டது.)*

*செட்டி கப்பலுக்கு செந்தூரான் துணை.*

*செத்தவன் கையில் வெற்றிலை பாக்கு கொடுத்தாற்போல.*

*தலைப் பிள்ளைக்கு இல்லாத தண்டையும் மாராப்பும் மறுபிள் ளைக்கு என்ன?*

*தெற்கு வடக்காக இழுத்து விட்டான்.*

*நிறைநாழி உருளாது குறைநாழி உருளும். நிறைகுடம் தளும்பாது.*

*பகச்சேதி பார்த்துப் பேசு இராச்சேதி அதுதானும் பேசாதே.*

*பட்டணம் பெரிசு பொட்டணம் வைக்க இடமில்லை.*

*என் மகன் பெண்டாட்டியாத்தா பெரியாத்தா என்று அவள் சொல் வதற்கெல்லாம் தலையாட்டுகிறான்.*

*மாம்பூவைக் கண்டு மகிழ்ந்து போகாதே (பெரும்பாலான பூக்கள் உதிர்ந்து விடும்)*

*மாசிப்பூ (மாம்பூ) மரத்திலே தைப்பூ தலையிலே*

*குளத்தோடு கோபித்துக்கொண்டு குண்டி கழுவாமல் போவது போல.*

*ஆயிரம் பாட்டிற்கு அடி தெரியும் நூறு பாட்டிற்கு நுனி தெரியும்.*

*மதிப்பு மசால் வடை பிச்சுப் பார்த்தா ஊசவடை.*

*மாவிலேயும் ஒட்டாமே பணியாரத்திலும் ஒட்டாமே இரண்டுங் கெட்டான் நிலை.*

*முன் கையை நீட்டினால் முழங்கை நீளும். ('நீ உதவி செய்தால் தான் மற்றவரிடம் உதவியை எதிர்ப்பார்க்கலாம்.')*

*மூணு வேட்டி கட்டிய ஆம்பிளையா நீ? (பெண்கள் ஆவேசமாகக் கேட்பது. மூணுவேட்டி - மேல்துண்டு, கோவணம், வேட்டி)*

*விழுற இடத்திலே மச்சம் விழுந்தா எல்லாம் வகையா வந்து வாய்க்கும். நான் வாரேன் வாக்கப்பட, எந்தங்கச்சி வாரா பிள்ளை தூக்கன்னு வந்து விழுவாளுக. (ப. சிங்காரம். புயலிலே ஒரு தோணி)*

*வீரியம் பெரிசா, காரியம் பெரிசா?*

*வாக்குல கெட்ட கழுதையைப் போக்குல விட்டுத்தான் திருப்பணும்.*

*வெந்ததைத் தின்று விதிவந்தவுடன் சாகவேண்டியதுதான்.*

*வெள்ளைக் காக்காய் மல்லாக்கப் பறக்குதுன்னு பணக்காரன் சொன்னா, ஆமா மூணு காக்காய் பறக்குதும்பாய்ங்க, வாழ்ந்தானுக்கு மாரடிக்கிற பயக.*

பாயிலே கிடந்தவன் தோளிலே கிடப்பான்; தோளிலே கிட ந்தவன் பாயிலே கிடப்பான்.

வாழ்ந்தவுக கெட்டா வரையோட்டிலும் சேத்தியில்லை.

நாய்க்கு வேலையுமில்ல, உக்கார நேரமுமில்லை.

எடுத்தெறிஞ்ச எச்சிஇலையை திருப்பி நக்கினாப்புலே.

பனையிலிருக்கிற கருப்பட்டி வாயிலே இருக்கிறாப்போல பேசுவாக. (நன்றி: நாட்டரசன் கோட்டை, சுப. சண்முகம்)

## சொல்வழக்குகள் - பழமொழிகள்

குடிக்கிறது கூழாம் கொப்பளிக்கிறது பன்னீராம்.

உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியுமா?

ஊமை ஊரைக் கெடுக்கும் பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.

ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம்.

ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டணும்.

ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டுச்சாம்.

ஊரார் வீட்டுப்பிள்ளையை ஊட்டி வளர்த்தா தன் பிள்ளை தானே வளரும்.

தினையை நட்டவன் தினையை அறுப்பான். வினையை நட்டவன் வினையை அறுப்பான்.

வீட்டுக்கு வீடு வாசற்படி.

வீட்டைக் கட்டிப்பாரு பெண்ணைச் செஞ்சுபாரு.

கேப்பையிலே நெய் வடியுதுன்னா கேட்பாருக்கு புத்தி எங்கே போச்சு?

தங்க ஊசின்னா கண்ணிலா குத்திக்குவாக?

மாமியா உடைச்சா மண்சட்டி மருமக உடைச்சா பொன்சட்டி.

காப்பான் பெரிசா கள்ளன் பெரிசா?

சட்டியிலே இருந்தாத்தானே அகப்பையில வரும்?

வலியவந்த சீதேவியைக் காலால் உதைத்தாற்போல.

எல்லோரும் ராசாவா இருந்தா பல்லக்குத் தூக்குறது யாரு?

தின்னு ருசி கண்டவுக திண்ணையை விட்டுப் போகமாட்டாக.

நல்லபாம்பு ஆடுதுன்னு நாக்ளாம் பூச்சி ஆடமுடியுமா?

மண்குதிரையை நம்பி ஆத்திலே போன கணக்கா.

தனக்கு மிஞ்சித்தான் தானதருமம்.

பொறந்தன்னைக்கு உள்ளது பொங்கலிட்டாப் போகுமா?

*தாய் முகத்தைப் பார்த்து கஞ்சி ஊத்துவா. தாரம் மடியப் பாத்து கஞ்சி ஊத்துவா.*

*மெத்தப் படிச்சவுக சுத்தப் பைத்தியக்காரவுக.*

*மூத்தது மோளை இளையது காளை.*

*சிங்காரிச்சு மூக்கறுத்த மாதிரி.*

*துணிஞ்சவுகளுக்குத் துக்கமில்லே வெறுத்தவுகளுக்கு வெக்கமில்ல.*

*அடியாத மாடு படியாது.*

*அடிஉதவுற மாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டாக.*

*பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.*

*ஆனை வாயிலே போன கரும்புபோல.*

*செத்தா தெரியும் செட்டியார் நாத்தம்.*

*ஊருப்பஞ்சாயத்துக்க நட்டமே நிற்பாக. தன் பஞ்சாயம் தனக்குத் தெரியாது.*

★★★

## கீழ்வாய் இலக்கம்

### திண்ணைப் பள்ளிக்கூடம். ஏட்டுப் பள்ளிக்கூடம்

அறுபது ஆண்டுகள் முன்பு திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வழியாகச் செல்பவர்கள்,

*ஓரோண் ஒண்ணு*

*ஈராண் இரண்டு*

*மூவோண் மூணு*

என்ற வாய்ப்பாட்டை சட்டாம்பிள்ளை சொல்ல மாணவர்கள் உரத்த குரலில் அதைத் திருப்பிச் சொல்வதைக் கேட்டிருக்கலாம் கீழ்வாய் இலக்கம் கற்கும் மாணவர்கள்

*அரைக்கு அரை கால்* = $1/2 \times 1/2 = 1/4$

*அரைக்குங்கால் அரைக்கால்* = $1/2 \times 1/4 = 1/8$

என்று சொல்வதும் காதில் விழுந்திருக்கலாம்.

அரிச்சுவடி, எண்சுவடி, கீழ்வாய் இலக்கம்,வாக்குண்டாம் மனமுண்டாம் பாடல்கள் கற்பிக்கப்பட்டன. பனையோலைகளில் எழுத்தாணியால் அரிச்சுவடி, எண்சுவடி எழுதப்பட்டிருக்கும் ஏட்டின் ஓரத்தில் உள்ள துளை வழியாக ஏட்டுக்கயிறைச் செலுத்திக் கட்டி வைத்திருப்

பார்கள். மாணவர்கள் சிலேட், குச்சி (பலப்பம்) ஏட்டுக்கட்டுடன் பள்ளி செல்வார்கள்.

விஜயதசமி அன்று மாணவர்கள் பள்ளியில் சேர்வார்கள். அன்று ஆசிரியரும் சட்டாம்பிள்ளையும் மாணவர்களும் புதிதாகப் பள்ளியில் சேரும் மாணவன் வீட்டிற்குச் செல்வார்கள். முற்றத்தில் ஆற்று மணல் பரப்பி அதில் ஆசிரியர் சிறுவனின் வலதுகை ஆள்காட்டி விரலைப் பிடித்து 'ஹரிநமோத்து சிந்தம். அ, ஆ, இ' எழுதுவார். பிறகு மாணவன் பாடலின் ஒவ்வொரு வரியாகப் பாட மற்ற மாணவர்கள் 'சீகரா' என்ற முத்தாய்ப்பாகச் சொல்வார்கள். ஆசிரியருக்கு கெண்டை (ஜரிகை) வேஷ்டி, துண்டு, தட்சணையும் சட்டாம் பிள்ளைக்கு சாதாவேஷ்டி, துண்டும் மாணவர்களுக்கு மலேயா ரொட்டி, மிட்டாயும் வழங்கப்படும்.

1955ம் ஆண்டு நூறு புதுக்காசுகள் கொண்ட ரூபாய் நாணயம் அறிமுகப்படுவதற்கு முன்பு ரூபாய், அணா, தம்பிடி வழக்கில் இருந்தன. அப்போது வீசம் (1/16- ஒரு அணா) அரைக்கால் (1/8- இரண்டு அணா) மூணு வீசம் (3/16- 3 அணா) கால் (1/4 - 4 அணா) போன்ற ஒன்றுக்குக் கீழ் பட்ட எண்கள் பயன்படுத்தப்பட்டன. கீழ்வாய் இலக்க வாய்ப்பாட்டை மாணவர்கள் பள்ளியில் கற்றார்கள்.

**ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட சிற்றெண்கள்:**

| | பழைய நாணயத்தில் |
|---|---|
| வீசம் - 1/16 | ஒரு அணா |
| அரைக்கால் - 1/8 | இரண்டு அணா |
| மூணுவீசம் - 3/16 | மூன்று அணா |
| கால்........ - 1/4 | நான்கு அணா |
| காலேவீசம்- 5/16 | ஐந்து அணா |
| காலே அரைக்கால் - 3/8 | ஆறு அணா |
| காலே மூணுவீசம் - 7/16 | ஏழு அணா |
| அரை................ - 1/2 | எட்டு அணா |
| அரையே வீசம் - 9/16 | ஒன்பது அணா |
| அரையே அரைக்கால் - 5/8 | பத்து அணா |
| அரையே மூணுவீசம் - 11/16 | பதினொரு அணா |
| முக்கால்................ - 3/4 | பனிரெண்டு அணா |
| முக்காலே வீசம் - 13/16 | பதிமூன்றுஅணா |
| முக்காலே அரைக்கால்- 7/8 | பதினான்கு அணா |
| முக்காலே மூணுவீசம் - 15/16 | பதினைந்து அணா |

(நன்றி: சோமலெ - செட்டிநாடும் செந்தமிழும்)

தனவைசியர் என்றும் நகரத்தார் என்றும் அழைக்கப்படும் நாட்டுக் கோட்டை செட்டியார்கள் காஞ்சிபுரத்திலிருந்து காவிரிப்பூம் பட்டினம் வந்ததற்கும் அங்கிருந்து பாண்டிய நாட்டிற்குக் குடிபெயர்ந்த தற்கும் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவை ஆராய்ச்சிக்கு உரியவை.

காலங்காலமாக அவர்கள் வியாபாரம் செய்து வந்ததால் எண் களை, குறிப்பாக சிற்றிலக்க எண்களை தினசரி வாழ்க்கையில் பயன் படுத்த வேண்டிய அவசியம் இருந்திருக்கிறது. பொருள்களின் விலை யைத் துல்லியமாகக் கணக்கிடுவதற்கும் வட்டியைக் கணக்கிடுவதற்கும் சிற்றிலக்க வாய்ப்பாடு தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் உப்பு மற்றும் மளிகைப் பொருள்கள் வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தது மருது சகோ தரர்கள் வரலாறு மூலம் உறுதிப்படுகிறது.

பெரிய மருது நோய் வாய்ப்பட்டு துன்புற்றபோது அரண்மனை வைத்தியர் 'என்னால் இயன்ற வைத்தியத்தை செய்து பார்த்து விட்டேன். இனிமேல் கடவுள் விட்ட வழி. செட்டியார்கள் நிர்வாகம் செய்யும் குன்றக்குடி முருகன் கோயிலுக்கு நேர்ந்துகொண்டு உபயம் செய்யுங்கள். நோய் தீரும்' என்றார்.

செட்டியார் யாரையாவது அழைத்து வா என்று அரசர் கட்டளை யிட அரண்மனை சேவகர்கள் கழுதையின் மேல் உப்பு மூட்டையை வைத்து சென்றுகொண்டிருந்த காடன் செட்டியாரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். 'நான் எதுவும் ராசகுத்தம் செய்யலியே. என்னை ஏன் ராசா கூப்பிடுறாக' என்று செட்டியார் பதறிய படி அரண்மனைக்கு வந்தார். அவர்மூலம் அரசருக்கு குன்றக்குடி மலைமேல் உள்ள கோயில் செட்டியார்கள் நிர்வாகத்தில் நடைபெற்று வருவது தெரிந்தது. கோயிலுக்கு பல உபயங்கள் செய்ய அரசரின் உடல் நிலை தேறியது.

★★★

## தற்போது வழக்கில் இல்லாத சுபநிகழ்ச்சிகள்:

**சூப்பிடி:** பத்து, பன்னிரண்டு வயதுச் சிறுவர்களுக்காக நடை பெற்ற நிகழ்ச்சி. நன்றாக அலங்கரித்து குதிரைமேல் உட்கார வைத்து கோயிலுக்கு அழைத்துச் செல்வார்கள். உறவினர்களுக்கும் பங்காளி களுக்கும் விருந்து உண்டு. அப்போதெல்லாம் 15,16 வயதில் திருமணம் நடைபெற்றது. இன்னும் சில ஆண்டுகளில் திருமணத்திற்குத் தயாராக எங்கள் வீட்டில் ஒரு சிறுவன் இருக்கிறான் என்பதைத் தெரியப் படுத்தும் சடங்கு.

**திருவாதிரை:** ஆதிரை நட்சத்திரத்தில் கன்னிப் பெண்கள் வீட்டுக்கு வீடு சென்று சோறு ஏற்கும் சடங்கு விழா. பெண்ணின் திருமணத்திற்கு செய்து வைத்திருக்கும் நகைகளை அணியச் செய்து இன்னும் சில ஆண்டுகளில் அவள் திருமணத்திற்குத் தயாராவாள் என்று

*அறிவிக்கும் நிகழ்ச்சி. உறவினர்களும் பங்காளிகளும் விழாவில் கலந்து கொள்வர்.*

**இராவாண்டை:** *வழக்கில் இல்லாத நிலா வழிபாட்டு நிகழ்ச்சி. முழுநிலவு நாளன்று இரவை ஆளும் சந்திரனுக்கு பெண்கள் படைய விட்டு வழிபடுவார்கள். ஐந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் கலந்து கொள்ளலாம். படைத்த பொருள்களைப் பகிர்ந்து உண்பார்கள். பாடல் களும் மாறுவேட நிகழ்ச்சியும் உண்டு. என் நினைவில் உள்ள பாடல். 'வட்டவட்ட ராவிலையும் மாசிப் பிறையிலையும் திட்டமுள்ள இராவாத்தா தெருவீதி வாராண்ணு போடுங்க பொண்டுகளா பொன்னார் திருக்குலவை.'*

**புதுமை:** ஒரு வயது, இரண்டு வயதுக் குழந்தைகளுக்கு நடத்தப் படும் விழா. ஆண்டு நிறைவு விழா போன்றது. செலவு இல்லத்தரசியின் தாய்வீட்டாரைச் சேர்ந்தது. உள்வீட்டில் குழந்தையை தாம்பாளத்தில் வைத்து பெற்றோர், தாய்மாமன் சுற்றுவார்கள்.

**வழக்கில் உள்ள சுபநிகழ்ச்சி :**

**வேவு:** விரும்பித் தலையில் வைத்துக் கொடுக்கும் சீர். திருமணத் தன்று மணப் பெண்ணின் மாமன் வீட்டார் பங்காளிகளுடன் வந்து நடத்தித் தரும் நிகழ்ச்சி. முன்பு ஓலைக்கடகத்தில் இப்போது வெள்ளிக் கடகத்தில் - தேங்காய் முதலிய மங்கலப் பொருள்களை வைத்து மணப் பெண் வீட்டைச் சேர்ந்த ஆண்களும் மணமகன் வீட்டைச் சேர்ந்த பெண் களும் ஒவ்வொருவராக வேவுக் கடகத்தை உள்ளே வைத்துவிட்டு வரு வார்கள். இதற்கு மாம வேவு என்று பெயர். குழந்தை பிறந்தவுடன் நடத்தப்படுவது விளையாட்டுப் பெட்டி வேவு. இல்லத்தரசியின் தாய் வீட்டார் செலவில் நடைபெறும் விழாவில் குழந்தைக்குத் தரப்படும் விளையாட்டுச் சாமான்களும் சேலைகளும் மற்றப் பொருள்களும் காட்சிக்கு வைக்கப்படும்.

★★★

## நகரத்தார் கோயில் திருப்பணி குறித்த விமர்சனங்கள்

*நகரத்தாரின் அறப்பணிகள் - டாக்டர் நா.வள்ளி. பக்கம் 84,85.*

*1910ம் ஆண்டு ஞானசாகரம் என்ற பத்திரிகையில் மறைமலை அடிகள் நகரத்தார் அதிக பொருட் செலவில் கோயில் திருப்பணி செய் வதைக் குறித்துச் சற்றுக் கடுமையாக விமர்சித்திருக்கிறார். இவர்கள் தருமங்கள் மாறவேண்டும் என்று கூறியிருக்கிறார். இது தொடர்பாக 'ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் பெருமையும் அவர்கள் மீது பொறாமையுற்றோர் சிலர் சிறுமையும் நாட்டுக்கோட்டை செட்டிப் பிரபுக்கள் தரும முறையும்' என்ற ஒரு நூல் 1914ல் வெளிவந்துள்ளது.*

*இந்நூலுக்கு மறுப்பாக 1915ல் 'சுவாமி வேதாசலம் பிள்ளை அவர்கள் கொள்கையும் வேறுசில பிள்ளைகள் செய்கையும்' என்ற நூல் நகரத்தாரால் வெளியிடப்பட்டது. அதில் தாங்கள் பழுதடைந்த கோயில்களைத்தான் திருப்பணி செய்ததாகவும் சுவாமி வேதாசலம் அவர்கள் சொல்வது போல் நல்ல நிலையில் உள்ள கோயில்களை இடித்து மண்ணிலும் செங்கல்களிலும் காசை வீணாக்கவில்லை என்றும் நகரத்தார்கள் தெரிவித்துள்ளனர்.*

*பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியாரும் நகரத்தார்கள் கோயில் பணிகளுக்கு அதிகமாகச் செலவிடுவதை மாற்றிக்கொண்டு கல்வி முதலிய மற்ற பணிகளுக்குச் செலவிட வேண்டும் என்று கூறியுள்ளார். திருப்பணி தொடர்பாக சில மடாதிபதிகளுக்கும் நகரத்தார்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது.*

*இந்து சமயப் பாதுகாவலர்களாக விளங்கிய நகரத்தார்கள் பாடல் பெற்ற தலங்கள் போன்ற பழமையான தலங்களைத் திருப்பணி செய்த போது அறியாமையினால் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகளைச் சில கோயில்களில் காக்கத் தவறியிருக்கிறார்கள்.*

ப. சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி' நாவலின் சில பகுதிகள்:

*(எழுபது எண்பதாண்டுகள் முன்பு மலேயா, சிங்கப்பூர், இந்தோனேசியாவில் வாழ்ந்த சிவகங்கை மாவட்டத் தமிழர்களின் பேச்சு வழக்கை அறிய இந்த நாவல் வாசிப்பு பயன்படும்.)*

*ஆ! எப்படி மகிமையோடிருந்த தெரு இப்படி ஆகிவிட்டது! அந்தக் காலத்தில்-*

*காலை நேரத்தில் கிட்டங்கி முழுவதும் நன்மணம் கமழும் மல்லிகை, சாம்பிராணி, அரகஜா. அன்றாடச் சலவை ஆடையும் பரக்கப் பூசிய திருநீறுமாய்க் கைமேசைகளுக்குப் பின்னே, கடன் சீட்டுகளையும் குறிப்புப் பேரேடுகளையும் புரட்டியவாறு அடுத்தாட்கள் அமர்ந்திருப்பர். பெட்டியடிப் பையன் கால்களைச் சம்மணமாய் இறுக்கிப் பூட்டிப் பெட்டகத்தோடு பெட்டகமாய் நேர் முதுகுடன் உட்கார்ந்து, வங்கியில் சமால் போடுவதற்காகப் பணம் எண்ணிக் கண்ணாடிக் காகிதங்களில் சுருட்டிக் கட்டிக்கொண்டிருப்பான்.*

*வேலையோடு வேலையாய், பெட்டியடிப் பையன்கள் அடுத்தாளாகி 'வசூலுக்குப் போகும்' நாளையும், அடுத்தாட்கள் மேலாளாகி 'ஆட்டி வைக்கும்' காலத்தையும் எண்ணிக் கனவு காண்பார்கள்.*

*மேலாட்கள் திண்டுகளை அணைத்தவாறு குறட்டை விடும், அல்லது 'ஆணஸ்ட்' சூனாப் பானா கிட்டங்கி மாடியில் ரங்கு விளையாடும் பிற்பகல் வேளையில் அடுத்தாட்கள் கால்களை நீட்டிச் சாய்ந்து உட்காருவார்கள். பெட்டியடிப் பையன்களின் தகட்டு முதுகும் சிறிது தொய்யும்.*

*ஊர்த் தபால் வரும் நாளில் திருவிழா உற்சாகம் தண்டவமாடும். ஒருவருக்கொருவர் கடிதங்களைப் படித்துக் காட்டியும் தெரிவித்தும் ஆனந்தம் அடைவார்கள் - அண்ணே, மட்டிக் கண்மாய் நிறைஞ்சிருச்சாம். இந்த வருசம் சோத்துக்குப் பஞ்சமில்லை...மாப்பிளை, சியாந்தார் சீனாவானாக் கூனா கடையில பெட்டியடிக்கி இருந்தானே ஒரு ஒத்தை நாடிப் பயல், நல்லமுத்தன், அவன் பெண்டாட்டியைக் குத்திக் கொன்னுபிட்டு நாண்டுக்கிணு செத்துப் போனானாம்..மூனாரூனா, உங்க கடைக்கிப் பெரியையா பிள்ளை மேலாளுக்கு வருறார்; சம்பளச் சீட்டு எழுதியாச்சு; ரகசிய நியூஸ்...*

மேல் மாடியிலோ, கீழே ஒதுக்குப்புறமாகவோ அடுத்தாட்கள் கைமேசைகளுக்குப் பின் அமர்ந்து, குறிப்பு, பேரேடுகளை வைத்துக் கொண்டு கணக்கு ஒத்துக்கொள்வார்கள்.

''எம்பத்தெட்டாம் நம்பர் மாங்காலானில் டாவ்ரோஸ் பெரிய துவான் வீட்டில் சமையல் வேலை பார்க்கும் யாவாக்கார கசான்பாவிரோ பற்று மேற்படியான் பெஞ்சாதி பத்மாவதி ஒண்ணு, லாயர் கோட்கென்ஸ் கந்தோர் கிராணி பூரின் சுக்கமூடா ரெண்டு ஆக ரெண்டு பேர்கள் கூடக் கையெழுத்து பத்து மாதம் தவணைக் கிஸ்தி சேகல் சீட்டு ஒண்ணுக்கு வட்டிகூட ரூபாய் இருநூத்தி நாப்பது.''

''ம்ஹ்.''

''ஆதாய வரவு மேற்படி வசம் வட்டி ரூபாய் நாப்பது.''

''தொண்ணூத்தி நாலாம் நம்பர் தெப்பக்கொங் ஸ்திராட் கெடேரம்பா சீனன் தவ்பூசிம் பற்று தங்கக் கழுத்துச் சங்கிலி ஈட்டின் பேரிலும் மேற்படியான் தம்பி மார்க்கெட் ஸ்திராட் புடவைக் கடை தவ் லீ பூன் கையெழுத்துக் கூடவும் இருபது மாதம் தவணை கிஸ்தி சேகல் சீட்டு ஒண்ணுக்கு வட்டி கூட ரூபாய் ஆயிரத்தி இருநூத்தி அம்பது.''

''ம்ஹ்.''

''ஆதாய வரவு மேற்படி வசம் வட்டி ரூபாய் இருநூத்தி அம்பது.''

''ஏண்ணே, ஏழா நம்பர் கிட்டங்கி வழுக்கு மண்டை ஒரு மாதிரியாக் காலை அகட்டிக்கிணு திரியிறாரே என்ன சங்கதி, பஞ்சர் கிஞ்சர் ஆகிப் போச்சோ?''

''அவுகளுக்கு ஆம்பிளை சீக்கு. மேற்படி சங்கதியில பணத்தை இறுக்கிப் பிடிச்சால் இப்படித்தான். அச்சின் ஓட்டல்ல பிராண்டான்காரி ஒருத்தி சிலுப்பிக்கிணு திரியிராள்ள, ஒரு டரியல், அவகிட்டெக் கொள் முதல். ம்ஹ்.''

''சாட்டர் வங்கி பற்று சமால் ரொக்கம் ரூபாய் மூவாயிரம்.''

''ம்ஹ்.''

''இதுவும் பற்று முன் தேதியில் பதிய விடுதல் சமால் செக் ஒண்ணுக்கு ரூபாய் எண்ணூத்திப் பதினெட்டு காசு தொண்ணூத்தி ஆறு.''

''ம்ஹ்.''

★★★

''நான் மூணாங் கணக்கு மைடானுக்கு வரச்சே, பிலவான்ல நாலு நாள் கப்பலை விட்டு இறங்கக் கூடாதுன்னு சொல்லிப்பிட்டான்.'' சோறு நிறைந்த வாயுடன், 'உப்புக்கண்டம்' அண்ணாமலைப் பிள்ளை கூறினார். ''அப்ப, மலாய் டாப்புல கால்ராவோ என்னமோன்னு சொன்னாங்ய.

அது, ம்ம்...தொள்ளாயிரத்தி முப்பதோ முப்பத்தி ஒண்ணோ நினைப்பில்லை - கொப்பனாபட்டி நாவன்னா மூனா மார்க்கா நொடிச்ச வருசம்.''

''நாவன்னா மூனா மார்க்கா நொடிச்சது முப்பத்தி ஒண்ணுல.'' அங்கமுத்து தெரிவித்தான். ''அந்த வருசந்தான் அவுக பினாங்குக் கடையில பெட்டியடிக்கி வந்தேன்.''

''அங்கமுத்து சூரப்பயல்!'' சண்முகம் பிள்ளை கூவினார். ''எட்டுக் கண்ணும் விட்டெரிஞ்ச நாவன்னா மூனா மார்க்காவைக் காலெடுத்து வச்ச மூணா மாசம் எடுத்து வச்சு எழுதினவன்ல!''

''எட்டுக் கண்ணும் விட்டெரிஞ்சதோடயா...கொடிகட்டிப் பறந்துச்ச!'' ஆவன்னாவின் வலது கை இலையைத் துப்புரவாக வழித்துப் பருக்கைகளைத் திரட்டி அள்ளிக் கொண்டிருந்தது. ''கொடி கட்டிப் பறந்துச்சு, கொடி!....நாவன்னா மூனா மார்க்கான்னு சொன்னால், சாட்டர் வங்கிப் பெரிய தொரையே - யாரு? இங்கினைக்குள்ள இருக்கிற பினாங்கு மைடான் தொரையக இல்லை; இவுகளுக்கெல்லாம் அப்பன் லண்டன்ல இருக்காரே, அவர் - ஒரு செக்யண்டு யோசிப்பாராம்.''

ஆவன்னாவின் தலைஆடிற்று. இடக்கை, பக்கத்தில் கிடந்த டைமன் துண்டை எடுத்து முகத்தையும் பிடரியையும் துடைத்தது. பார்வை வலப்புறம் - நல்லக்கண்ணுக் கோனார் திசையில் சென்றது.

''மாப்பிளை, நல்லா வயிறு நிறையாத் தின்னுங்க. இப்படிக் கோழி கிண்டுறாப்புல கிண்டினா ஊர்ல போயி எப்படிப் பிள்ளை குட்டி பெறுறது?''

''பெத்த பிள்ளையக போதும், அயித்தான். இப்பவே உங்க தங்கச்சி இடுப்பொடிஞ்சு போயிக் கிடக்காள். அது சரி, பேச்சை விட்ராதியக, நாவன்னா மூனா மார்க்கா நொடிச்ச உள் குட்டு என்ன? இனத்தில ரெம்ப நிலுவை நின்னு போச்சா, இல்லை, ரெண்டு கால் எலியக...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லையிங்கிறேன். டயன் முடிஞ்சு போச்சு. அம்புட்டுத்தான். ரெங்கோன் கடை, அவரு இவரு, அப்படி இப்படியினு என்னென்னமோ சொல்லிக்கிணாக. அதெல்லாம் பெரிய இடத்துச் சங்கதி, நமக்கு என்ன தெரியிது...யார் வச்ச தீயோ படப்பு வெந்து போச்சு.''

★★★

ஆண்டியப்ப பிள்ளை வெற்றிலைகளை ஒவ்வொன்றாக எடுத்து உள்ளங்கையில் துடைத்துக் காம்பையும் நுனியையும் கிள்ளி, நரம்புரித்துச் சுண்ணாம்பு தடவி வாயில் திணித்துக்கொண்டே சொல்லலானார்:

முத முதல்ல தொள்ளாயிரத்தி ரெண்டுல கப்பலேறி, கானாச் சீனா வானா ஈப்போ கடைக்கி வந்தேன். முதலாளி சிவசங்கரம் பிள்ளை - யார் தெரியுமுல, 'அத்தறுதி' முத்துக்கருப்ப பிள்ளைக்கிப் பெண் கொடுத்த

மச்சினன்: வேம்பு வயல்காரர். குதிரையில போயி எதிரி குடுமியை அறுத்துக்கிணு வந்தார்னு சொல்வாகளே, கூனாப் பானாழானா - அதாவது ஆவிச்சி வள்ளலுக்கு அப்பச்சி; அரசப்ப செட்டியாருக்கு அண்ணன் - அவர் ரெங்கோன் கடையில எஸ்ஸெஸ்ஸாய்க் கொண்டு வித்துப் போதும் போதுமுனு கை நிறையச் சம்பளம் சாமானுக்கு வாங்கியாந்தவர்... கூனாப் பானாழானா மார்க்கா இருக்கே, அது சாட்டர் வங்கி, உலாந்தா வங்கியாட்டமாய்ப் பெரிய கப்பல். நம்ம மொஸ்கி ஸ்திராட் கொடுக்கல் வாங்கல் அம்புட்டும் அங்கெ ஒரு நாள் வரவு செலவு. சீனா வானா சொல்லியிருக்கார்: கூனாப் பானாழானா ரெங்கோன் கடையில அவர் கொண்டு விக்யச்சே மொகல் வீதியில இறங்கி நடந்து போனாருன்னா, பெரிய சேட்டு மகன் சேட்டெல்லாம் எழுந்திரிச்சு ராம் ராம் கொடுப்பானாம். அந்த மார்க்காவில கொண்டு விக்கிறதுன்னா பிரிட்டீஸ் எம்பிரஸ்ல தாசீல் பண்ற மாதிரி...விடிஞ்சதிலயிருந்து படுத்துக்கிறவரை பெட்டியடிப் பயகளும் அடுத்தாளுகளும் பணம் எண்ணிக் கட்டுற சத்தம் மணியோசையாட்டம் சிஞ்சாமிர்தம் கொட்டிக்கிணு இருக்குமாம். பெட்டகங்களைத் திறந்தால், நம்பிக்கைக்குக் கொண்டாந்து கொடுத்து வச்ச நகைநட்டுக்களும் பத்திரம் தஸ்தாவேசுகளும் பொட்டணம் போட்டுப் பேரெழுதி அடுக்கடுக்காய் அடுக்கி இருக்குமாம். வங்கியில கூனாப் பானாழானாச் சமால் வருறவரை எந்நேரமானாலும் கணக்கு முடிக்யாமல் உட்கார்ந்துக்கிணே இருப்பாங்யளாம். அது அந்தக் காலம்! இப்பத்தான் எல்லாம் மார்க்கா, எல்லாரும் முதலாளியினு ஆகிப் போச்சே! அது போகுது, என்ன சொன்னேன்?....

''எப்போ கானாச் சீனாவானா மார்க்காவுக்கு வந்தியக.''

ஆமா. அங்கெ ஒரு கணக்குத்தான் இருந்தேன். சீனாவானா தொழில்ல சூரன். நல்ல குணமான ஆளுதான். ஆனாக்கா சம்பளகாரனுக்குக் கொடுக்கிறது வைக்கிறதுல கை உள்ளடிக்யும். ஊர்ல போயி ரெண்டு மாசம் இருந்துபிட்டு, தீனா மூனா ரூனாத் தீனா மார்க்கா சித்தியவான் கடைக்கி வந்தேன். அந்தக் கணக்கும் பெட்டியடிக்கித்தான். அப்ப எனக்குச் சொற்ப வயசு. அப்புறம் அடுத்தாளுக்குச் சம்பளச் சீட்டு எழுதிக்கிணு அவுக பினாங்கு கடைக்கு வந்தேன்; தொடர்ந்து அவுககிட்டயே பினாங்குக் கடைக்கும் கோலாலம்பூர் கடைக்குமாய் வந்துக்கிணு இருந்தேன். முதலாளி 'விடாக்கண்டன்' திட்டாணி செட்டியார். வெகு காலத்துக் கடை. பரம்பரையாப் பெரிய மார்க்கா. சம்பளம் சாமானுக்குக் கொடுக்கிறதுல ரெம்பத் தாராளம். அங்கெ கொண்டு விக்யச்சேதான் மேக் கொண்டு காணி கரைய வாங்கி வீட்டை எடுத்துக் கட்டினது..இருபத்திரெண்டாவது வயசில கலியாணம்.

விடாக்கண்டன் செட்டியார் கோடையிடியன். கோபம் வந்துட்டால் கண்ணு மூக்குத் தெரியாது. திங்கு திங்குன்னிக் குதிப்பார்; தாறு

மாறாய்ப் பேசிப்பிடுவாரு. உடும்புப் பிடியின்னால் உடும்புப் பிடி. அரைச் சாண் நிலத்துக்கு ஆனை வெட்டிப் பொங்கல் வைப்பேன்ம்பாரு. விராலிமலை முத்துமீனாச்சியிங்கிறவளைக் கொண்டாறதுக்காக, ஒரு பெரிய செமீந்தாரோட சபதம் போட்டு ஒரு லகரம்வரை செலவு பண்ணி னார். சொன்னபடி அவளைக் கொண்டாந்து, புதுக்கோட்டையில பளிங்கு மாளிகை கட்டிக் கொடுத்து வச்சிருந்தாரு...

''ஏன் அயித்தான், கீழராச வீதியிலதானே அந்த வீடு?''

அது 'ஏரப்ளான்' சூனாப் பானா எடுத்து வச்சிருக்கிற பொம்பளை யில - பார்சி லேடி. இது பல்லவன் குளத்துப் பக்கமுங்கிறேன். முத்து மீனாச்சியிருக்காளே, அவளைக் கண்கொண்டு பார்க்கமுடியாது - சூரியப் பிரகாசம். சின்ன வயசிலேயே செத்துப் போனாள்... அப்புறம் காக்கி னாடா சைட்லயிருந்து, [1]கோரங்கிக்காரி ஒருத்தியைப் பிடிச்சாந்து அந்த வீட்லயே வச்சிருந்தார். அது ஒரு மாதிரியா ஊர்ல மேயிற கழுதையினு தெரிஞ்சதும் அடிச்சு விரட்டிப்பிட்டு, மலையாளத்திலருந்து ஒருத்தியைக் கொண்டாந்தார். வெள்ளை வெளேர்னு வெள்ளைக்காரியாட்டமாயிருப் பாள். அவளை முடிச்சுவிட்டவர் மதுரையில ஒரு லாயர். அவருக்குக் கமிசன் தொகை மட்டும் ரூபாய் பதினாயிரம். அவள் புருசனுக்கும் பெருந்தொகை கொடுத்து வெட்டி விட்டாக. இதுகளை வினாக எத்தனை எத்தனையோ, சொல்ல முடியாது. எங்க செட்டியார் பொம்பளை விசயத்தில் பெரிய கவுச்சி...

செட்டியாருக்குக் கோபம் வந்துவிட்டால் கண்ணு மூக்குத் தெரியாதுன்னு சொன்னேம் பாருங்க... முதல் கணக்கு அடுத்தாளுக்கு இருந்துட்டுப் போய் ஊர்ல இருக்கச்சே, ஒரு சமயம் ரொம்ப பணமுடை. வரிப் பாக்கி கட்ட செட்டியார்ட்டப் போயி பணம் வாங்கிக்கிணு வரலா முனு போனேன். முகப்பில் உட்கார்ந்திருந்தார். பார்த்ததும், புதுக் கோட்டையில போயி ஒரு வேலைய முடிச்சிக்கிணு வாடான்னி பிளசர்ல அனுப்பிச்சுவிட்டார். போனேன். வேலை முடியலை. வந்து சொன்னதும் கோபம் வந்திருச்சு. அவனே இவனே, அத்திரிப் பூத்திரியினு கண்டபடி வஞ்சுபிட்டு, விருட்டுனு பிளர்சல போயிட்டார். திண்ணையில உக்கார்ந் திருக்கேன். என்ன செய்யிறதுனு தெரியலை. காருக்குப் போவமுன்னாக் காசு குறையுது. எப்பவும் ஓர் இடத்துக்குப் போகச் சொன்னால் நோட்டை எடுத்து எறியிறவர் அன்னைக்கி என்னமோ ஒரு நெனைப்பில் மறந்திட் டார். நானும் தேள்வையின்னால் புதுக்கோட்டையில யார் கடையில யாச்சும் செட்டியார் பேரைச் சொல்லி வாங்கிக்கலாமுனு மிதப்பாய் இருந்துட்டேன். ஆச்சிகிட்டப் போயிச் சொல்வமுன்னால் அவுக ரெம்ப மேலுக்கு முடியாமப் பின்கட்டுல படுத்திருக்காக, வயித்துப் பசியோ சொல்லி முடியாது. சிறு குடலைப் பெருங்குடல் திங்கிது... என்னடா இது, மலைபோல நம்ம முதலாளி வீடு இருக்குன்னி வந்தமே, இப்படி

ஆகிப்போச்சே. சாயந்தரம் தவணை தீருது. கதவைப் பிடுங்கிக்கிணு போய்த்தான்னால் நாளைக்கி ஊர்ல தலைகாட்ட முடியுமான்னி நினைக்ய நினைக்ய நெஞ்சு குமுறுது. இருந்தாப்புல இருக்கேன். கிறுகிறுன்னு தலையைச் சுத்தீரிச்சு. சாய்ஞ்சிட்டேன். கழுத்தைப் பிடிச்சு நெரிக்கிறாப் புலயும், தண்ணிக்குள்ள பிடிச்சு அமுக்குறாப்புலயும் கனாக்கண்டனோ என்னமோ தெரியலை, மேலெல்லாம் வேர்த்து நடுங்குது. அப்ப,

'ஆண்டியப்பா! அட ஆண்டியப்பாஅஅ!'ன்னு கிணத்துக்குள்ள யிருந்து வருறாப்புல சத்தம் கேட்குது. துடிச்சுப் புரண்டு எழுந்திருச்சிட் டேன். கண்ணைக் கசக்சிக்கிணு பார்த்தால், மேலுக்கு முடியாமப் படுத் திருந்த ஆச்சி நிலைப்படியில வந்து நின்னுக்கிணு எங்க ஆத்தாளாட்ட மாய்க் கூப்பிடுறாக. ஆச்சியைக் கண்டதும் கண் கலங்கீரிச்சு. மாக்கு மாக்குனு அழுதிட்டேன். அப்ப. ஆச்சி,

'அட மறுக்கோளிப் பலே! ஏன்டா பச்சைப் பிள்ளையாட்டம் கண்ணைக் கசக்கிக்கிணு இருக்காய். கால் முகத்தைக் கழுவிக்கிணு சாப் பிடு வாடா'ங்கிறாக. நானு, 'ஆச்சீ, எனக்கு சப்தி வந்திருக்கு, ஆச்சீ!'ன்னு புலம்புறேன். அதுக்கு அவுக, 'என்னடா உளறுறாய். கல்லுப் போல உங்க செட்டியார் இருக்கையில எவன்டா உனக்கு சப்தி கொண்டாறவன்? முதல்ல சாப்பிடு, வாடா'ங்கிறாக. சரியினு போயிச் சாப்பிட்டுப்பிட்டு வந்து உட்கார்ந்தேன் அப்ப, ஆச்சி,

'ஏன்டா உங்க செட்டியார் கோபத்தில் ஒண்ணு சொல்லிப்பிட்டா கன்னா அதை ஒரு இதாய் நினைக்யலாமாடா...நேத்து அந்த மேமலை யான் தமாசுக் கொட்டகையில போயி - அவன் பாவிபரப்பான் படக் கின்னு போவான், செட்டிய வீட்டுக் குலத்தைக் குடி கெடுக்க வந்து பிறந் திருக்கான் - பத்தாயிரமோ பதினஞ்சாயிரமோ தோத்துக்கிணு வந்திருக் காக...அதுதான் யோசனை பண்ணாமல்..ஷ்ம், அது கிடக்குது, ஆமாஅஅ, அவசரமாய் வந்திருக்கியே என்னடா சேதி'யின்னாக. சொன் னேன். ஆச்சி மறு பேச்சுப் பேசலை. அலமாரியைத் திறந்து முப்பத்தஞ்சு ரூபாய் எடுத்துக் கொடுத்தாக. அப்புறம், மதுரை - நாகப்பட்ணத்தையர் கடையில வாங்கியாந்த மிட்டாயி, சேலத்திலயிருந்து தரவழைச்ச மல்கோவா, கப்பல்ல வந்த ரொட்டி பிஸ்கோத்து சாக்குலட்டு, வீட்ல போட்ட சீடை, முறுக்கு, அதிரசம் இதுகளையெல்லாம் கடகப்பெட்டி யில வச்சுக் கொடுத்தாக. எதுக்குச் சொல்ல வருறேன், அச்தக் காலத்தில அப்படி மகராசியக இருந்தாக...

செட்டியார் என்னென்ன ஆட்டமெல்லாமோ ஆடினார். விடாக் கண்டன்கிற டயிட்டல்படி வீதியில போற வம்புதும்புகளை விலைக்கு வாங்கி வச்சுக்கிணு வீம்பு பண்ணுவார். அவர் என்ன கூத்து நடத்தி னாலும் சரி, வீட்ல மகாலெச்சுமியாட்டமாய் ஆச்சி இருந்தாக! தீனா மூனா ரூனாத் தீனாக் கொடி எட்டுக் கண்ணும் விட்டெரிஞ்சு பறந்

துச்சு...வீட்டுக்குப் பொம்பளை வாய்க்கிறதுன்னாச் சும்மாவா இருக்கு! இன்றைக்கு நம்ம பக்கத்திலயும் மெட்ராஸ் டாப்பு இருபத்தி ஆறு சில்லாவிலயும் அரசப்ப செட்டியார் ராச தர்பார் பண்றார்ன்னால், ஏன்? அதுதான் வீட்டுக்கு ஆச்சி வந்த வேளை. அந்த ஆச்சி மண்ணைத் தொட்டாலும் பொன்னுதான். வீட்ல சோத்துக்குக் கேள்வி கேட்பார் உண்டா! வந்தவன் போனவன் வழிப்போக்கனுக்கெல்லாம் நளபாகச் சாப்பாடு. லெச்ச லெச்சமாய்ப் பணம் குமிஞ்சு கிடந்தாலும் ஊரானுக்கு ஆக்கிக் கொட்ட மனசு வேணுமுல... ம்ம், செட்டியார் புதுக்கோட்டை போனவர் வரலை. ஆச்சி கிட்டச் சொல்லிக்கிணு ஊர் போய்த்தேன்...

மய்க்யா நாள் பொலப்பொலன்னு பொழுது பரியிது. செட்டியார் பிளசர் போட்டு வந்து மானாரூனா வீட்ல இருந்துக்கிணு ஆள் விடுறார். நான் அப்பத்தான் வயலுக்குப் போறதுக்காகப் பழையது உண்டுக்கிணு இருக்கேன். எனக்கு வந்த வரத்தை இப்படி அப்படியினு சொல்ல முடியாது. நேத்துச் சொல்லிக்யாம வந்ததுக்குத் தான் வைய வந்திருக்கார் போலயிருக்கு. செட்டிய வீட்ல சேவகம் பண்றதுக்கு வதிலாய் சீதளிக் கரையில உட்கார்ந்து வருறவன் போறவனுக்குச் சிரைச்சு விட்டுக்கிணு இருக்கலாம்னு இருக்கு. சரி, என்ன செய்யிறது போவம்னு போனேன். 'அப்படி உட்கார்ரா'ன்னாரு. மூலையில உட்கார்ந்தேன். கொஞ்ச நேரம் கழிச்சு மானாரூனா கிட்டச் சொல்லிக்கிணு கிளம்பினார். என்னையும் ஏறிக்யச் சொன்னார். ஏறிக்கினேன். பிளசர் தேரடி கிட்டப் போகுது அப்ப.

'ஏன்டா, சொல்லிக்யாம ஓடியாந்திட்டியே. வீட்ல சாப்பிட்டியால்லியாடா? வந்த சேதி என்னடா?'ன்னாரு.

செட்டியார் இப்படிக் கேட்டதும் எனக்குப் படபடன்னு வந்திருச்சு. முதலாளி கிட்டப் பேசுறமுங்கிற நினைப்பு நறுவுசாய் இல்லை. நான் பாட்டுக்குக் கத்திக்கிணு ஆதியோடந்தமாய் அம்புட்டையும் சொல்றேன். வரிப் பாக்கி கட்ட விட்டுப் போச்சு. கையிலிருந்த பணத்தைச் சித்தப்பு கேட்டார்னு கைமாத்துக் கொடுத்துபிட்டேன். நெல்லளந்த பணம் வராமல் சுணங்கிரீச்சு. திடுதிப்னு வந்து நின்னுக்கிணு சப்தியிடாங்கிறாங்ய. மானாரூனா வீட்டுக்கு ஓடினேன். அவுக எல்லாரும் திருச்சியில கலியாணமுனு போய்த்தாக. வேற ஆளுக கிட்டப் போய்க் கேட்க மனசு வரலை...மலைபோல நம்ம முதலாளி வீடு இருக்கேன்னு நினைச்சு,செக்குக்கார ராவுத்தர் வீட்ல காருக்குக் காசு வாங்கிக்கிணு ஓடியாந்தேன். வந்தவனை என்ன ஏதுன்னி கூடக் கேட்காமல் புதுக்கோட்டைக்குப் போடான்னியக. போனேன். அரும்பாடு பட்டுப் பார்த்தேன். வேலை முடியலை. கவலையோட வந்தேன். நீங்ய தாறுமாறாய்ப் பேசிப்பிட்டிங்யன்னு சொல்லிக்கிணு இருக்கேன், தொண்டை அடைச்சுக்கிணு பேச முடியலை. அப்பச் செட்டியார்,

''சரி சரி, இந்தாடா'ன்னு தோல் பெட்டியைத் திறந்து பத்து ரூபாய் நோட்டுக அஞ்சை எடுத்து நீட்டுறாரு. நானு, 'ஆச்சி முப்பத்தஞ்சு ரூபாய் கொடுத்தாக. வீட்லதான் சாப்பிட்டேன். வரிப் பாக்கியைக் கட்டிப் பிட்டேன்! நெல்லளந்த பணமும் வந்திருச்சு'ன்னு சொல்றேன். அவரு,

'சரி சரி, வாங்கிக்யடா. இதை உன் பத்து வழியில சேர்க்க வேண் டாம்டா. கோபத்தில நான் பாட்டுக்குப் பேசிப்பிட்டன்டாங்'கிறாரு.

பணத்தை வாங்கிக்கிணேன். என்னைய இறக்கி விட்டுப்பிட்டு, விருட்டுனு பிளசர்ல போய்த்தாரு.

முத நாள் செட்டியார் புதுக்கோட்டையிலயிருந்து திரும்பினதும் நடந்த சங்கதியப் பிற்பாடு சமையலாள் சொன்னான். வந்து இறங்கினதும் அலமாரியத் திறந்து பிராந்தி போத்தலை எடுத்து வச்சுக்கிணு அவர் பாட்டுக்கு ஊத்தி ஊத்திக் குடிச்சாராம். அப்புறம், 'சம்பளகாரன் போயி வேலை முடியலையினு அவனை வஞ்சு விரட்னனே, இப்ப நான் போயி வேலை முடியலையே, என்னைய எவன்டா வையிரவன்'னி கத்திக்கிணு, போத்தலையும் கிளாசுகளையும் டமார் டமார்னி நிலைக்கண்ணாடியில விட்டெறிஞ்சு நொறுக்குறாராம். நல்ல வேளையா ஆச்சி ஓடியாந்து, கையப் பிடிச்சுக் கூட்டிப் போயிக் கட்டில்ல படுக்கப் போட்ருக்காக. அப்படி நேரங்கள்ள ஆச்சிய வினாக மயித்த யாரும் கிட்டத்தில் அண்ட முடியாது..கோழி கூப்பிட எழுந்திருச்சதும் பிளசர் போட்டுக்கிணு திருப்பத்தூர் வந்திட்டாரு..எதுக்குச் சொல்ல வருறேன், அந்தக் காலத்தில அப்படி முதலாளியக இருந்தாக. சம்பளகாரன் மாடாய் உழைச்சான். பணம் வந்து குமிஞ்சுது. அதுக்காக எல்லா முதலாளிகளையும் அப்படிச் சொல்லிப்பிட முடியுமா? 'சூத்தைக் கத்திரிக்காய்' பழனியப்ப செட்டி யார் போல அட்டத்தரித்திரியம் பிடிச்ச முதலாளியகளும் இருக்கத்தான் செய்யிறாக; அப்படி முதலாளியகதான் ரெம்ப. இருபது முப்பது லெச்சம் தேறும். மனுசன் வேகாத வெயில்ல லொங்கு லொங்குனு ஏழு மைல் நடந்து தெக்கூர் சந்தைக்கிப் போயி, பொழுது சாயிறவரை புளிய மரத்தடி யிலயே காத்துக்கிணு இருந்து, விக்யாமல் கிடக்கிற சூத்தைக் கத்தரிக் காயை வாங்கித் துண்டுல முடிஞ்சுக்கிணு வருவாராம்.அந்த ஆச்சி இருக்கே, அது அவருக்கு மேலே ஒரு படி. எச்சிக் கையால ஈ ஓட்டாத மகராசி. குடலை உருவி உள்ளங்கையில வச்சுக் காட்டினாலும் ஒருவாய் சோறு போடாது. செட்டியார் வாங்கியாற கத்தரிக்காயை அப்படியே அல மாரியில பூட்டி வச்சிருந்து, சமையல்காரன்கிட்ட அப்பப்ப எண்ணி எடுத்துக் கொடுக்குமாம். மிச்சப் பலகாரத்தைத் தெருவில வச்சு வியா பாரம் பண்ணிப் பணம் சேர்க்கும் அந்த ஆச்சி...

''ஆத்திலே வெள்ளம் போனாலும் நாய் நக்கித்தானே குடிக்யணும், சித்தப்பு.''

பூர்வ ஜென்ம வாடையிடா மகனே, பூர்வ ஜென்ம வாடை. இப்படி யெல்லாம் சம்பாரிச்ச பணம் என்ன ஆச்சு? பிள்ளையில்லை. சொந்தக் காரப் பயல் ஒருத்தனைப் பிள்ளை கூட்டினாக. செட்டியார் மண்டையப் போடுறவரை கழுத்தில கொட்டையும் கையில திருவாசகமுமாய் இருந்தான். அப்புறம் காட்டினானே கைவரிசையை! ஊருக்கு ஒரு வைப் பாட்டி. ஒவ்வொருத்திக்கும் ஒரு வங்களா வீடு. எந்நேரமும் தண்ணி! சீட்டு! ரெண்டு வருசத்தில சீக்குச் சிறங்குன்னு வாங்கி நெஞ்சு வத்திச் செத்துப் போனான். சூத்தைக் கத்திரிக்காய் செட்டியார் வீட்டுச் சொத்துக்கெல்லாம் இன்றைக்கு எவனெவன் கையிலயோ சிக்கிக்கிணு முழிக்கிது...

''அது சரிதான். தாசிக்கித் தாய்க் கிழவி சொல்றாப்புல 'விவேக சிந்தாமணி' சொல்லுதுல; 'செம்மையில் அறம் செய்யாதார் திரவியம் சிதற வேண்டி, நம்மையும் கள்ளும் சூதும் நான்முகன் படைத்த வாறே'ன்னு. அந்தப்படியே ஆகிப்போச்சு.''

ஆமாமா. பணம் எவனெவன் கிட்டயோ இருக்கு, தன்மை வேணு முல... அன்னைக்கி மதுரையில பாருங்க, ஒரு நபரைப் பார்த்தேன் - ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாதும்பாக. இந்த நபர் ஊரையும் சொல்லக்கூடாது. ஒரு நபர்னு வச்சுக்கங்க - கப்பலாட்டமாய்ப் பெரிய பிளசர்ல போறான். மெட்ராஸ்ல என்னமோ பிசினெசாம்... அந்தக் காலத்தில எங்க செட்டியாருக்குப் பொம்பளை கூட்டியாந்து விட்டுக் கிணு திரிஞ்ச பயல்! அதையெல்லாம் நாமள் பேச முடியுமா? இப்பத்தான் எல்லாம் தலைகீழாய் மாறிப் போச்சே! மாத்தமுன்னா மாத்தம், தோசைப் புரட்டு மாத்தம்! பிரிட்டீஸ் எம்பிரஸ்ல கொடி இறங்கவே இறங்காது ரான்னாங்ய. இன்றைக்கிப் பார்த்தியகள்ள, மட்ட மல்லாக்க விழுந்து போய்க் கிடக்கு, சிங்கப்பூர் கோட்டையில சப்பான்காரன் கொடி பறக்குது.. மாத்தமுன்னா மாத்தம், தோசைப் புரட்டு மாத்தம்! எல்லாம் பணம், பணம், பணம்தான். பணம் வருதன்னால என்னமும் செய்யலா முனு ஆகிப்போச்சு. பணம் இருந்தால் மட்டும் போதுமா? பணம் இருந்தால் அதுக்குத் தக்கனையாகத் தன்மை வேணும்; வீரம் வேணும்; ஏழை எளியதுகளுக்கு உதவுறாப்புல நாலு காரியம் பண்ணி நல்ல பேர் வாங்கணும். இந்தக் காலத்தில நாய்கிட்டயெல்லாம் பணம் இருக்கு. அமெரிக்காவுல பாருங்க. ஒரு பெரிய கம்பெனி முதலாளி வீட்டு நாய் பேருக்கு நாலு கோடி டாலர் இருக்காம். அதுக்குத் தனியா வங்களா, பிளசர், ஆள்மாகாணமெல்லாம் இருக்குதுங்கிறாக. இருந்து என்ன செய்ய? எச்சியைத்தான் நக்கிக்கிணு திரியும். கையில கல்லைத் தூக்கி னதும் காலைக் கிளப்பிக்கிணு ஓடும். எத்தினி கோடி இருந்தாலும் நாய் நாய்தானே? 'நாய்க் குணம் போகுமா ராசகோபாலா'ன்னி தெரியாமலா கேட்டு வச்சிருக்கான்... நல்லா யோசிச்சுப் பார்த்தால் நாக்கு வழிக்கிறதுக்

காவது ஆகுமா பணம்? வயித்துப் பசிக்கி பணத்தைத் திங்ய முடியுமா? அரிசி பருப்பு இதுகளை வாங்கியாந்து சமையல் பண்ணித்தானே திங்யணும்...?

''ஏன்கிறேன், என்ன பணமுனு ரெம்ப இளப்பமாய்ப் பேசுறீரே, அதுக்காகத்தானே இப்படிக் கடல்ல தண்ணியில வந்து தவதாய்ப் பட்டுக்கிணு திரியிறோம்?''

என்னங்கிறேன், பெரிய பணத்தைக் கண்டுபிட்டீர், பணத்தை, பணம் எத்தினி நாளைக்கி நிலைச்சு நிக்யும்? இன்றைக்கி இருக்கும், நாளைக்கிராது. சகடைக்கால் போல வரும், போகும்... ஆனானப்பட்ட லம்சின் கம்பெனி எங்கே? அறுபத்தாறு ஊர்ல தொழில் நடத்தின நாவன்னா மூனா மார்க்கா எங்கே? தங்கக் கும்பாவுல சோறுதின்ன காதர் பாவா ராவுத்தன் கடை எங்கே? தடமாவது தெரியுமா சொல்லுங் கிறேன்... பணம் வரும், போகும். எங்கெயிருந்து வந்துச்சு பணம்? ஆத்தா வயித்துக்குள்ளயிருந்து கொண்டாந்தியா? என்னென்னமோ எப்படியெப்படியோ செய்து பணம் வந்து குமியுது...

''ஏன் அயித்தான், நாய் வித்த பணம் குலைக்யுமா? பணம், பணம்தானே!''

நாய் வித்த பணம் குலைக்யாதுங்கிறேன். நாய் விக்கிறவனுக்கு நாய்க்குணம் வந்திரும். சரி, எப்படி வந்த பணமோ என்னமோ, உன் பணமுனு ஆகிப்போச்சு. அதை இறுக்கிப் பூட்டிக்கிணு பூதம் காத்தாப்புல காத்து என்ன புண்ணியம்? அக்கிரமச் செலவுக்குப் பணத்தை இறைக் கிறதும் ஒண்ணுதான்; பூட்டி வச்சுக்கிணு பூஞ்சணம் பிடிக்ய விடுறதும் ஒண்ணுதான். நாளைக்கிப் பாடையில கட்டித் தூக்கிப் போகையில் உன் தங்கமும் வயிரமும், உன் வங்களாவும் பிளசரும் கூட வருமா? இடுப்புக் கயித்தையும் அத்துக்கிணுதான் விடுவாங்ய. இல்லை, பெட்டகம் பெட்டகமாய்ப் பணம் இருந்தால் உயிர் நிலைச்சிருமா? முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பல்னு எழுதி வச்சிருக்கான்... ஊக்கமாய் நாலு தொழிலைப் பண்ணிச் சம்பாரி, உண்டு உடுத்து வீடு வாசலைக் கட்டு, பிள்ளை குட்டிகளுக்கு வேணுமுங்கிறதெல்லாம் செய்யி. யாரு வேண்டாமுங்கிறது... இதுகளை வினாக மிஞ்சுற பணத் தில ஏழை எளியதுகளுக்கு உதவுறாப்புல நாலு காரியம் பண்ணி நல்ல பேர் வாங்கணும். ஒரு ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், சத்திரம், தண்ணிப் பந்தல்னு கட்டி வச்சால், அது அணையா விளக்கு, தலைமுறை தலை முறையா நின்னு பேர் சொல்லும். உன் லெச்சமும் கோடியும் நின்னு பேர் சொல்லுமா...? ம்ம்...

எங்க செட்டியார் இருக்காரே, என்னென்ன ஆட்டமெல்லாமோ ஆடிப் பணங்காசை இறைச்சார். அப்படி இருந்தும் பாருங்க, ஆச்சி

யுடைய யோகத்துக்கு பணம் ஊத்துக் கிளம்பிக் கொப்புளிச்சிது - அப்பச்சி பணத்துக்கு மேல பலமடங்கு சேத்து வச்சிட்டுத்தான் போனார். டாம் டும்னு செலவு பண்ணினாலும் தொழில்ல சூரன். கணக்கு வழக்குல எம்ட்டன். வரவு செலவுல புதுக்கோட்டை அம்மன் காசு பிசகுச்சோ, தொலைச்சுப்பிடுவாரு தொலைச்சு... ராசபிளவை வந்துதானே அவருக்கு வயது முடிஞ்சது. வம்பாயிலருந்து ரெண்டு டாக்கட்டரைக் கூட்டியாந்து வச்சுப் பார்த்தாக. ஒண்ணும் முடியலை. அவர் போன நாலா நாள் வெள்ளிக்கிழமை காலையில கோயில் மணி கணகணன்னி அடிக்கிது. ஆச்சி சிவலோகம் புறப்பட்டுட்டாக. சிவகாமி ஆச்சிய இந்த வாசல்ல தூக்கிப் போறாக. அந்த வாசல்லகூடி லெச்சுமி ஆச்சி குடுகுடுன்னி ஓடீட்டாள். அப்புறம் எத்தினி நாளைக்கி வண்டி ஓடும்? கண்மூடிக் கண் திறக்கலை. எட்டுக் கண்ணும் விட்டெரிஞ்ச தீனா மூனா ரூனாத் தீனா மார்க்காவுல கொடி இறங்கீரிச்சு. இறங்கினது இறங்கினதுதான். பழைய படி கொடி ஏத்துறதுக்கு இன்னமும் பாலகன் பிறக்கலை. வேலாயுதம்! ஞான பண்டிதா!...

செட்டியாருக்குப் பிறகு மைனருக ராச்சியம். சுத்தக் கூதறையக... நம்ம சொத்துச் சுதந்திரம் என்ன, வரவு செலவு என்னன்னி அதெல்லாம் ஒண்ணும் தெரியாது. தண்ணி போடுறதும், ரங்கு விளையாறதும், எடு பட்ட சிறுக்கிகளைப் பிளசர்ல தூக்கி வச்சிக்கிணு ஊர் சுத்துறதும்தான் தெரியும். ஒனக்கு நடப்புக் கணக்குக்கும் தவணைக் கணக்கும் வித்தியாசம் தெரியலை. தெரிஞ்சவன் சொன்னால், சம்பளக்காரப் பயல் எனக்குப் புத்தி சொல்றதான்னி நினைக்கிறாய். சரி, ஒன் நோக்கம்போல நடத்திக்ய. நாங்க பழைய ஆளுக பாதிக்கி மேலே விலக்கிக்கணம். ஐந்தொகையின் னால் அஞ்சு லக்கமான்னு கேட்கிற ஆளு நீ. எதிர் வட்டியினால் என்னன்னு தெரியுமா? ஒனக்கு என்னத்துக்கு அம்புட்டுப் பெரிய நெனைப்பு. நீ என்ன ஒங்க அப்பச்சியா. 'அத்தறுதி' முத்துக்கருப்பப் பிள்ளை போட்ட கணக்கானாலும் ஒரே பார்வையில் குத்தங்குறை இருந் தால் எடுத்துச் சொல்ல!... எங்க செட்டியார் பெரிய சூரன். பிள்ளைய களைத்தான் தற்புத்தி பண்ணி விடாமல் போய்த்தாரு...

விடாக்கொண்டன் செட்டி வீடு விழுந்திருச்சி, விழுந்திருச்சுனு என்னமோ காணாததைக் கண்டாப்புல பேசறாகளே. விழாம என்ன செய்யுமுனு கேக்கிறேன். ஆச்சிக்குப் பஞ்ச பாண்டவராட்டம் அஞ்சு பிள்ளையக. அதில ரெண்டு சிறு வயசிலேயே தவறிப்போச்சு, மிச்சம் மூணு பிள்ளையக. பார்க்குறதுக்குத்தான் பெரிய செட்டியாரட்டம் ராச கம்பீரமாய் இருக்கும். மயித்தபடி படுமோசம். ஒரு சல்லி சம்பாரிக்யத் தெரியாது - ஆனாக்கா, அம்புட்டுச் சேக்கும் உண்டு, உங்க அப்பச்சி ஆடாத ஆட்டமா, நாடாத நாட்டமா! ஒரு ரூபாய் சம்பாரிச்சுக் கால்ரூபாய் செலவு பண்ணினார். நீ இருக்கிறதையில கரைக்கிறாய். பொம்பளை

சோக்குப் பண்ண வேணாமுங்கலை. பண்ணு, ரதியாட்டமாய் ஒரு பொம் பளைய இஸ்டாக்காய் எடுத்து வச்சு மாதம் இம்புட்டுன்னு கொடு. ராசா வாட்டம் போய் வா. அதை விட்டுப்பிட்டு கண்ட கண்ட இடத்தில் எச்சிலைய நக்கிக்கிணு திரியிது என்ன பொழப்பு? காரைக்குடிச் சுண்ணாம்புக்காரச் சந்திலயும் மதுரை மொட்டைக் கோபுரக் தெரிவி லயும் போயி, டாப்பர் மாமாப் பயகளோட இளிச்சிக்கினு நிக்கிறியே, நிக்யலாமா..ம்ம்.. சுத்தக் கூதறையக...

காரைக்குடியில ஒரு சோலியினு போயிருந்தேன் - அது நான் விலகிக்கிணு ஊர்ல இருக்கிற சமயம் - முதலாளி வீட்டுக்குப் போய்த்து வரணுமுனு நினைப்பு வந்திருச்சு. தாக்காட்டிப் பார்த்தேன். மனசைத் தகான் பண்ண முடியலை. சரி, போய்த்து வந்திருவமுனு புதுக்கோட்டைக் காரைப் பிடிச்சுப் போனேன்... பிள்ளையகத்தான் அப்படியினால், வீட்டுக்கு வந்த ஆச்சிமார் இருந்த இருப்பைப் பார்த்ததும் பத்திக்கிணு எரிஞ்சிரிச்சு. ஒரு ஆச்சி, வெள்ளைச் சேலையக் கட்டிக்கிணு - நான்கூட முதக்கோசுல பார்த்ததும் யாரோ கைம்பெண்டாட்டியாக்குமுணு நினைச்சுப்பிட்டேன், அது இங்கிலீஸ் படிச்சதாம், இங்கிலீஸ் - செருப்புக் காலோட நடுவீட்ல திரியுது. இன்னொரு ஆச்சி, காரைக்குடிக்கி பிளசர் அனுப்பி பிரியாணிப் பொட்ணம் வாங்கியாந்து மேசைப் பலகாயில வச்சிக்கிணு அட்ணக்கால் போட்டபடி திங்கிது! அம்புட்டுப் பெரிய மாடமாளிகையில வந்தவனை 'வா, இருன்னு' சொல்றதுக்கு நாதி யில்லை... பெரிய செட்டியார் உடகார்ந்து சிம்ம கர்ச்சனை பண்ணுற திண்ணையில குப்பை கூளம் குமிஞ்சு கிடக்குது. வீட்டுக்குள்ள நுழைஞ் சதும் எதிர்க்கத் தொங்கின படம் - அதில செட்டியாரும் ஆச்சியும் இருக் காக. கல்கத்தா வங்காளி ஒருத்தனைத் தரவழைச்சு வரைஞ்சது - எங்கெயோ காணோம். வதிலுக்கு எவனோ ஒரு கழுதைக்கிப் பிறந்த பயலும் உதுத்த சிறுக்கி ஒருத்தியும் கட்டிப் பிடிச்சுக்கிணு இருக்கிறாப்புல படம் போட்ருக்கு - அவ இடுப்புக் குமேல முக்காவாசி பப்ளிக்காய்த் தெரியிது. பாலசுப்ரமணியம் படத்தில் நூலாம்படை மண்டியிருக்கு... வீடு விளங்குமா? விடாக்கண்டன் செட்டி வீடு விழாமல் என்ன செய்யு முனு கேட்கிறேன்...

மீசைக்கார முத்துராமன்னி ஒரு ஓம்பது ரூபாய் நோட்டுப் பயல் வந்து வாய்ச்சான். சுத்தச்சல்லிப் பயல். பம்பைத்தலையவும் கிருதா மீசை யவும், வாத்தா வக்கான்னிப் பேசுறதையும் பாத்தா செட்டிப் பிள்ளையினு சொல்லவே முடியாது. பதினாறு வயசிலயே குடி கூத்தியான்னிப் பழகி மேலெல்லாம் பொத்து வடிஞ்சு சீப்பட்ட பய. மூத்தவருக்கு அவன்தான் மந்திரி பிரதானி. அந்தப் பய பாருங்க, இவரை அங்க இங்கயினு கொண்டுபோய் விழுத்தாட்டி ஒரே கவுப்பாய்க் கவுத்துப்பிட்டான். ரெண்டு பேருக்கும் சதா மேமலைத் தமாசுக் கொட்டகையிலதான்

இருப்பு. எப்பப் பார்த்தாலும் தண்ணி! பொம்பளை! சீட்டு!... பணம் தேள் வையின்னால் அக்கரை டாப்புக்கு எழுதுறதில்ல. அகப்பட்ட இடத்துல வாங்கிக்கிணு நீட்ற கடுதாசியில கையெழுத்தைப் போடுறது. தமாசுக் கொட்டகையிலதான் தோல்பெட்டி நிறையாப் பணமும் அச்சடிச்ச கடுதாசியுமாய் கழுகாட்டம் காத்துக்கிணு இருக்காங்யளே... இவர் இப் படியா, நடுவுள்ளாரு மெட்ராஸ்லயிருந்து நகழுறதேயில்லை. சட்டைக் காரி ஒருத்தியை எடுத்து வச்சிருந்தாராம். எந்த ஊர்ல குதிரைப் பந்தய முன்னாலும் கிளம்பீருவாரு. கூடவே ஒரு வண்டிப் பயக இருப்பான். அம்புட்டுப் பயலுக்கும் இவர் செலவுதான். வீட்டுக் கணக்குப் பிள்ளைக்கி நாள் தவறாம பணம் பணமுனு தந்தி வந்த மணியமாய்த்தான் இருக்கும். கடைசிப் பயைன் லண்டன்ல லாயருக்குப் படிக்கிறமுனு போனவர் அங்கயே இருந்து போனார். அவர் செலவு இவுக ரெண்டு பேருக்கும் மேலே... மைனருக மூணு பேருமாய்க்கூடி ஆடின ஆட்டத்தில் தீனா மூனா ரூனாத் தீனா அஸ்திவாரமே ஆடிப்போச்சு... அப்ப மேமலைத் தமாசுக் கொட்டகைக்கி மலையாளத்திலயிருந்து மூணு குட்டி களோட ஒரு தடிமாட்டுச் சிறுக்கி வந்து சம்பாரிச்சுக்கிணு இருந்தாள். அந்த மூணு உருப்படியிலயும் மூத்தவர் புழக்கம். அவளுக சொல்லிக் கிறது, நாங்க செமீந்தார் வீட்டுக் குடும்பமுனு. அதைக் கேட்டுச் செட்டி மகனுக்குத் தாங்கலை. செமீந்தார் வீட்டுப் பொம்பளைகயோட தொடுப் பாயிருக்காராம் இழவு மகன்! என்னடாயிது, செமீந்தார் வீட்டுப் பொம்பளையிங்கிறாளே, செய்யிறது மேற்படி தொழிலாயிருக்கேன்னி நினைச்சுப் பாத்தாதானே. கேப்பையில நெய் ஒழுகுதுன்னால் கேட்கிற வனுக்குப் புத்தி எங்கே போச்சு. அவளுக கேக்கக் கேக்க ஆயிரமாயிரமாய் வீசி எறிஞ்சார். ரெண்டாவது குட்டிக்கி வயிரத்திலேயே அரசிலை கூடச் செஞ்சு போட்டாராம். அப்புறம், மதுரைக் குசவபாளையத்தில் தெருவில நின்னு சம்பாரிச்சவ ஒருத்தி - நல்லாச் சிவத்தத் தோல்காரியாய் பிடிச் சாந்து, அவளுக்குப் பிராமண வீட்டுப் பேச்சுக அஞ்சாறைப் பாடம் பண்ணி, 'இது புதுத்தெரு வக்கீலய்யர் மகள், ஒங்க மேல காதல் கொண்டி ருக்கு'ன்னி சொல்லிப் பிணைச்சிவிட்டு வெகு பணத்தைக் கறந்துபிட் டாங்ய. அவங்களுக்கென்ன, எவன் பெண்டாட்டி எவன்கூடப் போனா லும் லெவைக்கி அஞ்சு பணமுனு கமிசன் காசும் வெட்டுத்தட்டும் பாக் கிற பயகதானே... வீசுவீசுனு வீசுறுதுக்கு எம்புட்டு நாளைக்கி வெண்ணி லையாப் பணம் கிடைக்கும்? நோட்டு மேல பணம் கொடுக்கிறவுக நிறுத்திப்பிட்டாக. செட்டிய வீட்ல சொத்துச் சுதந்திரத்தை வச்சு வாங்கக் கூச்சம். அப்பத்தான் நாட்டரசன் கோட்டைச் சின்னக்கண்ணு பிள்ளை இருக்காரே மலை முழுங்கி மகாதேவன். அவர்ட்டப் போயி மாட்டினார். கேக்கக் கேக்கப் பணத்தைக் கொடுத்து ஒண்ணு பாக்கியில்லாமல் எழுதி வங்கிப்பிட்டாரு சீனா. தம்பிமார் ரெண்டு பேரும் என்ன ஏதுன்னிக்கூடக் கேட்கிறதில்லை. இவர் இங்கெயிருந்து அனுப்புற தஸ்தாவேசுகளில்

எல்லாம் அட்டியில்லாமக் கையெழுத்துப் போட்ட அனுப்பிப்பிடுறது. அவுகளுக்கு அந்நேரம் செலவுக்கு ஆயிரம் ரெண்டாயிரம் கிடைச்சா போதும்... முத முதல்ல உத்தனூர் வயல், முல்லையாத்துப் பாசனத்தில் ஒரே கோப்பாய் நூத்தி எம்பத்தேழு ஏக்கரா. பிறகு மதுரை மேலமாசி வீதி, கீழமாசி வீதி, வடக்க வெளிவீதி, கீழமாராட்டு வீதியில கடையும் வீடுமாய் நாப்பத்தி மூணு உருப்படி, அப்புறம் புதுக்கோட்டை, திருச்சி, மெட்ராஸ் சொத்துக...

ஊர்ல, இப்படி இருக்குதா, அக்கரை டாப்புச் சங்கதியக் கேளுங்க... சபாநாயகம் பிள்ளையினு ஏழுங்கவாணிப் பய ஒருத்தனுக்குப் பவர் கொடுத்துக் கோலாலம்பூர் கடைக்கி அனுப்பிச்சாக. அவன் வடக் கத்தியான். என்னமோ ஒரு சாதியிம்பாக. அந்த மொல்லமாறிப் பய பாருங்க, சொந்தம் மகன் பெண்டாட்டியை மூத்தவருக்கு சாயிண்டு பண்ணி விட்டுட்டான். அப்புறம் கேக்கணுமா! அவன் வச்சதுதான் சட்டம். வாளியில சுண்ணாம்பைக் குழைச்சிக்கிணு செட்டி மகனுக்குப் போட்டான் ஒரு ராமம்! இதைப் பார்த்துக்கிணு பினாங்கு ஏசண்டு சும்மா இருப்பானா? அவன் அண்டாவுல குழைச்சிக்கிணு நல்லா அரியக்குடி ராமமாய்ப் போட்டுவிட்டான். அப்புறம் ஈப்போ கடையில், மலாக்காக் கடையில, செரம்பான் கடையில, மூவார் கடையில, சத்தியவான் கடையில, அலோர்ஸ்டார் கடையிலயினு அம்புட்டுப் பயலும் கொளு வீட்டாங்ய. கண்மூடிக் கண் திறக்கலை, எட்டுக் கண்ணும் விட்டெரிஞ்ச தீனா மூனா ரூனாத் தீனா மார்க்கா மாயமாய் மறைஞ்சு போச்சு. அன்றைக்கிக் கோலாம்பூரில் தீனா மூனா ரூனாத் தீனா மார்க்கா இருந்து, ஐயாயிரம், பதினாயிரம், அம்பதாயிரம், [2]கித்தாத் தோட்டம், ஈயலம்பம், வீட்டுத் தோப்பு, கன்னிபேச்சு நடந்த கிட்டங்கியில இன்றைக்கிப் பத்து கொடுத்துப் பதினஞ்சு வாங்குற நாள் கிஸ்திக்காரங்கயளாய் ஒரு கடைப்பய பெட்டியடி போட்ருக்கானாம்... மார்க்கா என்ன செய்யும், பாவம்! முதலாளி சரியில்லையே, முதலாளி சரியில்லையே...

எங்க செட்டியாருடைய ஐயா கோலாலம்பூர்ல கடை தொடங் குறப்ப, இங்கின ஒண்ணு, அங்கின ஒண்ணுன்னி வெறும் குடிசையக தானாம். எங்கெ பார்த்தாலும் சகதி. கொசு உபத்திரியம் தாங்கமுடியா தாம். கோலாலம்பூர் கடையில ஒரு படம் தொங்குச்சு பாருங்க, செட்டி யார் மலாய் டாப்புக்கு வந்திருக்கச்சே அரிசித் தவக்கே டின்னர் விருந்து கொடுக்கையில எடுத்தது. எங்க செட்டியார்; சாட்டர் வங்கிப் பெரிய தொரை; உங்கஞ்சங்காய் வங்கி அக்கவுண்டன் தொரை - பெரிய தொரை அன்றைக்கி ஊர்ல இல்லைபோல இருக்கு; ஆயர்மானீஸ் தோட்டத்துத் தமிழன் தொரை - அவர் நம்ம பாசையில பாட்டு கீட்டெல்லாம் படிப் பாரு; தெங்கு மக்டும்; எட்டு - மாடி வீட்டுத் தவ்க்கே மகன் இளையவர் - அவர்தான் அமெரிக்கா லேடியக் கட்டியாந்தவர் - ஆக ஆறு பேரும் குரிச்சி

யில இருக்காக. அரிசித் தவ்க்கே, உப்புத் தவ்க்கே, மயில் சாப்புத் தவ்க்கே, புடைவைக் கடை லீலாராம், லாயர் சித்தம்பலம், நாகூர் மரக்காயர், சங்வீ டாக்கட்டர் இன்னும் மனுசாதி மனுசனெல்லாம் பின்னாடி நிக்கிறாக. அரிசித் தவக்கே இருக்காரே, அவருக்கு அப்பவே நாப்பதம்பது கோடி தேறும். இப்ப, நம்ம செட்டிய வீட்டுப் பணத்தை எல்லாம் வழிச்சள்ளி னாலும் அணைபோட முடியாது. ஆதியில அவர் சீனத்தில் இருந்து கட்ன துணியோட வந்து காவடி கட்டிச் சோறு வித்தவர். பிறகு கோப்பிக் கடை போட்ருக்காரு. ஊர் மளமளப்பான சமயம். என்னமோ தெரியலை, வங்குசாக்கடை வைக்கணுமுனு ஆசை வந்திருச்சு, கையில் கொஞ்சம் பணம் இருக்க, மேக்கொண்டு செட்டிய வீட்டில வாங்கலாமுனு முத முதல்ல தீனா மூனா ரூனாத் தீனா கிட்டடங்கிக்கி வருறார். அப்பக் கோலாலம்பூர்க் கடையில ஏசண்டுக்கு கொண்டு வித்தவர் 'மூத்தரக் குண்டி' ராமன் செட்டியார் - அவர் மகன்தான் செட்டிப் பிள்ளையகள்ள முதமுதல்ல [3]அரியோம்னி டாக்கட்டருக்குப் படிச்சு பாஸ் பண்ணினவர். ஏசண்டு ஊர்ல இல்ல. பெரிய அடுத்தாள் கருப்பணபிள்ளை - மறவ வீட் டாளு - பெட்டியடியில இருக்கார். அப்ப மலாய் டாப்புக்கு வந்திருந்த செட்டியார், மயித்த கடைகளை எல்லாம் கன்ட்ரோல் செய்து செக்கிங் பண்ணிப்பிட்டுக் கடோசி லாஸ்டுல கோலாலம்பூருக்கு வந்தவர் குரிச்சி யல் இருக்காராம். அரிசித் தவ்க்கேக்கி அப்ப இளம் வயசு. தலைமயிர் இரும்புக் கம்பியாட்டம் நட்டமாய் நிக்யுமாம். தவணைக்கிப் பணம் கேட்கிறார். எம்புட்ரா வேணுமுங்கிறார் கருப்பண பிள்ளை. சின்னத் தொகையாச் சொல்றார் அரிசித் தவ்க்கே. தீனா மூனா ரூனாத் தீனாவில் வட்டிக்கி ஆசைப்பட்டுச் சின்னத் தொகைகளோ வெண்ணிலையாவோ கொடுத்து வாங்குற பழக்கமில்லை. இல்லையிடா போடான்னிட்டார். கருப்பண பிள்ளை வீடு வாசல் காணி கரையோட ஊர்ல சேமமாயிருக் கார்! பிள்ளையகதான் எல்லாம் ஆகாவாளியா திரியிதுக... வயசாயிப் போச்சு. நடக்கக் கொள்ள முடியாது. எல்லாம் இருந்த இடத்திலயேதான். இன்னைக்கி கேட்டாலும் அரிசித் தவ்ககே முதமுதல்ல தீனா ரூனாத் தீனாவுல வந்து பசக்குப் பசக்குனு முழிச்சிக்கினு பணம் கேட்டதைக் கதை கதையாய் சொல்வார். அரிசித் தவ்க்கேயும் எப்பவாச்சும் கோலா லம்பூர் கடைக்கி வந்தார்னால் 'கிராணி மாப்பிங் ஊர்ல நல்லாருக் காரா'னு தவறாமல் விசாரிப்பார் - கருப்பண பிள்ளைக்கி முகமெல்லாம் அம்மைத் தழும்பு...

அரிசித் தவ்க்கே அன்றைக்கி நரி முகத்தில் முழிச்சிட்டு வந்திருப் பார் போலயிருக்கு. பேரேட்டைப் புரட்டிக்கினு இருந்த செட்டியார் ஏறிட்டுப் பார்த்தாராம். அரிசித் தவ்க்கேயும் எதிரிச்சிப் பார்த்திருக் கிறார். செட்டியார் என்ன நினைச்சாரோ என்னமோ தெரியலை. 'சீனன் என்னடா கேட்கிறான்'னிட்டார். அரிசித் தவ்க்கேக்கி சீதேவி மாலை

போட வந்திட்டாள். யாரால தடுக்கமுடியும்? - செட்டியார் இருக்காரே, ஆசாமிக்காரன் யாரு, பத்து வரவு என்னன்னி கேட்கிற பழக்கமேயில்லை. கணக்கைப் பார்க்கிறதோட சரி. இன்னொண்ணு, கடோசிவரை அவருக்கு மலாய் பாசை தெரியாது. கருப்பண பிள்ளை விசயத்தைச் சொன்னதும், அரிசித் தவ்க்கே முகத்தைப் பழையபடி ஒரு செக்யண்டு பார்த்துப்பிட்டு, 'துடியான பயலாருக்கானடா, கொடுரா. போயித்துப் போகுது'ன்னிட் டார். அப்ப இருந்து அரிசித் தவ்க்கேக்கி ஒரே ஏத்தம்தான். ஏத்தமுன்னா ஏத்தம் அப்படி அப்படியினு சொல்ல முடியாது. அவர் நாணயத்தைப் பாத்து எந்நேரம் எம்புட்டுக் கேட்டாலும் அட்டியில்லாமக் கொடுத் தாக... வங்குசாக்கடை வச்சார், அரிசி வியாபாரத்தில நுழைஞ்சார் - யாரும் எதுத்து நிக்ய முடியலை. மலாய் டாப்பு பூராவும் ஏகபோமாகிப் போச்சு. கித்தாத் தோட்டம், ஈயலம்பம், வீட்டுத் தோப்புகன்னி ஊர் ஊராய் வளைச்சார். சொந்தத்தில் கப்பல் விட்டார். [4]உங்கத்தில மில்லுக கட்டினார். சங்காயிப் பட்டணத்தில், பதினெட்டுத் தொப்பிக்காரன் தேசங்களிலயும் இப்படி இல்லையிங்கிறாப்புல முப்பத்திரெண்டு மாடி ஓட்டல் விடுதி கட்டினார். இம்புட்டுக்கு ஆகியும் பாருங்க, பழைய விசு வாசம் போகலை. கடோசிவரை எங்க செட்டியாரைத் 'தவ்க்கே புசார்'னு தான் சொல்லுவார்...

செட்டியார் காலமாகிற சமயம், உலாந்தா கவர்மெண்டோட என்னமோ தகராலாகி, கவுணரோட மீட்டங்கி பேசுறதுக்காக வத்தா வியா போயிருந்தாராம். செட்டியார் பிழைக்க மாட்டார்னு கோலாலம் பூருக்குத் தந்தி வந்திருக்கு - அப்ப நான் பினாங்குக்கடையில இருக்கேன் - உடனே அரிசித் தவக்கே கம்பேனியிலிருந்து அர்ச்சண்டு போட்டு வத்தாவியாவுக்குச் சொல்லிப்பிட்டாக. சேதியக் கேட்டதும் அங்கயே உலாந்தா கவர்மெண்டு மாறலாய் பெசல் ஏரப்ளான் பிடிச்சு, அரிசித் தவ்க்கே நம்ம ஊருக்குப் போறார். ஏரப்பளான் கல்கத்தாவிலருந்து புறப் படுது. செட்டியார் காலமாகீட்டார்னு இங்கெ தந்தி வருது. அரிசித் தவ்க்கே மெட்ராஸ் போய் இறங்குறார். அதுக்குள்ள இங்கிருந்து சாட்டர் வங்கி ஆடர் போயி, மெட்ராஸ்ல பிளசர் பிடிச்சு, பூச்செண்டு மாலையக, பட்டு வேட்டி பீதாம்பரம், சந்தனாதி வாசனைத் திரவியங்களெல்லாம் வாங்கி வச்சு ரெடிமேடாய் காத்துக்கிணு இருக்காக.

ஊர்ல போயி இறங்குறார். செட்டியார் உடல் சந்தனக் கட்டையில செகசோதியா எரியிது. மயானத்தில் அரிசித் தவ்க்கே அவுக பாசையில என்னென்னவோ சொல்லிப் புலும்பிக்கிணு அழுத அழுகையைச் சொலி முடியாதாம். பிறகு காரைக்குடி போயிக் [5]கொப்பாத்தாளுக்கும், பழனி போயித் தண்டாயுதபாணிக்கும் செட்டியார் பேரில அபிசேக அர்ச்சனை யக நடத்தித் தான தருமங்களெல்லாம் பண்ணிப்பிட்டுத் திரும்பியிருக் கார்... அப்புறம், தீனா மூனா ரூனாத் தீனா நாலு பக்கமும் ஆட்டம்

மங்கள்; அன்றாடச் சலவை ஆடையும் பரக்கப் பூசிய திருநீறும் நாகரீகச் சின்னங்கள்; நாவடக்கமும் நெளிவு சுளிவும் முன்னேறுவதற்கான வழிதுறைகள்.

கீழ்ப்பாண்டி நாட்டை வளப்படுத்தும் வற்றாத ஆறுகளில் ஒன்றாய், வடக்கு மலேயா கடை வீதிகளுக்கு ஆக்கமளிக்கும் பணக் கிணறுகளில் ஆழ்ந்ததாய் விளங்கிய செட்டித் தெரு - பினாங் ஸ்ட்ரீட் - இதோ!

சூலியா தெருவிலிருந்து புகுந்ததும் இருபுறமும் குட்டிச்சுவர்கள் - குண்டு வீச்சில் இடிந்த கடைகளின் நினைவுச்சின்னங்கள். அப்புறம், தண்டாயுதபாணி கோயில் தேர்வீடு; அரைகுறையாக இடிந்திருக்கிறது. அடுத்தாற்போல், உருக்குலையாமல் நிற்கும் சில லேவாதேவிக் கிட்டங்கிகள், மறுபடியும் குட்டிச் சுவர்கள், மார்க்கெட் தெரு குறுக்கிடுகிறது. வலது முக்கில் பாலக்காட்டு ஐயர் காப்பிக்கடை. கிழக்கே, இடதுபுறம், மேலும் சில லேவாதேவிக் கிட்டங்கிகள், புடவைக் கடைகள். அப்பால் 'கக்கூஸ் வீடு.' இலங்கை ஹோட்டல். தமிழ்த் தொழிலாளர்கள் குவிந்து வசிக்கும் தாழ்ந்த வீடுகள். சீன வியாபாரிகளின் பெரிய மாளிகைகள். வலப்புறத்தில் பலசரக்குக் கடைகள், அச்சகம், பெரீரா ஆஸ்பத்திரி. குண்டுக் காயத்துடன் கூரையின்றி நிற்கும் மலேயா ஹோட்டல். இவற்றிற்கிடையே சர்ச் தெருவும், பிஷப் தெருவும் ஊடறுத்துச் செல்கின்றன.

## இணைப்புரை- கவிஞர் செல்ல கணபதி

வட்டார வழக்குச் சொல் அகராதித் தொகுப்பு பயனுள்ள பதிவேடாகும். சென்னை, நெல்லை, கோவை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களின் வட்டார வழக்குச் சொற்கள் தனித்தன்மை வாய்ந்தவை. வட்டார வழக்குச் சொற்களில் சில, தமிழகத்தில் உள்ள அனைவருக்கும் புரியுமா எனில் தமிழாகவே இருந்தும் பலருக்கும் புரியாமல்கூட இருக்கலாம். ஆகவேதான் வட்டார வழக்குச் சொல் அகராதி பதிப்பிப்பது மிகவும் பயனுள்ள செயலாகும். சிவகங்கை மாவட்டத்தின் கண்டனூரைச் சேர்ந்த அண்ணன் பழனியப்பா சுப்பிரமணியன் அவர்கள் இதற்காக மெனக்கெட்டு நேரம் செலவழித்து செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்கள். மிக நல்ல இலக்கிய நயம் சார்ந்த தமிழ்ச் சொற்கள் இந்த வட்டாரத்தில் பழகி வருவதை இந்த அகராதியைப் புரட்டிப் பார்ப்பவர்கள் கண்டிப்பாக உணரலாம்.

> 'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு'

என்ற குறளில் வள்ளுவர் கையாள்கிற ஊருணி என்னும் சொல், செட்டிநாட்டுப் பகுதியில் மட்டுமே பரவலாகப் பேசப்பட்டுவரும் சொல்லாகும். பல மாவட்டத்துக்காரர்களுக்கு ஊருணி என்ற சொல் புரியாத சொல்லாகவே இருக்கிறது. தமிழ் கற்ற பெருமக்களுக்குப் புரியுமே தவிர சாதரணப் பொதுமக்களுக்கு இந்தச் சொல் பல இடங்களில் பொருள் புரியாத சொல்லாகவே இருக்கிறது. இலக்கிய நயம் வாய்ந்த பல சொற்கள் வட்டார வழக்கு மொழியாகவே இருப்பதைப் பழகு தமிழாக மாற்றுவதற்கு இந்த அகராதி பெரும் துணை புரியும். Counterfoil என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான அடிக்கட்டை என்ற சொல் செட்டிநாட்டில் புழங்குவதை நாம் உணரவேண்டும். இது மொழிபெயர்த்த சொல் அல்ல, வேர்ச்சொல்லாகவே பழகி வந்த சொல். குழந்தையைச் செல்லமாகக் கடிந்துகொள்ளும் போதுகூட அரசளுவான் காளை என்று திட்ட 'அரசு ஆளுவான் இந்தக் காளை' என்று வாழ்த்தே வசவாகப் பழகிவரும் சொல்லையும் புரிந்துகொள்வது பயன்மிக்கதாக அமையும். சுமாரான அழகுடைய பெண்ணை 'உள்ளது போல' இருப்பாள் என்று வெகு நாகரிகமாகப் பேசுகிற பாங்கில் பழகுகிற சொற்களை இந்த அகராதி மூலம் அறிந்து கொள்ள முடியும்.

'புலம் பெயர்தல் - சில தொன்மங்கள்' என்ற கட்டுரையும் 'வல்லம்பர் வரலாறு' என்ற குறிப்பும் தமிழர் வரலாற்றின் ஒரு சிறு பகுதியை வெகு அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

வட்டார வழக்குச் சொற்கள் மிகுதியாகப் பழகும் எழுத்துக்களைப் படைக்கும் படைப்பாளிகளில் ஒருவர் கி.ராஜநாராயணன். கரிசல் காட்டு வட்டார மொழியை இவரைப்போல் பயன்படுத்தியவர்கள் எவருமிலர். சென்னைத் தமிழை சிறப்பாகக் கதைகளில் பழக வைத்தவர்களில் ஜெயகாந்தன். மதுரைத் தமிழை மயக்கும் மொழிகளில் பயிலவிட்டவர் வைரமுத்து. செட்டிநாட்டுத் தமிழை சிறப்பாக எழுதிக் கதைகளைப் படைத்தவர்கள் எஸ்.எஸ். தென்னரசு, கவியரசு கண்ணதாசன், டாக்டர் அய்க்கண் என்று பலர். இப்படி வட்டார வழக்குச் சொற்கள் மிகுதியாகப் பயிலும் வகையில் அந்தந்த வட்டாரங்களில் உள்ளவர்கள் இலக்கியங் களைப் படைத்தால் வட்டார வழக்குச் சொற்கள் வழக்கொழிந்து போகாமல் பழகு தமிழ்ச் சொற்களாகப் பயன்பாட்டில் நிலைத்து நிற்கும்.

வட்டாரம்விட்டு வட்டாரம் சென்று பலரும் சேர்ந்து வாழ்ந்து வருகிற காரணத்தால் வட்டார வழக்குச் சொற்கள் வழக்கொழிந்து போகக்கூடிய சூழ்நிலை தற்போது உருவாகி வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இலக்கிய நயம் வாய்ந்த சில வட்டார வழக்குச் சொற்களை நாம் இழந்துவிடக்கூடிய கட்டாயம் தானாக உருவாகி வருகிறது. இந்த அச்சத்திலிருந்து விடுபட, இதுமாதிரி வட்டார வழக்குச் சொல்லக ராதியைப் பதிவு செய்வதன் மூலம் சொற்களைக் காப்பாற்றுவதோடு ஆய் வாளர்களுக்கும் இந்த அகராதி பெரும் வரமாக அமையும் என்பது திண் ணம். அந்த வகையில் செட்டிநாட்டு வழக்குச் சொல் அகராதியைப் பதிப் பித்திருக்கும் அண்ணன் திரு. பழனியப்பா சுப்பிரமணியன் அவர்களுக்கு தமிழகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இப்படி எல்லா மாவட்டத்திலும் அங்குள்ள தமிழ் ஆர்வலர்கள் வட்டார வழக்குச் சொல் அகராதியைத் தொகுப்பார்களேயானால் அது தமிழுக்குச் செய்யும் பெரும் தொண்டாக அமையும்.

## தமிழின் வட்டார மொழிகள்

*கமில் ஸ்வெலபில்*

1. ஒரு மொழியின் பகுதிகளாகிய வட்டார மொழிகளை விஞ்ஞான முறைப்படி ஆராய வேண்டியது அவசியம். இது தமிழைப் பொறுத்த மட்டில் மிகவும் அவசியம். ஏனென்றால் திராவிட மொழிக் குடும் பம் உலக மொழி ஆராய்ச்சியாளர்களால் நன்றாக அறியப்படாத ஒன்று. தமிழ் மொழி இக்குடும்பத்தில் ஒரு பகுதி. ஆகவேதான் இது மிகவும் அவசியமாகின்றது.

இலக்கியத்தமிழ் வளமான சொற் செல்வம் பெற்றது. இதற்குக் காரணம் என்ன? இலக்கியத்தமிழ், இடைவிடாமல், (1)பிரதேச வழக்கு[1] (2)பேச்சு வழக்கு(3)குறு மொழி(4)குழூஉக் குறி(5)பல்வேறு சாதியாரின் பேச்சு வழக்கு[2] முதலியவற்றை ஏற்றுக்கொண்டே வந்திருக்கிறது. இதுவே இவ்வளத்திற்குக் காரணம்.

வட்டார மொழிகள் ஒருபுறம் கடந்த காலத்தின் சொற்களையும் சொல்லுறுப்புகளையும், நிகழ்காலத்தின் உயிர்த் தத்துவம் நிரம்பிய, ஆக்கம் நிரம்பிய பகுதியாகப் பாதுகாத்து வைத்துள்ளன[3]. அவற்றை ஆராய்வது வரலாற்று முறையில் ஒலி இயலை ஆராய்வதற்குக் கணிசமாக உதவி செய்யும்[4]. மறுபுறம் வட்டார மொழிகளின் வளர்ச்சியில் காணப் படும் பல போக்குகள், வருங்காலத்தில் இலக்கிய மொழியும் செப்பம் செய்யப்பட்ட மொழியும் (Standard Language) எவ்வாறு அபிவிருத்தி அடையும் என்பதைப் பொதுவாகவும், ஒலி மாற்றம், ஒலிப் பொருள் மாற்றம் ஆகியவை எப்படி அபிவிருத்தியடையும் என்பதை விசேடமாகவும் அறிவிக்கும்.

வட்டார மொழிகளை ஆராய்வதினால் உண்டாகும் மற்றும் பல நன்மைகளைப் பற்றிக் கூறவே வேண்டியதில்லை. வட்டார மொழி மாற்றம் என்பது, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சமூகக் கிரியை. ஆகையால் இதை ஆராய்வது ஒரு மொழி பேசுவோரின் சமூக வரலாற்றை அறியவும் துணைபுரியும்.

---

[1] ஒப்பு நோக்குக: அங்கே, அவ்விடத்தில் என்னும் இலக்கிய வழக்குடன். அந்தாலே - வட்டார வழக்கு; இப்பொழுது - இலக்கிய வழக்கு, இந்த வாட்டி - வட்டார வழக்கு.

[2] சாதி வழக்கு: சோறு என்பதைப் பறையர் விளம்பல் என்பது: நெல் என்பதைப் பெரியரும்பி என்பது.

2. பழைய தமிழ் நூல்கள் பலவற்றில் வட்டார மொழி வேறுபாடுகள் குறிக்கப்படுகின்றன; குறிப்பாக, இலக்கியங்களின் உரைகளிலும், இலக்கண உரைகளிலும் இவை எடுத்துக்காட்டப்படுகின்றன. ஒரு பொதுவான, செப்பம் செய்யப்பட்ட தமிழ்மொழி உருவாவதற்கு முன்னர், பெரிதும் வேறுபட்ட பல பேச்சு முறைகள், அதாவது தனித்தனிக் குடிகள் (Tribes) பேசும் மொழிகள் என்று குறிக்கத்தக்கவை நிலவி இருந்தன என்பது இயற்கையானது. ''குடும்பங்கள், குலங்கள்(Clans), இக்குலங்களின் இணைப்புகள் (Confederacies), குடிகள் (Tribes) என்பவை ஒரு இனம் என்பது உருவாவதற்கு முன்பு விளங்கியது போல, மொழி உண்டாவதற்கு முன்பு வட்டார வழக்குகள் நிலவியிருந்தன''. இந்த வட்டார மொழிகள், எப்பொழுது, எப்படி, எந்தப் பொதுவான ஆதிமொழியிலிருந்து உருவாயின என்று ஆராய்வது வேறொரு வகை. இந்தப் பிரச்னைக்கு விடை காண முயல்வது மொழியின் ஆதிவரலாற்றை ஆராய்வதாய் முடியும். ஆனால், நாம் எடுத்துக்கொண்ட விஷயம் வேறு. ஆகையால் நாம் இதை ஆராய வேண்டியதில்லை. மொழியானது இடைவிடாமல் மாறுதலும் வளர்ச்சியும் அடைந்து வருகிறது. இந்த வளர்ச்சியில் இரண்டு முரண்பட்ட போக்குகள் எப்பொழுதும் செயல்படுகின்றன ''வேற்றுமை உண்டாக்கும் போக்கு வேலை செய்துகொண்டே இருக்கிறது; இதனால் சமநிலை உண்டாக்கப்படுகிறது. இந்த இரண்டு போக்குகளின் ஊடாட்டத்தினால் வட்டார மொழிகள், விசேஷ மொழிகள், பொதுமொழிகள் ஆகிய பலதிறப்பட்ட மொழிகள் உண்டாகின்றன''[5]. தமிழ்மொழி வளர்ச்சியின் வரலாற்றுக் காலப் பகுதியைப் பொறுத்தமட்டில் நிலப்பிரபுத்துவத்தின் ஆரம்பம், உச்சம், ஆகிய காலம் முதலோ; தமிழ் நிலத்தின்[6] மொழி அடிப்படையில் காணப்படும் ஒற்றுமை ஒப்புக்

---

[3] டாக்டர் மா. இராசமாணிக்கம் (1956) எழுதியுள்ள தமிழ்மொழிச் செல்வம் என்ற நூலில் காணப்படும் பகுதிகளை ஒப்பிடுக. இவ்வாசிரியர் பழமையான இலக்கியத்தில் வழங்கும் பல சொற்கள் சாதாரண மக்களால் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அன்றாடம் பயன்படுத்துப்பட்டு வருவதை எடுத்துக் காட்டுகிறார். (உ-ம் கூறியாப்பு - திருச்செங்கோடு, இழிஞ்சி - புதுச்சேரி, 'தான்' என்ற சொல் எழுவாயாகப் பயன்படுத்தப்படுவது முதலியவை) - பக்.68 -80

பழைய சொல்லுறுப்பு வளர்ச்சிகளையும் அவற்றின் உபயோகத்தையும் பொறுத்தமட்டில் 'ஈர்' என்னும் முன்னிலை ஒருமை வினை விகுதி இலங்கைப் பகுதியில் பயன்படுத்தப்படுவதை ஒப்பு நோக்குக (ஏனப்பா சொல்லுரீர்). இச்சந்தர்ப்பத்தில் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் 'அஞ்சிறைத்தும்பி'(1958 - பக்.77-80) என்ற நூலைக் குறிப்பிட விரும்புகிறேன். பல கல்வெட்டுகளை ஆராய்ந்த ஆசிரியர் 'கொடு' என்னும் பொதுவான இலக்கிய வழக்கைவிட 'குடு' என்னும் பேச்சு வழக்கிலும் வட்டார வழக்கிலும் உள்ள சொல் பழமையானது என்று நிறுவுகிறார்.

[4] இலங்கைத் தமிழர்கள் 'ன்ற்' என்னும் ஒலித் தொகுதியை 'ண்ட்' என்று ஒலிப்பதைத் தமிழ் நாட்டின் வட்டார மொழிகளில் 'ன்ன்' என்று ஒலிப்பதனுடனும், மேடைப் பேச்சு உச்சரிப்பில் 'ண்ட்ர்' என்னும் ஒலியுடனும் ஒப்பிடுக.

கொள்ளப்படுவது அல்லது தமிழின் முன் மத்தியகாலம் முதலோதான் என்பது தெளிவு. முதல் தமிழ் இலக்கண நூலான 'தொல்காப்பியத்தின்' சிறப்புப் பாயிரம்(இந்தப் பாயிரத்தின் ஆசிரியர் பனம்பாரனார்.)

**வடவேங்கடம் தென்குமரி**

**ஆயிடைத்**

**தமிழ்கூறு நல்லுலகத்து**

**வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்...''** என்று தொடங்கு கிறது.

இந்த இலக்கணம்...வடக்கிலுள்ள வேங்கடத்திற்கும், தெற்கி லுள்ள குமரிக்கும் இடையிலுள்ள தமிழ் பேசும் நல்ல நாட்டில் பேச்சு மொழி, செய்யுள் மொழி ஆசியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

தமிழின் வளர்ச்சியில் ஆதி வரலாற்றுக் காலத்தைப் பொறுத்த மட்டில் இந்த மொழியடிப்படையில் எழுந்த பொதுவான வரையறுக்கப் பட்ட ஒற்றுமை ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று தோன்றுகிறது. தமிழ்[7] என்னும் சொல், பழைய தமிழ் நூல்களிலேயே ''தமிழ் மொழி

---

[5] ''மொழிகளின் வாழ்க்கையில், ஒருபுறம் பிளவு படுத்துவதும், மறுபுறம் பெரும்பெரும் மொழிகளாகச் சேர்ப்பதும் ஆகிய இரண்டு சக்திகள் வேலை செய்வதை, நாம் உணரலாம்'' ஜெபர்ஸன் -Mankind, Nation & Individual பக்கம் 43.

[6] தமிழக எல்லையின் கர்ண பரம்பரைப் பிரச்னை இங்கு கவனிக்கப்பட வேண்டியதில்லை. இது குறித்து 1. எஸ். வையாபுரிப் பிள்ளையின் தமிழ் மொழி,இலக்கிய வரலாறு 2. வி.கனகசபைப் பிள்ளையின் 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் (பக்கம் 10 -30)3. டாக்டர் .மு.வரதராசனின் மொழி வரலாறு(பக். 360) 4. எம்.பி.திருநாரணனின் தமிழகத்தின் பரம்பரை எல்லைகளும் உட்பிரிவுகளும் என்ற கட்டுரை (கே.வி.ரங்கசாமி ஐயங்கார் நினைவுத் தொகுதி - பக்.162) 5. கே. ராமமூர்த்தியின் தமிழ் நாட்டின் மொழிப்பரப்பு(Tamil Culture. தொகுதி1.பிரிவு 2.பக்.163 - 70) 6. டாக்டர் சோமசுந்தர பாரதியாரின் பல கட்டுரைகள் ஆகியவற்றைப் பார்க்க.

[7] தொல். 355-ல் தமிழ் என்னும் சொல் மொழியின் ஒலியியல் பிரச்னையை விளக்குவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. எம்.சீனி. வேங்கடசாமி அவர்கள் இச்சொல்லுக்கு வேறு பல பொருள்கள் இருப்பதாகக் காட்டுகிறார். (பக். 7 -12, அஞ்சிறைத்தும்பி) இலக்கிய வளர்ச்சியின் பழங்காலத்தில் இச்சொல் நிலப்பரப்புக் குறியீடாகவே அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. உ -ம் புறம் 35 - 3 தண் தமிழ்க் கிழவர், புறம் 168 - 18 தமிழகம், சிலம்பு 3 - 37, மணிமேகலை 17 - 62, பதிற்றுப்பத்து 2, சிலம்பு 26 - 161-ல் அருந்தமிழாற்றல் தமிழ் என்னும் சொல்லின் பொருளைப் பழைய இலக்கியங்கள், கல்வெட்டுக்களில் ஆராய்ந்து, இது தமிழ்மொழியைக் குறிக்க எப்பொழுதும், எந்தச் சந்தர்ப்பத்தில் முதல் முதலில் பயன்படுத்தப்பட்டது என்பதை ஆராய்ந்தறிவது சுவையும், பயனும் தரும்.

யைத்'' தமிழ் நிலம் முழுவதற்கும் ஒரு பொது மொழியாகக் குறிக்கும் சொல்லாக உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. தொல் காப்பியச் சான்று (சூத்.880 - 883)களிலிருந்து, இந்நூலாசிரியர் 13 தெளி வான பிரதேச மொழிகளை ஒப்புக் கொள்வதாகக் கருத இடமிருக்கிறது. ( சொற்பொருளைக் குறித்த மட்டில் இந்த மாறுபாடுகள் மிகவும் தெளிவாக இருந்திருக்கக்கூடும்). இவற்றுள் ஒன்றை அவர் செந்தமிழ் (883) என்று குறிப்பிடுகிறார். மற்ற 12-ஐக் குறித்து அவர் பொதுவாக ''செந் தமிழ் நிலத்தை ஒட்டியிருக்கும் 12 நிலங்களின்'' பேச்சு வகைகள் என்று பேசுகிறார். ஆகவே தொல்காப்பிய ஆசிரியரைப் பொறுத்தமட்டில் தமிழ் என்னும் சொல், மொழியைக் குறிக்கவில்லை; ஆனால் ஒரு பிர சேத்தை ஒரு நாட்டைக் குறிக்கிறது எனக் கருத இடமுள்ளது. (செந்தமிழ் நிலத்து 881, செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் 883). இவ்வாறாகத் தொல்காப்பியம் எழுந்த காலத்தில், இன்றைக்குத் தமிழ் நாடென்றும் கேரளா என்றும் வழங்கும் பகுதியில் வாழ்ந்த மக்கள் பல்வேறு மாறு பட்ட பிரதேசவாரியான சிற்றினச் சிறு மொழிகளைப் (Tribal Dialects) பேசி வந்தனர் என்று நாம் முடிவு செய்யலாம். இருந்த போதிலும், இந்த மொழிகளில் ஒன்று, மொழிவாரி, இலக்கிய ரீதித் தலைமையைப் பெற்று வந்தது; தொல்காப்பிய ஆசிரியர் தம் 881-ம் சூத்திரத்தில், இயற்சொல் என்பவை நல்ல, இயற்கையான, நாடறிந்த, செந்தமிழ் நிலத்தில் பொது வாக வழங்கப்பட்ட சொற்கள் என்றும் திசைச் சொல் என்பவை அதாவது வேறு பிரதேசங்களில், நாடுகளில், நிலப்பகுதிகளின் சொற்கள் மற்ற பன்னிரண்டு நிலங்களில் வழங்குபவை என்றும் குறிப்பிடுகிறார்.

அந்த மற்ற பன்னிரண்டு நிலங்களையும் பழந்தமிழ்ப் புலவர்கள் யாராவது குறிப்பிட்டிருக்கிறார்களா? அவர்களில் யாராவது பிரதேச வழக்குகளுக்கு உதாரணம் கொடுத்திருக்கிறார்களா?

3. தொல்காப்பியம் என்னும் மிகவும் பழமையான தமிழ் இலக் கணம் இயற்சொல் (செந்தமிழ் நிலத்தில் பேசப்படும் சொற்கள் திசைச் சொல் (மற்ற12 தமிழ் நிலங்களில் பேசப்படும் சொற்கள்) ஆகியவற்றிற்கு இடையிலுள்ள வேறுபாட்டை மேலே குறித்தபடி எடுத்துக்காட்டுகிறது. இந்தப் பன்னிரு நிலங்களைத் தொல்காப்பிய ஆசிரியர் விவரமாக வருணிக்கவில்லை. வெகு காலத்துக்குப் பிறகு இடைக்கால உரையா சிரியர்களான நச்சினார்க்கினியர், சேனாவரையர் ஆகியவர்கள்தாம், நமக்கு அந்தப் பன்னிரு நிலங்களின் பெயர்களைத் தருகின்றனர். இந்த நிலங்களில் பேசப்பட்ட மொழிகளையும் அவர்கள் கொடுந்தமிழ் என்ற பொதுக் குறியீட்டால் குறிக்கின்றார்கள்.

அவர்கள் குறிப்பிடுவன பின்வரும் நிலங்கள்: தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, பன்றி, கீதம், பூழி, மலை, அருவா, அருவா வடதலை, புனல் அல்லது பொங்கர், வேண் அல்லது ஒளி. இந்தப் பெயர் களில் நாம் ஒருவேளை, சோழர்கள், சேரர்கள், பாண்டியர்கள் ஆகிய

வர்களது ஆதிநிலப்பிரபுத்துவ அரசுகளின் கீழ், சிற்றினச் சமூகங்கள் சிதைந்து, ஆதிச் சிற்றினப் பிரதேசங்கள் ஒன்றுபடுவதற்கு முன்,இந்தியத் தீபகற்பத்தின் தெற்குப் பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ் ஆதிக்குடிகளின் பிரதேசங்களைக் குறித்து வந்த பெயர்களைக் காண முடியும். இந்த உரையாசிரியர்கள், வடபாண்டி நாட்டை, அதாவது மதுரையைச் சுற்றி யிருந்த நாட்டைச் செந்தமிழ் நாடு என்று குறித்தனர். இந்த நாட்டின் வடக் கெல்லை வைகை ஆறு. தெற்கெல்லை மருதயாறு, கிழக்கெல்லை கருவூர், மேற்கெல்லை மருவூர்.

இடைக்கால இலக்கண நூலான, பவணந்தியாரின் நன்னூல் பல வகையான தமிழ் மொழிகளைப் பற்றி 271 - 273 சூத்திரங்களில் குறிப்பிடு கிறது. இந்நூல் இயற்சொல் என்ற பெயரால், தரமான மெரு கேறிய, இலக்கிய இலக்கணச் சொல்லைக் குறிப்பிடுகிறது. திசைச் சொல் என்ற பெயரைப் பிரதேச வழக்குகளுக்கும் (12 நிலத்தும்) வேற்று மொழியி லிருந்து கடன் வாங்கப்பட்ட சொற்களுக்கும் பயன் படுத்துகிறது.

''செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்மொழி நிலத்தினும்
தங்குறிப்பினவே திசைச் சொலென்ப''

சங்கர நமச்சிவாயர் போன்ற உரையாசிரியர்கள் நமக்குப் பன்னிரண்டு கொடுந்தமிழ்ப் பிரதேசங்களின் பெயர்களையும், தமிழ் பேசப்படாத பகுதிகளின் பெயர்களையும் (துளுவம், சீனம், கன்னடம், தெலுங்கம்) கூறுகிறார்கள். அதே நேரத்தில் பிரதேச வழக்குகளுக்கு அவர்கள் மிகவும் சுவையான உதாரணங்கள் தருகிறார்கள்.

*தென்பாண்டி நாட்டார் பசுவைப் பெற்றம் என்பர்*
*தென்பாண்டி நாட்டார் சோற்றைச் சொன்றி என்பர்*
*குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்பர்*
*(ஒப்: மலையாளம் தள்ளையுடன்)*
*குட நாட்டார் தந்தையை அச்சன் என்பர்*
*(ஒப்: மலையாளம். அச்சன்)*
*குட நாட்டார் வஞ்சகரைக் கையர் என்பர் (ஒப்: மலை - கையர்)*
*வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்பர்*
*பூழிநாட்டார் சிறு குளத்தைப் பாழி என்பர்*
*பன்றி நாட்டார் வயலைச் செய் என்பர்*
*அருவா நாட்டார் சிறு குளத்தைக் கேணி என்பர்*
*அருவா வடதலை நாட்டார் புளியமரத்தை எகின் என்பர்*
*சீத நாட்டார் தோழனை எலுவன் என்பர்*
*சீத நாட்டார் தோழியை இகுளை என்பர்*
*மலை நாட்டார் நல்ல நீரை வெள்ளம் என்பர்*
*புனல் நாட்டார் தாயை ஆய் என்பர்*

சான்றோர் செய்யுட்களிலும் உரையாசிரியர்கள் பிரதேச மொழி வழக்குகளைக் கண்டார்கள். உதாரணமாகச் சிலப்பதிகாரத்தில் (5.4) போர்வை, மறைப்பு என்பதைக் குறிப்பிடும் 'புதை' என்னும் சொல்லை அடியார்க்கு நல்லார் மலை நாட்டு வழக்கு என்றும், பனியத்து(4.6) என்பதை குட நாட்டு வழக்கு என்றும், இது போலவே சிறுமியர், தெளித் தல், பணித்தல் ஆகிவற்றைக் குறித்தும் கூறுகிறார்.

நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணியில் சில சொற்களையும், உருவங்களையும் பிரதேச வேறுபாடுகளாகக் காட்டுகிறார். அவை வருமாறு:

63.1 'கரைதல்' திசைச் சொல்லாய்க் கோண்டுபோம் - உரை

324.3 நுன்: திசைச் சொல் - உரை; பதிப்பாசிரியர் இதனைக் குறித்து நுன் என்பது கன்னட பாஷையில் வழங்குகிறது என்பர்.

741.2 ஒள்ளியன்: திசைச்சொல் - உரை - பதிப்பாசிரியர் ஒள்ளியன் - நல்லன். கன்னட மொழியில் நல்லன் என்னும் பொருளில் வழங்கப் படுகிறது என்பர்.

927.3 பாடி - தாயங்கூறி; போகட்டென்றுமாம்; அது மலை நாட் டார் வழக்கு - உரை;

1232.1 இடா: திசைச் சொல் - உரை

1932.4 இனி 'நீம்' என்று ஒரு திசைச்சொல்லுமாம் - உரை நீமே நீர்.

1973.4 குளிர்: திசைச் சொல் - உரை.

பிரதேச மொழி வழக்குகளை ஆராயும் நோக்கத்துடன், பழைய இலக்கியங்களை, குறிப்பாக, இடம், காலம் இவை வரையறை செய்யப் பட்டவையான கல்வெட்டுக்களைக் கூர்ந்து விரிவாக ஆராய வேண்டும்.

பழைய இலக்கியங்களிலிருந்தும், மற்றும் தற்பொழுது இந்தக் கட்டுரையில் குறிக்கவியலாத பல ஆதாரங்களையும், சான்றுகளையும் நாம் ஊன்றிக் கவனிப்போமானால், நாம் சில முடிவுகளுக்கு வரக்கூடும்.

அ) தமிழ்ச் சமூகத்தின் மிக முற்பட்ட வரலாற்றுக் காலத்தில் அதா வது பழந்தமிழ்க் காலம் என்று நாம் குறிப்பிடக்கூடிய காலத்தில், அனேக மாக வரையறுக்கப்பட்ட பல (பதின்மூன்று?) சிறு பிரதேசங்களாகத் தமிழ்ச் சமூகம் பிரிவுண்டு கிடந்தது. இச்சிறு பிரதேசங்களில் வேறு வேறு பிரதேச மொழிகள் பேசப்பட்டன.

ஆ) மதுரையை மையமாகக் கொண்டு, இந்த மிகப் பழங்காலத் திலேயே ஒரு செப்பமான மொழி உருவாகி வந்தது. இந்த மொழி பாண்டிய நாட்டில் பேசப்பட்ட மொழியை அடிப்படையாகக் கொண்டு, மற்றைய பிரதேச வழக்குகளின் அம்சங்களையும் ஓரளவுக்கு உட் கொண்டதாக இருந்தது. இதன் கட்டுத்திட்டங்களை, இடைக்கால

உரையாசிரியர்களின் காலத்திலிருந்தே சங்கம் என்று அழைக்கப்பட்ட, (கூட்டம், அவை, மதச் சங்கம், கல்லூரி என்று பொருள்படும் சொல்லால் குறிக்கப்பட்ட) ஒரு இலக்கிய, கலாசார நிறுவனத்தால் வரையறுக்கப் பட்டன. இது மிகவும் உற்று நோக்கப்பட வேண்டிய செய்தி. ஏனெனில், மதுரையின் செப்பமான இலக்கிய மொழியிலிருந்து தற்காலத் தமிழ் வரை ஒரு நேரடியான அபிவிருத்தி முறையை நாம் படிப்படியே காட்டு தல் கூடும்.

இ) இந்தச் செந்தமிழ் நிலத்தில் பேசப்பட்ட பிரதேச மொழி பிற் காலத்தில் செந்தமிழ் என்று குறிப்பிடப்பட்டது; அதன் அபிவிருத்திக் காலத்தில் அது வாய்ப் பேச்சுக்கள் பெறும் வளர்ச்சியைப் பெற்றது; அது நிலைத்த ''இலக்கிய'' மொழியாகச் செந்தமிழ் என்ற நிலையை அடைந்த பிறகு மக்களால் பேசப்படவில்லை; அது இலக்கியத்திற்கே உரிய மொழியாகிவிட்டது; மக்களின் உண்மையான மொழியாகிய வாய் மொழிப் பிரதேச வழக்குகள் ஒருபுறம் தங்கள் போக்கில் தமிழ் என்னும் ஒரே மொழியாக வளர்ந்து வந்த வளர்ச்சியின் அடிப்படைக்கு இசைய வளர்ந்தே வந்தன; மதுரையின் அரசியல் கலாசார முக்கியத்துவத் தினாலும், இலக்கிய மொழியும் இலக்கியமும் கணிசமாக வளர்ந்த காரணத்தாலும், இலக்கிய மொழி, ஒரே சீராக வளர்ந்து விரிவடைந்தது. இதனால் பிரதேச மொழிகளின் முக்கியத்துவம் குறைவுபட்டது. இருந் தாலும் மக்கள் இந்தப் பிரதேச மொழிகளைப் பேசியே வந்தனர். இந்த வட்டார மொழிச் சொற்கள் இலக்கிய மொழியிலும் இடம் பெறலாயின.

பண்டைத் தமிழ் இலக்கியச் சான்றுகளையும் கிரேக்க ரோமானியர்களின் தமிழகத்தைப் பற்றிய குறிப்புகளையும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சிகளை யும் கொண்டு பண்டைத் தமிழ்ப் பிரதேச வழக்குகளின் பூகோளப் பிரிவை நாம் ஒருவாறு தீர்மானிக்கலாம்.

ஈ) இன்றைய பிரதேச மொழியாராய்ச்சிகள் இன்னும் தொடங்கப் படவே இல்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். 'வின்ஸன்' என்பவர் பிரதேச மொழிகளைப் பற்றித் தமது நூலில் பொதுப் படக் குறிப்பிடுகிறார். அவருடைய மற்றொரு கட்டுரை எனக்குக் கிடைக்கவில்லை.

ஜே.பி.லூயிஸ் என்பவர்'யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்கப் பாதிரிகளால் வெளியிடப்படும் 'மார்னிங் ஸ்டார் என்ற ஆங்கில - தமிழ்ப் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு ''யாழ்ப்பாணத்துப் பண்டாரம், பறையர்கள் இவர்களது மொழியிலுள்ள விசேஷமான சொல் வழக்குகள்'' என்ற ஒரு கட்டுரையை 1890-ஆம் ஆண்டில் 'இந்தியன் ஆண்டிக்வரி' என்ற சஞ்சிகையின் 19-ம் இதழில் (பக்-160) வெளியிட்டிருக்கிறார்.

இதற்கும் முன்னர் திரு.பி. சிங்காரபெலவேந்திரம் பிள்ளையால் 1859-ஆம் வருடம் சென்னையில் வெளியிடப்பட்ட நூல் பல வட்டார மொழி வழக்குகளைக் கூறுகிறது.

இந்திய மொழியாராய்ச்சி சர்வே வெளியீட்டின் 4-ம் பகுதியில் 298-ம் பக்கத்தில் தமிழ் வட்டார மொழிகளும் எருகுலர் அல்லது குறவர், இருளர், கசுவர், கைக்காடி, புர்கந்தி ஆகிய ஜாதியினரின் மொழிகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவை தமிழ் வட்டார மொழிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன.ஆனால் இவற்றில் சில ஐயத்திற்குரியன.

ஜே. பிளாக் என்பவர் தமிழில் ஜாதி வழக்குகளைக் குறித்து பிரஞ்சு மொழியில் எழுதியுள்ள நூலும் எனக்குக் கிடைக்கவில்லை.

பேச்சு மொழியின் 'பாமர உச்சரிப்பு முறை' என்பதைக் குறித்து கார்டன் மாத்யூஸ் என்பவர் 1940-42 ல் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். ஆனால் அவர் தாம் விவரித்துள்ள மொழியின் வகையைக் குறிப்பிட வில்லை. படிப்படியாக முறைப்படி காட்டாததும், அவர் கையாண்டுள்ள ஒலிப்பெயர்ப்பு வகையும் அவருடைய கட்டுரையின் குறைபாடுகள். இருந்த போதிலும், ''சாதாரணப் பேச்சின் மூன்று குறிப்பிடத்தக்க அம்சங் கள்'' குறித்து அவர் தம் கருத்துக்களை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். வட்டார மொழிகளின் மிகவும் குறிப்பிடத்தக்க தன்மைகள், மூக்கொலிச் சேர்க்கையும் சொல்லின் கடைசி மெய்யை விட்டுவிடுதலும், வல்லின வெடிப்பொலிகளுக்குப் பதிலாக மூக்கொலிகளைப் பயன்படுத்தலும் என்பதில் சந்தேகமில்லை...இதுதான் படித்தவர்களின் பேச்சுக்கும் பாமரர்களின் பேச்சுக்கும் இடையிலுள்ள பெரிய வேறுபாடு.''(பக்கம் 996)

இவற்றுள் மூக்கொலி பற்றிய செய்தி தெ.பொ.மீனாட்சி சுந்தரனா ரால் ஒரு கட்டுரையில் ஆராயப்பட்டிருக்கிறது. இந்த மூக்கொலி உயிர்கள் தமிழில் பொருளொலிகளாக ஆகிவிட்டன என்று அவர் முடிவு செய்கிறார்.

இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும் குறித்த ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் நூல் மிக முக்கியமானது. இவரே மற்றொரு முக்கியமான ஆராய்ச்சி நூலும் ''சொற்களும் அவற்றின் சிறப்பும்'' என்ற பெயரில் எழுதியிருக்கிறார். இதில் சில வட்டார மொழிக் குறிப்புகள் காணப்படு கின்றன. அண்மையில் வெளியான ''தமிழ் ஆசான்'' என்னும் பி. ஜோதி முத்து அவர்களின் ஆங்கில நூலில் தமிழ்பேச்சு வழக்குகள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 'மொழி வரலாறு' என்னும் நூலில் டாக்டர் மு. வரதராசன் வட்டார வழக்குகளைக் குறித்து ஓரளவு எழுதியிருக்கிறார்.

5. 1958-ல் நான் தமிழ்நாட்டில் தங்கியிருந்த குறுகிய காலத்தில் எனது தமிழ் நண்பர்கள், தோழர்களின் உதவியால் சில அடிப்படைச் செய்திகளைச் சேகரித்து நான் கீழ்க்கண்ட எட்டுப் பிரதேசமொழிகளை

ஆராய்ந்திருக்கிறேன்; சென்னை, மதுரை, திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், திரிகோணமலை (இலங்கை) - வெவ்வேறு நபர்களைக்கொண்டு 50 பரிசோதனை வாக்கியங்களையும் 5 பகுதிகளையும் பேசச் செய்து இந்தச் செய்தியைச் சேகரம் செய்தேன். இத்துடன் என் நண்பர் எஸ். விஸ்வநாதன் பி.ஏ.(ஹானர்ஸ்) உதவியால் சென்னைத் தமிழ் மக்கள், சென்னையில் வசிக்கும் தமிழ்ப் பிராமணர்கள் இவர்களின் மொழி வழக்குகளையும் குறித்து 25 பகுதிகள் சேகரித்துள்ளேன். இந்தச் செய்திகளையும் இவற்றைக் கொண்ட ஆராய்ச்சியையும் அடிப்படையாக அமைத்து நான் தமிழ்ப் பிரதேச மொழிகளை ஆராய்ந்து உள்ளேன். அதன் முடிவுகள் ''கீழ்க்கலை ஆராய்ச்சி'' என்ற பெயரில் பிராக் கீழ்திசை ஆராய்ச்சி நிலையத்தினரால் பிரசுரிக்கப்படும் சஞ்சிகையில் தொடர்ந்து வெளிவரும்.

6. இந்த முன்னுரைக்குப் பின் நாம், தமிழ்ப் பேச்சில் மூன்று வெவ்வேறு மட்டங்களையும், குறைந்தது மூன்று வகைத் தமிழ்ப் பிரதேச வழக்குகளையும் பிரித்துக் காண வேண்டும் என்று கூறலாம்.

(அ) 1. நன்றாக வரையறுத்துக் காட்டப்படக்கூடிய குறிப்பிடத்தக்க பல பொது அம்சங்களின் அடிப்படையில் தமிழின் வட்டார மொழி எல்லை பிரிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக திருநெல்வேலி வட்டார மொழியையும் காட்டலாம். இவ்வகையில் ஏகதேசமாக வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு எல்லைகளாக நாம் தமிழின் எல்லையைப் பிரிக்கலாம். இந்த முக்கியப் பிரிவுகளுடன் ஐந்தாவது பிரிவாக இலங்கைத் தமிழைச் சேர்த்துக்கொள்ளலாம். இன்னும் பொதுப்படக் கூறவேண்டுமானால் தமிழ் பேசப்படும் நிலத்தை மூன்று வரையறுக்கப்பட்ட பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன: வடக்குப் பிரதேச மொழிகள், தெற்குப் பிரதேச மொழிகள், இலங்கைத் தமிழ் என்பன.

ஒரு பிரதேச மொழியிலேயே நாம் பல்வேறு பண்பாட்டு கல்வி நிலைகளை ஒட்டியும் பிரிவு செய்யவேண்டுவது இயற்கையே,

2. இந்தப் பிரிவுகள் போக, பல்வேறு ஜாதியினர் பேசும் மொழி வகையும் உண்டு. வாழும் பிரதேசத்தைச் சாராமல் அந்தச் சாதியினர் முழுவதும் ஒரேவகையான மொழி பேசுவது உண்டு. உதாரணம்: பல்வேறு பிராமணச் சாதியார் பேசும் மொழிவகை.

3. சில ஜாதியினர் பேசும் தமிழ் மொழிவகை அந்தச் சாதிக்கே உரியதாக இருக்கிறது. அந்த மொழி பண்டைய மொழி என்று கருதப்படுவதற்குரிய தன்மைகள் சிலவற்றைக் காப்பாற்றி வருகிறது. ஒரு வேளை இது சில குடிகளின் (Tribes) மொழி வழக்கத்தின் மிச்சமாக இருக்கலாம்.

இந்த மொழி வகைகளெல்லாம் கலக்கின்றன; ஒன்றையொன்று பாதிக்கின்றன. பாமரர் பேச்சு என்று ஒருவகைப் பேச்சை இவை மொத்தத்தில் உண்டாக்குகின்றன.

(ஆ) இந்த மக்கள் பேச்சுவகையுடனேயே, பண்பட்ட (கற்பவர்களின் அல்லது மேடை) பேச்சும் நிலவி வருகிறது. இது தமிழ் நிலம் முழுவதையும் ஒன்றுபடுத்துகிறது. இது பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது. வானொலியில் கையாளப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட பிரதேச (மதுரை?) மொழியிலிருந்து வளர்க்கப்பட்டது; மற்றப் பிரதேச மொழிகளின் பொதுவான, சிறப்பான அம்சங்களைத் தன்னுள் ஏற்றுக்கொண்டது. இது நெடுங்காலமாக இலக்கிய மொழியாக, செந்தமிழாக வளர்க்கப்பட்டது. இதுவே மேல்வாரியான இலக்கியத் தமிழ் அல்லது மேல்வாரியான பேச்சு மொழி (வரலாற்று ரீதியில் வளர்ந்து வந்துள்ள பண்டைய இலக்கிய மொழியினின்றும் இதை வேறுபடுத்த விரும்பினால்)

(இ) செப்பமான மொழிக்கும் பாமர மொழிக்கும் (பிரதேச மொழி) இடைப்பட்ட பொதுவான மொழி என்று அழைக்கப்படக்கூடிய மற்றொரு மட்டமும் உண்டு. இது பொதுவாக அந்த மொழிப் பிரதேசம் முழுவதற்கும் ஒரே மாதிரியாக இருக்கும். இது இடத்துக்கு இடமும், சாதிக்குச் சாதியும் சிறிது வேறுபடக் கூடும். இது பேச்சு மொழி என்று குறிப்பிடப்படும்.

இந்தப் பேச்சு மட்டத்துக்குப் பொதுவான மாறுதல்கள், எதிர்காலத் தமிழ் எவ்வாறு வளரும், விளங்கும் என்பதைக் காட்டுவனவாக இருக்கலாம்.

இறுதியாக, தமிழ் மொழியின் வரலாற்றுமுறை இலக்கணம் தயாரிப்பதற்கு இந்தப் பிரதேச மொழி ஆராய்ச்சி கணிசமான அளவுக்கு உதவும் என்பதைக் குறிப்பிடலாம். சோவியத், செக்கோஸ்லாவாகிய நாடுகளிலுள்ள இந்தியா பற்றிய நிபுணர்களின் கூட்டு முயற்சியுடன் இந்த வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. இத்துடன் இந்த ஆராய்ச்சி, தெற்குத் திராவிட, திராவிட ஒலியியலின் முற்கால நிலை ஆராய்ச்சிக்கும் துணை புரியக்கூடும்.

- சரஸ்வதி இதழில் வெளியிடப்பட்ட கட்டுரை. இதழ் ஆசிரியர் வ.விஜயபாஸ்கரன்

## அகராதித் தொகுப்பிற்கு பயன்பட்ட நூல்கள்:

*கழக அகராதி*

*க்ரியா தற்காலத் தமிழ் அகராதி*

*நகரத்தார் அறப்பணிகள் (டாக்டர் நா.வள்ளி)*

*இணையற்ற இளையாற்றங்குடி (ஜவஹர் பழநியப்பன்)*

*செட்டிநாடும் செந்தமிழும் (சோமலெ)*

*செட்டிநாட்டில் தமிழ்வழக்கு (நாட்டரசன் கோட்டை சுப. சண்முகம்)*

*புயலிலே ஒரு தோணி (நாவல் - ப.சிங்காரம், தமிழினி பதிப்பகம்)*

*சரஸ்வதி இதழ் - கட்டுரை - கமில் ஸ்வெலபில்*

*சுவர்கள் (நாடகம் - ஜெயந்தன்)*

*வேலங்குடி பெரியநாயகி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பு மலர்.*

*நாஞ்சில் வட்டார வழக்கு - அ.கா. பெருமாள்*

*காலச்சுவடு - உ.வ.சா பற்றிய ஆ.சிவ. கட்டுரை*

*காலச்சுவடு - உணவுச் சிறப்பிதழ்*

### நன்றி

அகராதியின் சில பகுதிகளைப் படித்து அவற்றை செம்மைப்படுத்த உதவிய முனைவர் அர சிங்கார வடிவேலன், முனைவர் நா.வள்ளி.

சரஸ்வதி இதழ் கட்டுரையைப் பயன்படுத்த அனுமதி தந்த விஜய பாஸ்கரன்.

நாடகவரிகளைப் பயன்படுத்த ஒப்புதல் தந்த ஜெயந்தன், முன்னுரை தந்த பெருமாள் முருகன் இணைப்புரை வழங்கிய கவிஞர் செல்ல கணபதி ஆகியோருக்கு.

## தொகுப்பாசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| ஜென் கதைகள் - கவிதைகள் | ரூ 50 00 |
| 2வதுபதிபபு (கலைஞன் பதிபபகம்) | |
| நகரதது மாநதர் நடைச்சித்திரங்கள் | ரூ.40 00 |
| (முத்துப பதிப்பகம. விழுப்புரம்) | |
| சீரிய சிந்தனைகள் | ரூ 28 00 |
| (முத்துப பதிபபகம்.விழுப்புரம்) | |
| வால்ட் விட்மன் ஓர் அறிமுகம் | |
| (சுந்தர நிலையம். சென்னை - 35) | |

சிறுவர் நூல்கள்:

| | |
|---|---|
| அநுராகம் சிறுவர் நீதிக் கதைகள் | ரூ 100.00 |
| (தொகுதி - 10) (அனுராகம்.சென்னை-17) | |
| சிறுவர் சிறுமியர் கதைகள் | ரூ. 30.00 |
| (ராஜராஜன் பதிப்பகம. சென்னை - 17) | |
| பாதாளத்திற்கு ஒரு பயணம் | ரூ.35 00 |
| (ராஜராஜன பதிபபகம். சென்னை - 17) | |

மொழிபெயர்ப்பு நூல்கள்:

| | |
|---|---|
| SUGAR (K. Chinnappa Bharathi) | ரூ 80 00 |
| (Selma Books, Sivagangai) | |
| CONTEMPORARY TAMIL STORIES | ரூ 100 00 |
| (Writers workshop, Calcutta) | |
| THE SIEGE (SU. Samuthiram) (Writers workshop) | ரூ 100 00 |
| TRIO (Short Stories) (Writers workshop) | ரூ 100 00 |




**தமிழினி**

ISBN 81-87641-79-7
9788187641797 Rs. 55

செட்டிநாடு என்பது சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி, திருப்பத்தூர், திருவாடானை பகுதிகளையும் புதுக்கோட்டை மாவட்டத்தின் திருமயம், பொன்னமராவதி, அறந்தாங்கி பகுதிகளையும் உள்ளடக்கியது. இப்பகுதிகளில் எல்லா சாதி, மத மக்களும் கையாளும் வட்டாரச் சொற்கள்தான் இந்த அகராதியில் இடம் பெற்றுள்ளன.